மோசே எழுதின

இரண்டாம் ஆகமம்.

௧. அதிகாரம்.

எகிப்திலே வந்த இஸ்ரவேலுடைய குமாரரின் நாமங்கள்; யாக்கோபுடனே அவரவர் தங்கள் வீட்டாரோடும்கூட வந்தார்கள்.

௨ ரூபன், சிமெயோன், லேவி, யூதா,

௩ இசஷார், செபுலோன், பென்யமீன்,

௪ தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவர்கள்.

௫ *யாக்கோபின் கர்ப்பப்பிறப்பாகிய எல்லா ஆத்துமாக்களும், எழுபது ஆத்துமாக்கள்; யோசேப்போவென்றால், எகிப்தில் இருந்தான். *௧ மோ. ௪௬. ௨௭.

௬ யோசேப்பும் அவனுடைய எல்லாச் சகோதரரும் அந்த எல்லாத் தலைமுறையாரும் மரித்தபிற்பாடோவெனில்,

௭ இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி ஏராளமாகிப் பெருகிப் பலத்துப்போனார்கள், தேசம் அவர்களால் நிறைந்தது.

௮ ¶ யோசேப்பை அறியாத புதிய இராசாவும் எகிப்திலே எழும்பினான்.

௯ அவன் தன் சனத்தோடே சொன்னதாவது: இதோ, இஸ்ரவேல் புத்திரராகிய சனம் நம்மிலும் பெரியதும் பலத்ததுமாய் இருக்கின்றது.

௰ அது பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால் அதுவும் நம்முடைய பகைஞரோடேகூட நமக்கு விரோதமாய் யுத்தம் பண்ணித் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகாதபடிக்கும், நாம் அவர்கள் நிமித்தம் புத்தியுள்ளவர்களாய் இருப்போமாக என்றான்.

௰௧ அப்படியே அவர்களைத் தங்கள் சுமைகளால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள் மேல் பகுதிக்காரரான தலைவரை வைத்தார்கள்; ஏனெனில் படைமுஸ்திப்புகளை வைக்கும் பட்டணங்களாகிய பீத்தோமும், ராமசேசும், பார்வோனுக்குக் கட்டப்பட்டது.

௰௨ ஆனால் எத்தனைக்குச் சனத்தை ஒடுக்கினார்களோ, அத்தனைக்கும் அது பெருகிப் பரம்பிற்று; ஆகையினாலே இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து விதனப்பட்டார்கள்.

௰௩ எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடூரமாய் வேலைகொண்டு,

௰௪ களிமண்ணிலும் செங்கல்லிலும் செய்யும் கடினமான வேலையினாலும், வயலில் செய்யும் எல்லாவித வேலையினாலும், அவர்களைக் கொடூரமாய்ப் பணிசெய்விக்கப் பண்ணும் தங்களுடைய மற்ற எல்லா வேலையினாலும், அவர்களுக்குச் சீவனைக் கசப்பாக்கினார்கள்.

௰௫ ¶ இதுவுமல்லாமல், எகிப்தின் இராசா எபிரேய மருத்துவச்சிகளோடே பேசினான்; அவர்களில் ஒருத்தியின் பேர் சிப்பிறாள்; மற்றவள் பேர் பூகாள்.

௰௬ அவர்களோடே அவன் சொன்னதாவது: பெற ஆசனங்களில் உட்கார்ந்த எபிரேய பெண்சாதிகளுக்கு நீங்கள் மருத்துவம் பார்க்கையில், அது ஆண்பிள்ளையானால் அதைக் கொல்லுங்கள்; அது பெண்பிள்ளையானால் உயிரோடு இருக்கட்டும் என்றான்.

௰௭ ஆனால் மருத்துவச்சிகள் பராபரனுக்குப் பயந்து, எகிப்தின் இராசா தங்களுக்

குச் சொன்னபடி செய்யாமல், பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றினார்கள்.

௰௮ ஆகையால் எகிப்தின் இராசா மருத்துவச்சிகளை அழைப்பித்து, அவர்களோடே நீங்கள் பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றுகிற இந்தக் காரியத்தை ஏன் செய்கிறீர்கள் என்றான்.

௰௯ அப்பொழுது மருத்துவச்சிகள் பார்வோனோடே, எபிரேய பெண்சாதிகள் எகிப்திய பெண்சாதிகளைப்போல இருக்கிறதில்லை; அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்துவச்சி அவர்களண்டைக்கு வாராததற்குமுன்னே அவர்கள் பெற்றுத் தீர்ந்தது என்றார்கள்.

௨௰ இந்நிமித்தம் பராபரன் மருத்துவச்சிகளுக்கு நன்மைசெய்தார்; சனம் பெருகி மிகுதியும் பலத்துப்போயிற்று.

௨௧ சம்பவித்தது ஏதென்றால், மருத்துவச்சிகள் பராபரனுக்குப் பயந்தபடியினாலே, அவர் இவர்களுக்கு வீடுகளை உண்டாக்கினார்.

௨௨ அப்பொழுது பார்வோன் பிறக்கிற ஆண்பிள்ளையை எல்லாம் ஆற்றிலே போட்டுவிட்டு, பெண்பிள்ளையை எல்லாம் உயிரோடே வையுங்கள் என்று தன்னுடைய எல்லாச் சனத்திற்கும் கற்பித்தான்.

௨. அதிகாரம்.

ஆனால் *இலேவி வீட்டாரில் ஒரு மனிதன் போய் இலேவியின் குமாரத்தி ஒருத்தியை விவாகம்பண்ணினான். *௨ மோ. ௬. ௨௰.

௨ அந்தப் பெண்சாதி கர்ப்பம்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளதென்று கண்டு, *அதை மூன்றுமாதம் ஒளித்தாள். *எபி. ௰௧. ௨௩.

௩ அதை அவள் அப்புறம் ஒளிக்கக்கூடாதபொழுதோவெனில், அவள் நாணல் பெட்டியை வாங்கிக்கொண்டு, அதைப் பிசினும் கீலும்பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, ஆற்றோரமாய் நாணலிலே வைத்தாள்.

௪ அதற்கு என்ன சம்பவிக்குமென்று அறிய அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்.

௫ ¶ அப்பொழுது பார்வோனின் குமாரத்தி ஆற்றிலே குளிக்க இறங்கி வந்தாள்; அவளுடைய பணிவிடைக்காரிகள் ஆற்றங்கரையிலே நடந்தார்கள்; அவள் நாணல் நடுவிலே இருக்கிற பெட்டியைக் கண்டு, அதைக் கொண்டுவரத் தன் வேலைக்காரியை அனுப்பினாள்.

௬ அதைத் திறந்து அந்தப் பிள்ளையைக் கண்டாள்; இதோ, பிள்ளை அழுதது; அப்பொழுது அவள் அதின்மேல் இரக்கமாகி, இது எபிரேயரின் பிள்ளைகளில் ஒன்று என்றாள்.

௭ அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியோடே, உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படிக்கு எபிரேய பெண்சாதிகளில் முலைகொடுக்கிற ஒருத்தியை உமக்கு அழைத்துவர நான் போகட்டுமோ என்றாள்.

௮ அப்பொழுது பார்வோனின் குமாரத்தி அவளோடே போவென்றாள்; அந்தப் பெண்பிள்ளை போய்ப் பிள்ளையின் தாயை அழைத்துவந்தாள்.

௯ அவளோடே பார்வோனின் குமாரத்தி, நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்குக் கூலியைக் கொடுப்பேன் என்றாள்; அப்படியே அந்தப் பெண்சாதி பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய் அதை வளர்த்தாள்.

௰ பிள்ளை பெரியதானபொழுது, அவள் அதைப் பார்வோனின் குமாரத்தியண்டையில் கொண்டுபோனாள்; அவளுக்கு அது குமாரனாயிற்று; அவள் அதற்கு மோசே என்று பேரிட்டாள்; ஏனென்றால் அதைத் தண்ணீரினின்று தூக்கினேன் என்றாள்.

௰௧ ¶ *மோசே பெரியவனாய்ப்போன அந்நாள்களில் சம்பவித்ததேதென்றால், அவன் தன் சகோதரரண்டையிலே புறப்

பட்டுப் போய், அவர்கள் பாரமான வேலைகளைப்பார்த்து, தன் சகோதரரில் எபிரேய மனிதனாகிய ஒருவனை அடித்துக்கொண்டிருக்கிற எகிப்திய மனிதனைக் கண்டு, * எபி. ௰௧. ௨௪, ௨௫.

௰௨ இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் திரும்பிப்பார்த்து ஒருவரும் இல்லை என்று கண்டபொழுது, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே அடக்கிப்போட்டான்.

௰௩ மறுநாளிலும் வெளியே போனான்; இதோ எபிரேய மனிதர் இரண்டுபேர் சண்டைபண்ணினார்கள்; அப்பொழுது அநியாயம்செய்கிறவனோடே, நீ உனக்கடுத்தவனை அடிக்கிறது என்னவென்றான்.

௰௪ அதற்கவன் உன்னை எங்கள்மேல் துரைத்தனக்காரனும் நியாயாதிபதியுமாக வைத்தவர் யார்? நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல, என்னையும் கொன்றுபோட இதைச் சொல்லுகிறாயோ என்றான்; அப்பொழுது மோசே பயந்து, அந்தக்காரியம் வெளியானது நிச்சயம் என்றான்.

௰௫ பார்வோன் அந்தக் காரியத்தைக் கேட்டு, மோசேயைக் கொலைசெய்யத் தேடினான்; ஆனால் மோசே பார்வோனுக்கு விலகி ஓடிப்போய், மீதியான் தேசத்திலே தங்கி, ஒரு துரவண்டையிலே உருக்காந்தான்.

௰௬ ¶ மீதியானில் இருக்கிற ஆசாரியனுக்கு ஏழு குமாரத்திகள் இருந்தார்கள்; அவர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்குத் தண்ணீர்காட்டும்படிக்கு அங்கே வந்து மொண்டு, தொட்டிகளை நிரப்பினார்கள்.

௰௭ ஆனால் மேய்ப்பர் வந்து அவர்களைத் துரத்தினார்கள்; அப்பொழுது மோசே எழுந்திருந்து அவர்களைக் காப்பாற்றி, *அவர்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். * ௧ மோ. ௨௯. ௰.

௰௮ அவர்கள் தங்கள் தகப்பனாகிய ரேகுவேலண்டையிலே வந்தபொழுது, அவன் நீங்கள் இன்று இத்தனை சீக்கிரமாய் வந்ததென்ன என்றான்.

௰௯ அதற்கு அவர்கள், எகிப்திய மனிதன் ஒருவன் மேய்ப்பரின் கைகளுக்கு எங்களைத் தப்புவித்து, எங்களுக்கு மொண்டும்கொடுத்து, ஆடுகளுக்குத் தண்ணீரும் காட்டினான் என்றார்கள்.

௨௰ அப்பொழுது அவன் தன் குமாரத்திகளோடே, அவன் எங்கே இருக்கிறான்? அந்த மனிதனை நீங்கள் விட்டுவந்ததென்ன? அவன் அப்பம் சாப்பிடுகிறதற்கு அவனை அழைத்துவாருங்களென்றான்.

௨௧ மோசே அந்த மனிதனிடத்திலே தங்கித்தரிக்கச் சம்மதப்பட்டான்; அவன் மோசேக்குத் தன் குமாரத்தியாகிய சிப்போராளைக் கொடுத்தான்.

௨௨ இவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குக் கேர்சோனென்று பேரிட்டான்; ஏனெனில் அந்நியதேசத்திலே பரதேசியாய் இருக்கிறேன் என்றான்.

௨௩ ¶ சம்பவித்ததேதெனில், அநேக நாள்வட்டத்திலே எகிப்தின் இராசர் செத்துப்போனான்; இஸ்ரவேல் புத்திரரோவென்றால் அடிமைத்தனத்திலிருந்து தவித்துக் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து கூப்பிடுகிற சத்தம் பராபரனண்டைக்கு ஏறிற்று.

௨௪ பராபரன் அவர்கள் தவிப்பைக் கேட்டு தாம் ஆபிரகாமோடும் இசாக்கோடும் யாக்கோபோடும்பண்ணின உடம்படிக்கையைப் பராபரன் நினைவுகூர்ந்தார்.

௨௫ பராபரன் இஸ்ரவேல் புத்திரரை நோக்கிப்பார்த்தார், பராபரன் அவர்களை அறிந்தார்.

௩. அதிகாரம்.

மோசேயோவென்றால், மீதியானில் ஆசாரியனாயிருக்கிற தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்; அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, பராபரனுடைய பர்வதமாகிய ஓரேப்மட்டும் வந்தான்.

௨ அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முள்செடியின் நடுவிலிருந்து உண்டாகிற அக்கினிச்சுவாலையிலே அவனுக்குத் தரிசனையானார்; இதோ முள்செடி அக்கினியாய் எரிந்தாலும் முள்செடி வெந்துபோகாதிருக்கிறதென்று கண்டான்.

௩ அப்பொழுது மோசே, நான் சேரப்போய், அந்த முள்செடி வெந்துபோகாதிருக்கிறதேதென்கிற அந்தப் பெரிய தரிசனையைப் பார்ப்பேனாகவென்றான்.

௪ ஆனால் பார்க்கிறதற்காக அவன் சேர வருகிறதைக் கர்த்தர் கண்டு, பராபரன் முள்செடியின் நடுவிலிருந்து அவனுக்கு நேராகக் கூப்பிட்டு, மோசேயே, மோசேயே, என்றார்; அவன் இதோ, அடியேன் என்றான்.

௫ அப்பொழுது அவர், இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களிலிருக்கிற உன் பாதரட்சைகளைக் கழற்று; ஏனெனில் நீ நிற்கிற ஸ்தலம் பரிசுத்த பூமியாயிருக்கிறதென்று சொல்லி,

௬ பின்னையும் *நாம் ஆபிரகாமுடைய பராபரனும் இசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாகிய உன் பிதாக்களுடைய பராபரனென்றார்; அப்பொழுது மோசே தன் முகத்தை மூடிக்கொண்டான்; ஏனென்றால் பராபரனை நோக்கிப்பார்க்கப் பயந்தான். *மாற். ௰௨. ௨௬, ௨௭.

௭ ¶ கர்த்தர் சொன்னதாவது: நாம் எகிப்திலிருக்கிற நமது சனத்தின் உபத்திரவத்தைப் பார்க்கவே பார்த்து, தங்கள் ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் கூப்பிடுகிற கூப்பிடுதலைக் கேட்டோம்; ஏனென்றால் அவர்கள் வேதனைகளை அறிந்தோம்.

௮ ஆகையால் அவர்களை எகிப்தியரின் கைக்கு நீங்கலாக்கிவிடவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து கானானியரும், எத்தியரும், எமோரியரும், பெரிசியரும், எவியரும், எபூசியரும் இருக்கிறஇடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்திற்கு ஏறிவரப்பண்ணவும் இறங்கினோம்.

௯ இப்பொழுதும் இதோ இஸ்ரவேல் புத்திரரின் கூப்பிடுதல் நம்மண்டைக்கு வந்தது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் பார்த்தோம்.

௰ இப்பொழுதும் நீ இஸ்ரவேல் புத்திரராகிய நமது சனத்தை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவரும்படிக்கு உன்னைப் பார்வோனண்டைக்கு அனுப்புவோம் வாவென்றார்.

௰௧ ¶ அப்பொழுது மோசே பராபரனோடே, பார்வோனண்டைக்குப் போகிறதற்கும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவருகிறதற்கும், நான் எம்மாத்திரமென்றான்.

௰௨ அதற்கவர், நாம் உன்னுடனே இருப்போம்; நீ சனத்தை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவந்தபொழுது, இந்தப் பர்வதத்திலே பராபரனுக்கு ஆராதனைசெய்வீர்களென்பது, நாம் உன்னை அனுப்பினதற்கு அடையாளமாய் இருக்குமென்றார்.

௰௩ ¶ அப்பொழுது மோசே பராபரனோடே சொன்னதாவது: இதோ நான் இஸ்ரவேல் புத்திரரண்டைக்கு வந்து, உங்கள் பிதாக்களுடைய பராபரன் என்னை உங்களண்டைக்கு அனுப்பினாரென்று அவர்களுக்குச் சொல்லும்பொழுது, அவர்கள், அவருடைய நாமம் என்னவென்று என்னைக் கேட்டால், அவர்களோடே என்ன சொல்லுவேன் என்றான்.

௰௪ ¶ அப்பொழுது பராபரன், இருக்கிறவராக இருப்போமென்று மோசேயுடனே சொல்லி, இருப்போம் என்பவர் என்னை உங்களண்டைக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்.

௰௫ அப்புறம் பராபரன் மோசேயோடே சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திரருடனே, ஆபிரகாமுடைய பராபரனும் இசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர் என்னை உங்களண்

டைக்கு அனுப்பினார் என்பாயாக, இது என்றைக்கும் நம்முடைய நாமமும், இது தலைமுறை தலைமுறையாக நம்முடைய பேர்ப் பிரஸ்தாபமுமாயிருக்கும்.

௰௬ நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக் கூட்டி, அவர்களோடே சொல்லவேண்டியதாவது: ஆபிரகாம், இசாக்கு, யாக்கோபு என்றவர்களுடைய பராபரனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனையாகி, உங்களையும் எகிப்திலே உங்களுக்குச் செய்யப்பட்டதையும் விசாரிக்கவே விசாரித்தோமென்றும்,

௰௭ நாம் உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து ஏறிவரப்பண்ணி, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய, கானானியர், ஏத்தியர், ஏமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியருடைய தேசத்திற்குக் கொண்டுபோவோமென்றும் சொன்னோமென்றார் என்று சொல்லு.

௰௮ அவர்கள் உன் சத்தத்திற்குக் கேள்வி கொடுப்பார்கள்; அப்பொழுது நீயும் இஸ்ரவேலின் மூப்பரும் எகிப்தின் இராசாவண்டைக்குப் போய், அவனோடே, எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் எங்களைச் சந்தித்தார்; இப்பொழுதும் நாங்கள் மூன்று நாள்பயணம் வனாந்தரத்திலே போய், எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிடட்டும் என்பீர்களாக.

௰௯ ஆனால் எகிப்தின் இராசா வல்லமையான கையைக் கண்டாலும், உங்களைப் போகவிடானென்று நாம் அறிவோம்.

௨௰ ஆகையால் நாம் நம்முடைய கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நாம் செய்யும் நம்முடைய சகலவித அதிசயங்களாலும் அதை அடிப்போம்; அதற்குப்பிறகு உங்களை அனுப்பிவிடுவான்.

௨௧ அப்பொழுது நாம் இந்தச் சனத்திற்கு எகிப்தியரின் கண்களுக்குமுன்பாகத் தயவுகிடைக்கப்பண்ணுவதினால் சம்பவிப்பதேதெனில், நீங்கள் போகிறபொழுது வெறுமையாய்ப் போகப்போகிறதில்லை.

௨௨ ஒவ்வொரு ஸ்திரி, தன்தன் அயலகத்தாள் கையிலும் தன்தன் வீட்டுக்காரிகள் கையிலும் வெள்ளி உடைமைகளையும் பொன் உடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டு வாங்குவாள்; அவைகளை உங்கள் குமாரர்மேலும் உங்கள் குமாரத்திகள்மேலும் வைத்து, * எகிப்தியரைக் கொள்ளையிட்டுப் போவீர்களென்றார். * ௨ மோ. ௰௧. ௨: ௰௨. ௩௫, ௩௬.

௪. அதிகாரம்.

அப்பொழுது மோசே பிரதியுத்தரமாக, ஆனால் இதோ அவர்கள் என்னை நம்பாமலும் என் சத்தத்திற்குக் கேள்விகொடாமலும் போவார்கள்; ஏனெனில் கர்த்தர் உனக்குத் தரிசனையானதில்லையென்று சொல்லுவார்கள் என்றான்.

௨ அப்பொழுது கர்த்தர் அவனுடனே, உன் கையிலிருக்கிறது என்னவென்றார்; ஒரு கோலென்றான்.

௩ அதைத் தரையிலே போடென்றார்; அவன் அதைத் தரையிலே போட்டபொழுது, அது சர்ப்பமாயிற்று; அதற்கு மோசே விலகி ஓடினான்.

௪ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே உன் கையை நீட்டி அதின் வாலைப்பிடி என்றார்; அவன் தன் கையை நீட்டி அதைப் பிடிக்கிறபொழுது, அது அவன் கையிலே கோலாயிற்று.

௫ இது ஆபிரகாமுடைய பராபரனும் இசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிற தங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர், உனக்குத் தரிசனையானதை அவர்கள் நம்புகிறதற்கான அடையாளமென்றார்.

௬ ¶ பின்னையும் கர்த்தர் அவனுக்கு உன் கையை உன் மடியிலே போடென்றார்; அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே வாங்குகிறபொழுது, இதோ அவன் கை உறைந்த மழையைப் போல வெண்குஷ்டம் பிடித்திருந்தது.

௭ பிறகு அவர் உன் கையைத் திரும்ப உன் மடியிலே போடென்றார், அவன் தன் கையைத் திரும்பத் தன் மடியிலே போட்டு, தன் மடியிலிருந்து அதை வெளியே வாங்குகிறபொழுது, இதோ அது திரும்ப அவனுடைய மற்றச் சதையைப்போல ஆயிற்று.

௮ அப்பொழுது அவர் சொன்னதாவது: அவர்கள் முந்தின அடையாளத்தைக் கண்டு, உன்னை விசுவாசியாமலும் உனக்குக் கேள்விகொடாமலும்போனால், பிந்தின அடையாளத்தைக் கண்டு விசுவாசிப்பார்கள்.

௯ அவர்கள் இவ்விரண்டு அடையாளங்களையும் விசுவாசியாமலும் உன் சத்தத்திற்குக் கேள்விகொடாமலும் போனார்களேயாகில், அப்பொழுது நீ நதியின் தண்ணீரை மொண்டு, பூமியில் ஊற்றுவாயாக; அப்பொழுது நீ நதியிலே மொண்ட தண்ணீர் பூமியிலே இரத்தமாமென்றார்.

௰ ¶ மோசேயோவென்றால் கர்த்தரோடே சொன்னதாவது: ஆ, ஆண்டவரே, முன்னும் எப்பொழுதும், தேவரீர் உம்முடைய அடியாரோடே பேசினது முதற்கொண்டும் நான் பேச்சுக்காரன் அல்ல, ஏனெனில் நான் திக்குவாயனும் திக்குநாவுக்காரனுமானவன் என்றான்.

௰௧ ¶ அப்பொழுது கர்த்தர் அவனோடே சொன்னதாவது: மனிதனுக்கு வாயைக் கொடுத்தவர் யார்? அல்லவென்று ஊமையனையும் அல்லது செவிடனையும் அல்லது பார்வையுள்ளவனையும் அல்லது குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நாமல்லவோ?

௰௨ இப்பொழுதும் நீ போ; நாம் உன் வாயோடே இருந்து, *நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்போமென்றார். *மத். ௰. ௰௯, ௨௰.

௰௩ ¶ அவனோவென்றால், ஆ, ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்புமென்றான்.

௰௪ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயின் மேல் கோபமூண்டவராகிச் சொன்னதாவது: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவோ? அவன் நன்றாய்ப் பேசுகிறவனென்று அறிவோம்; இதோ அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு வந்து உன்னைக் கண்டு, தன் இருதயத்திலே மகிழ்ச்சியாயிருப்பான்.

௰௫ * நீ அவனோடே பேசி, வார்த்தைகளை அவன் வாயில்போடுவாயாக; நாமோவென்றால் உன் வாயோடும் அவன் வாயோடுமிருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்குப் போதிப்போம். *௨ மோ. ௭. ௨.

௰௬ அவன் உனக்குப் பதிலாகச் சனத்தோடே பேசுவான்; இப்படியே அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய்.

௰௭ நீ அடையாளங்களைச்செய்யும் இந்தக் கோலை உன்கையில்பிடித்துக்கொண்டு போ என்றார்.

௰௮ ¶ மோசே போய்த் திரும்ப, தன் மாமனாகிய எத்திரோவண்டைக்கு வந்து, நான் புறப்பட்டு எகிப்திலிருக்கிற என் சகோதரரண்டைக்குத் திரும்பிப்போய், அவர்கள் இன்னும் உயிரோடே இருக்கிறார்களோ என்று பார்க்கட்டுமே என்று அவனோடே சொன்னான்; அப்பொழுது எத்திரோ மோசேக்குச் சமாதானமாய்ப் போ என்றான்.

௰௯ பின்னையும் கர்த்தர் மீதியானிலே மோசேயோடே, எகிப்திற்குத் திரும்பிப்போ; ஏனெனில் உன் பிராணனை வாங்கத் தேடின மனிதர் எல்லாரும் செத்துப்போனார்கள் என்றார்.

௨௰ அப்பொழுது மோசே தன் பெண்சாதியையும் தன் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களைக் கழுதையின்மேல் ஏற்றி, எகிப்துதேசத்திற்குத் திரும்பினான்; மோசே பராபரனுடைய கோலைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு போனான்.

௨௰௧ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ எகிப்திலே திரும்பி வந்து சேர்ந்த

பொழுது, நாம் உன் கையிலே கொடுத்த எல்லா அற்புதங்களையும் பார்வோனுக்கு முன்பாகச் செய்யப்பார்; நாமோவெனில் அவன் இருதயத்தைச் சனத்தைவிடாதபடிக்குக் கெட்டிப்படுத்துவோம்.

௨௨ அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில் இஸ்ரவேல் நம்முடைய முதல் பேறான குமாரன்.

௨௩ நம்முடைய குமாரனை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடுவென்று நாம் உன்னோடே சொல்லியும், நீ அவனை விடமாட்டோம் என்றாய்; இதோ நாம் உன் முதல் பேறான உன் குமாரனைக் கொன்றுபோடுகிறோமென்று உரைத்தாரென்று சொல்லுவாயாக என்றார்.

௨௪ ¶ வழியில் தங்குமிடத்திலே சம்பவித்ததேதென்றால் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லவேண்டுமென்று இருந்தார்.

௨௫ அப்பொழுது சிப்போராள், *கருக்கான கல்லை எடுத்து, தன் பிள்ளையின் நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்குமுன்பாகப் போட்டு, நீர் எனக்கு இரத்தப்பழிக்கான மாப்பிள்ளையாமே என்றாள்.

*யோசு. ௫. ௨.

௨௬ அப்பொழுது அவனைவிட்டு விலகினார்; அவள் சுன்னத்துகளினிமித்தம் அப்பொழுது அவனை இரத்தப்பழிக்கான மாப்பிள்ளை என்றாள்.

௨௭ ¶ கர்த்தர் ஆரோனுடனே, நீ வனாந்தரத்திலே மோசேக்கு எதிர்கொண்டு போவென்றார்; அவன் போய்ப் பராபரனுடைய பர்வதத்திலே அவனைச் சந்தித்து, அவனை முத்தம்செய்தான்.

௨௮ அப்பொழுது மோசே தன்னை அனுப்பின கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் அவர் தனக்குக் கற்பித்த எல்லா அடையாளங்களையும் ஆரோனுக்கு அறிவித்தான்.

௨௯ ¶ மோசேயும் ஆரோனும் போய் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரை எல்லாம் கூட்டினார்கள்.

௩௰ ஆரோனோவென்றால் கர்த்தர் மோசேயோடே பேசின எல்லா வார்த்தைகளையும் சொல்லி, சனத்தின் கண்களுக்குமுன்பாக அந்த அடையாளங்களைச் செய்தான்.

௩௧ சனம் விசுவாசித்தது; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விசாரித்தாரென்றும் தங்கள் சிறுமையைப் பார்த்தார் என்றும் அவர்கள் கேட்டபொழுது, குனிந்து பணிந்துகொண்டார்கள்.

௫. அதிகாரம்.

பிற்பாடு மோசேயும் ஆரோனும் உட்பிரவேசித்துப் பார்வோனோடே, நமக்கு வனாந்தரத்திலே பண்டிகை ஆசரிக்கும்படிக்கு, நம்முடைய சனத்தைப் போகவிடுமென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறாரென்றார்கள்.

௨ பார்வோனோவென்றால் நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் சத்தத்தைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலை விடுவதுமில்லை என்றான்.

௩ அப்பொழுது அவர்கள் எபிரேயருடைய பராபரன் எங்களைச் சந்தித்தார்; அவர் பெருவாரிக் காய்ச்சலோடும் அல்லவென்று பட்டயத்தோடும் எங்களுக்கு நேரிடாதபடிக்கு நாங்கள் மூன்று நாள் பயணம் வனாந்தரத்திலே போய், எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிட்டுமே என்றார்கள்.

௪ ஆனால் எகிப்தின் இராசா அவர்களுடனே, மோசே ஆரோனென்றவர்களே, நீங்கள் சனத்தைத் தங்கள் வேலைகளைவிட்டுக் கலையப்பண்ணுகிறதென்ன? உங்கள் சுமைகளைச் சுமக்கப் போங்களென்றான்.

௫ பின்னையும் பார்வோன் இதோ, தேசத்தின் சனம் அப்போதே திரட்சியாயிருக்க. அவர்களை நீங்கள் தங்கள் சுமைகளைவிட்டு ஓயப்பண்ணுவீர்களோ என்று சொல்லி,

௬ ¶ அந்நாளிலே பார்வோன் சனத்தின் விசாரிப்புக்காரருக்கும் அதின் தலைவருக்கும் கற்பித்துச் சொன்னதாவது:

௭ நீங்கள் இனிச் சனத்திற்கு நேற்றைப்போலவும், முந்துநேற்றைப்போலவும், செங்கல் வேலைக்கு வைக்கோல் கொடுக்க வேண்டாம்; அவர்கள்தாமே போய்த் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கக்கடவர்கள்.

௮ ஆனால் அவர்கள் நேற்றும் முந்துநேற்றும் செய்த செங்கல்களுடைய இலக்கத்தின் திட்டத்தைத் தானே அவர்கள்மேலே சுமத்துவீர்களாக; அதிலே நீங்கள் ஒன்றும் குறைக்கவேண்டாம்; ஏனெனில் அவர்கள் சும்மா இருக்கிறார்கள்; ஆகையால் போவோம் எங்கள் பராபரனுக்குப் பலியிடுவோம் என்று கூப்பிடுகிறார்கள்.

௯ அந்த மனிதர்கள் பொய் வார்த்தைகளைக் கவனிக்காமல் தங்கள் பணிவிடை வேலைகளில் முயற்சியாயிருக்கும்படிக்கு, அது அவர்கள்மேல் அதிகரிக்கப்படக்கடவதென்றான்.

௰ ¶ அப்பொழுது சனத்தின் ஆளோட்டிகளும் அதின் தலைவரும் புறப்பட்டுச் சனத்தோடே சொன்னதாவது: நாம் உங்களுக்கு வைக்கோல் கொடுப்பதில்லை என்றும்,

௰௧ நீங்களே போய் உங்களுக்கு அகப்படுகிற இடங்களில் வைக்கோலைச் சம்பாதியுங்கள்; உங்கள் பணிவிடை வேலையிலோவென்றால், ஒன்றும் குறைக்கப்படுவதில்லை என்றும் பார்வோன் சொன்னார் என்றார்கள்.

௰௨ அப்பொழுது வைக்கோலுக்குப் பதிலாகத் தாளடிகளைச் சேர்க்கும்படிக்குச் சனம் எகிப்துதேசமெங்கும் சிதறிப்போயிற்று.

௰௩ ஆளோட்டிகளோவென்றால் துரிதம் பண்ணி, வைக்கோலிருந்த நாளில் செய்ததற்குச் சரியாக உங்கள் பங்கிடுவேலைகளை ஒவ்வொருநாளிலே முடித்துத் தீருங்கள் என்றார்கள்.

௰௪ பிற்பாடு நீங்கள் முந்தியதுபோல, செங்கல்லில் உங்கள் திட்டத்தை நேற்றும் இன்றும் முடிக்காதே போனதென்ன என்று பார்வோனுடைய ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரர்மேலே வைத்த இவர்களுடைய தலைவர்களைக் கேட்டு அடித்தார்கள்.

௰௫ ¶ ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் உள்பிரவேசித்துப் பார்வோனை நோக்கிக் கூப்பிட்டு, உமதடியாருக்கு நீர் இப்படிச் செய்வானேன்?

௰௬ உமதடியாருக்கு வைக்கோல் கொடுக்கப்படாவிட்டாலும், செங்கல்லை அறுத்துத் தீருங்களென்று எங்களுக்குச் சொல்லுகிறார்கள்; இதோ உம்முடைய சனத்தின் மேலே குற்றம் இருக்கும்போது, உமதடியார் அடிக்கப்படுகிறார்கள் என்றார்கள்.

௰௭ அதற்கவன் சொன்னதாவது: நீங்கள் சும்மா இருக்கிறீர்கள்; சும்மாதான் இருக்கிறீர்கள்; ஆகையினாலே போவோம் கர்த்தருக்குப் பலியிடுவோம் என்கிறீர்கள்.

௰௮ இப்பொழுதும் போங்கள், பணிவிடைசெய்யுங்கள்; உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படுவதில்லை; செங்கல்லுகளுடைய இலக்கத்தின் திட்டத்தையோவெனில் நீங்கள் ஒப்புவிக்கவேண்டுமென்றான்.

௰௯ நீங்கள் ஒவ்வொருநாளிலே அறுத்துத் தீரவேண்டிய செங்கல்லுகளிலே ஒன்றும் குறைக்காதிருங்களென்னப்பட்டதினாலே, தங்களுக்கு வந்த இக்கட்டை இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் கண்டு,

௨௰ ¶ பார்வோனைவிட்டுப் புறப்படுகையில், தங்களுக்கு எதிரே நிற்கிற மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்ப்பட்டு,

௨௰௧ அவர்களுடனே, நீங்கள் பார்வோனின் கண்களுக்குமுன்பாகவும் அவருடைய ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் எங்கள் வாசனையை நாறப்பண்ணி, எங்களைக் கொல்ல அவர்கள் கையிலே பட்டயத்தைக் கொடுத்ததினிமித்தம் கர்த்

தர் உங்களை நோக்கிப்பார்த்து, நியாயம் தீர்க்கக்கடவர் என்றார்கள்.

௨௨ ¶ அப்பொழுது மோசே கர்த்தரண்டைக்குத் திரும்பி, ஆண்டவரே, இந்தச் சனத்திற்கு ஏன் தீங்குவரப்பண்ணினீர்? நீர் என்னை அனுப்பினதேது?

௨௩ நான் உம்முடைய நாமத்திலே பேசப் பார்வோனண்டையில் உட்பிரவேசித்தது முதல்கொண்டுதானே இந்தச் சனத்தை உபத்திரவப்படுத்தினான்; நீரோவெனில் உம்முடைய சனத்தை விடுவித்ததே இல்லை என்றான்.

௬. அதிகாரம்.

அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, நாம் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய், அதேதென்றால் பலத்த கையைக் கண்டு அவர்களைப் போகவிட்டு, பலத்த கையைக் கண்டு அவர்களைத் தன் தேசத்திலிருந்து துரத்திவிடுவானென்றார்.

௨ ¶ பின்னையும் பராபரன் மோசேயுடனே பேசி அவனோடே சொன்னதாவது: நாம் கர்த்தர்.

௩ நாம் சர்வத்திற்கும் வல்ல பராபரனாய், ஆபிரகாமுக்கும் இசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனையானோம்; ஆனால் கர்த்தரென்ற நம்முடைய நாமத்தினாலே நாம் அவர்களுக்கு அறியப்பட்டதில்லை.

௪ அவர்கள் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிற கானான்தேசத்தை அவர்களுக்குக் கொடுக்க, நாம் அவர்களோடே நம்முடைய உடம்படிக்கையையும் ஏற்படுத்தி,

௫ எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரவேல் புத்திரரின் தவிப்பையும் நாம் கேட்டு, நமது உடம்படிக்கையை நினைத்தோம்.

௬ ஆகையால் இஸ்ரவேல் புத்திரருக்கு நீ சொல்லவேண்டியதேதெனில் நாம் கர்த்தர், நாம் உங்களை எகிப்தியருடைய சுமைகளின் கீழிருந்து புறப்படப்பண்ணி, உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி விடுவித்து, உங்களை நீட்டப்பட்ட புயத்தினாலும் மகா நியாயத்தீர்ப்புகளினாலும் மீட்டு,

௭ உங்களை நமக்குச் சனமாகச் சேர்த்துக் கொண்டு, உங்களுக்குப் பராபரனாயிருப்போம்; நாம் உங்களை எகிப்தியருடைய சுமைகளின் கீழிருந்து புறப்படப்பண்ணுகிற உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று அறிவீர்கள்.

௮ நாம் ஆபிரகாமுக்கும் இசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்போமென்று நம்முடைய கரத்தை ஏறெடுத்த தேசத்திலே உங்களைக் கொண்டுபோய், அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்போம்; நாம் கர்த்தரென்று அவர்களுக்குச் சொல்லென்றார்.

௯ இந்தப்பிரகாரமாக மோசே இஸ்ரவேல் புத்திரரோடே பேசினான்; ஆனால் அவர்கள் ஆவியின் இடுக்கணினாலும் கடினவேலையினாலும் மோசேயைக் கேளாதேபோனார்கள்.

௰ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயுடனே பேசி,

௰௧ நீ உள்பிரவேசித்து, எகிப்தின் இராசாவாகிய பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிட அவனோடே பேசு என்றார்.

௰௨ ஆனால் மோசே கர்த்தருக்கு முன்பாகப் பேசி, இதோ இஸ்ரவேல் புத்திரர் என்னைக் கேட்கவில்லை; பார்வோன் என்னை எப்படிக் கேட்பான்? நான் சுன்னத்தில்லாத உதடுகளுமுள்ளவன் என்றார்.

௰௩ கர்த்தரோவென்றால் மோசேயோடும் ஆரோனோடும் பேசி, இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு போகும்படிக்கு, அவர்களை இஸ்ரவேல் புத்திரரண்டைக்கும் எகிப்தின் இராசாவாகிய பார்வோனண்டைக்கும் அனுப்பிக் கட்டளைகளைக் கொடுத்துவந்தார்.

௰௪ ¶ அவர்களுடைய பிதாக்களின் வீட்டாரில் தலைவராவது, இஸ்ரவேலுக்கு முதல் பிறந்தவனான ரூபனின் குமாரர், அனோக்,

பல்லூ, எத்ஸரோன, கற்மீ; இவர்கள் ரூபனுடைய வம்சங்களின் தலைவர்.

௰௫ சிமெயோனின் குமாரர்; எமுவேல், யாமீன், ஒகாத், யாகின், சோகார், கானானித்தியின் குமாரனாகிய சவுல்; இவர்கள் சிமெயோனுடைய வம்சங்களின் தலைவர்.

௰௬ தங்கள் சந்ததிகளாய்ப் பிரிந்த இலேவியினுடைய குமாரரின் நாமங்கள், கெர்சோன், கோகாத், மேராரி, என்றவைகள்; இலேவி உயிரோடிருந்த வருஷங்களோவென்றால், நூற்று முப்பத்தேழு வருஷங்கள்.

௰௭ தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த கெர்சோனின் குமாரர்; லிப்னீயும், சிமேயீயும் தானே.

௰௮ கோகாத்தின் குமாரர்; அம்ராம், இத்செயார், எப்ரோன், ஊசியேல் என்றவர்கள்; கோகாத் உயிரோடே இருந்த வருஷங்களோவென்றால், நூற்று முப்பத்து மூன்று வருஷங்கள்.

௰௯ மேராரின் குமாரர்; மகேலியும், மூசியும்தானே; இவர்கள் தங்கள் சந்ததிகளாய்ப்பிரிந்த இலேவியனுடைய வம்சங்களின் தலைவர்.

௨௰ அம்ராம் தன்னுடைய அத்தையாகிய யோகெபேத்தை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு ஆரோனையும் மோசேயையும் பெற்றாள்; அம்ராம் உயிரோடிருந்த வருஷங்களோவென்றால், நூற்று முப்பத்தேழு வருஷங்கள்.

௨௧ இத்செயாரின் குமாரர்; கோராக், நெப்பேக், சித்ரி, என்றவர்கள்.

௨௨ ஊசியேலின் குமாரர்; மீசவேல், எல்சாபான், சித்ரி, என்றவர்கள்.

௨௩ ஆரோன் அம்மினதாபின் குமாரத்தியும் நகேசோனின் சகோதரியுமாகிய எலிசபாளை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு நாதாபையும், அபியூவையும், எலேயாசாரையும், இத்தாமாரையும் பெற்றாள்.

௨௪ கோராகின் குமாரர்; ஆசீர், எல்க்கானா, அபியாசாப், என்றவர்கள்; இவர்கள் கோராகியரின் வம்சங்களின் தலைவர்.

௨௫ ஆரோனின் குமாரனாகிய எலேயாசார் பூத்தியேலுடைய குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்குப் பீனெகாசைப் பெற்றாள், இவர்கள் தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த இலேவியருடைய பிதாக்களாகிய தலைவர்.

௨௬ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் சேனைகளின்படியே எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போங்களென்று கர்த்தர் சொன்ன ஆரோனும் மோசேயும் இவர்கள்தான்.

௨௭ இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு போகும்படிக்கு எகிப்தின் இராசாவாகிய பார்வோனோடே பேசின மோசேயும் ஆரோனும் இவர்கள் தானே.

௨௮ ¶ கர்த்தர் எகிப்துதேசத்திலே மோசேயோடே பேசின நாளிலே சம்பவித்ததேதென்றால்,

௨௯ கர்த்தர் மோசேயுடனே, நாம் கர்த்தர்; நாம் உன்னோடே சொல்லுகிறவைகளையெல்லாம் நீ எகிப்தின் இராசாவாகிய பார்வோனோடே சொல்லென்று சொன்னபொழுது,

௩௰ மோசே கர்த்தருக்கு முன்பாக, இதோ, நான் சுன்னத்தில்லாத உதடுகளுள்ளவன்; பார்வோன் என்னை எப்படிக் கேட்பானென்றான்.

௭. அதிகாரம்.

பராபரன் மோசேயோடே சொன்னதாவது: பார், உன்னை நாம் பார்வோனுக்குத் தேவனாக்கினோம்; உன் சகோதரனாகிய ஆரோனோவென்றால், உன் தீர்க்கதரிசியாயிருப்பான்.

௨ நாம் உனக்குக் கற்பிப்பதை எல்லாம் நீ சொல்லும்போது *உன் சகோதரனாகிய ஆரோன் பார்வோனோடே, இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிடும்

படிக்குப் பேசக்கடவன். ௨ மோ. ௪. ௰௫.

௩ நாமோவெனில் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி, எகிப்துதேசத்தில் நம்முடைய அடையாளங்களையும் நம்முடைய அற்புதங்களையும் மிகுதியாய் நடக்கப்பண்ணுவோம்.

௪ பார்வோன் உங்களைக் கேளாதே போவான், ஆகையால் நாம் நம்முடைய கையை எகிப்திற்கு விரோதமாக நீட்டி, இஸ்ரவேல் புத்திரரென்ற நமது சனமாகிய நம்முடைய சேனைகளைப் பெரிய நியாயத்தீர்ப்புகளால் எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போவோம்.

௫ அப்படியே நாம் நம்முடைய கையை எகிப்தின்மேல் நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து அழைத்துக்கொண்டு போகையில், நாம் கர்த்தரென்றதை எகிப்தியர் அறிவார்கள் என்றார்.

௬ மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்குக் கற்பித்தபடியே செய்தார்கள்.

௭ அவர்கள்பார்வோனோடேபேசுகிறபொழுது, மோசேக்கு எண்பதுவயதும் ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதும் இருந்தது.

௮ ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது:

௯ உங்களுக்காக ஒரு அற்புதம் காட்டுங்களென்று பார்வோன் உங்களோடே சொன்னால், அப்பொழுது நீ ஆரோனுடனே, உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடென்பாயாக, அப்பொழுது அது சர்ப்பமாகுமென்றார்.

௰ மோசேயும் ஆரோனும் பார்வோனண்டையில் பிரவேசித்து, கர்த்தர் தங்களுக்குக் கற்பித்தபடியே செய்தார்கள்; ஆரோன் தன் கோலைப் பார்வோனுக்கும், அவன் ஊழியக்காரருக்கும் முன்பாகப்போட்டான்; அப்பொழுது அது சர்ப்பமாயிற்று.

௰௧ அப்பொழுது பார்வோனும் ஞானிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான், *எகிப்தின் சாஸ்திரிகளாகிய இவர்களும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்து, ௨ மோ. ௮. ௭, ௰௭, ௰௮. ௨ தீமோ. ௩. ௮, ௯.

௰௨ அவனவன் தன்தன் கோலைப் போட்டார்கள், அப்பொழுது அவைகள் சர்ப்பங்களாயின; ஆரோனுடைய கோலோவென்றால், இவர்களுடைய கோல்களை விழுங்கிவிட்டது.

௰௩ ஆனால் கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் உரம்கொண்டது, அவர்களைக் கேளாதே போனான்.

௰௪ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: பார்வோனின் இருதயம் அழுத்தமாயிருக்கிறது; சனத்தை விடமாட்டோமென்கிறான்.

௰௫ காலமே பார்வோனண்டைக்குப் போ; இதோ தண்ணீரண்டையிலே புறப்பட்டு வருவான்; நீ அவனுக்கு எதிராக நதியின் கரையிலே நின்று, சர்ப்பமாய் மாறி இருந்த கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு,

௰௬ அவனோடே சொல்லவேண்டியது: எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் என்னை உம்மண்டைக்கு அனுப்பி, நமது சனத்தை வனாந்தரத்திலே நமக்கு ஆராதனைசெய்யும்படிக்குப் போகவிடு என்று சொல்லச்சொல்லியும், இதோ இதுவரைக்கும் கேளாதே போனீர்.

௰௭ இதோ என் கையிலிருக்கிற கோலினாலே நான் நதியிலிருக்கிற தண்ணீரின்மேல் அடிப்பேன்; அப்பொழுது அது இரத்தமாய் மாறி,

௰௮ நதியிலிருக்கிற மீன்கள் செத்து, நதி நாறிப்போம்; அப்பொழுது நதியிலிருக்கிற தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குக் குமட்டல் எடுக்கும்; நாம் கர்த்தர் என்பதை அதினால் அறிவாயென்று கர்த்தர் சொல்லுகிறாரென்று சொல்லென்றார்.

௰௯ ¶ பிறகு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனோடே சொல்லவேண்டியதேதெனில், உன் கோலை எடுத்

துக்கொண்டு, உன் கையை எகிப்தியரின் தண்ணீர்களாகிய அவர்கள் நதிகளின்மேலும் அவர்கள் ஆறுகளின்மேலும் அவர்கள் குளங்களின்மேலும் தண்ணீர் சேர்ந்திருக்கிற அவர்களுடைய எல்லா இடங்களின்மேலும் அவைகள் இரத்தமாகும்படிக்கு நீட்டு; அப்பொழுது எகிப்துதேசமெங்கும் மரப்பாத்திரங்களிலும் கல்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்குமென்று சொல்லென்றார்.

௨௰ மோசேயும் ஆரோனும் கர்த்தர் கற்பித்தபடி செய்தார்கள்; இவன் பார்வோனுடைய கண்களுக்கும் அவன் ஊழியக்காரரின் கண்களுக்கும் முன்பாகக் கோலை ஓங்கி, நதியில் இருக்கிற தண்ணீரை அடித்தான்; அப்பொழுது நதியில் இருக்கிற தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று.

௨௧ நதியில் இருந்த மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று; நதியிலிருக்கிற தண்ணீரைக்குடிக்க எகிப்தியருக்குக் கூடாதேபோயிற்று; எகிப்துதேசமெங்கும் இரத்தம் இருந்தது.

௨௨ எகிப்தின் சாஸ்திரிகளும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்தார்கள்; ஆனதுகொண்டு கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் உரம்கொண்டது; அவர்களைக் கேளாதேபோனான்.

௨௩ பார்வோன் திரும்பிக்கொண்டு தன் வீட்டிற்குள் பிரவேசித்து, தன் மனதை அதின்மேலும் வைக்காதேபோனான்.

௨௪ தண்ணீர் குடிக்க எகிப்தியரெல்லாரும் நதியைச்சுற்றி ஊற்றுவெட்டினார்கள்; ஏனெனில் நதியின் தண்ணீரைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது.

௨௫ கர்த்தர் நதியை அடித்து ஏழுநாள் நிறைவேறிற்று.

௮. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையிலே உட்பிரவேசித்து அவனோடே சொல்லவேண்டியது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், நமது சனத்தை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு விடு.

௨ நீ அதை விடமாட்டேன் என்றாயாகில், இதோ நாம் உன் எல்லையை எல்லாம் தவளைகளாலே வாதிப்போம்.

௩ நதி தவளைகளைத் திரளாய்ப் பிறப்பிக்கும்; அவைகள் ஏறி, உன் வீட்டிலும் உன் படுக்கை அறையிலும் உன் மஞ்சத்தின்மேலும் உன் ஊழியக்காரர் வீடுகளிலும் உன் சனத்திற்குள்ளும் அப்பம்சுடுகிற உன் அடுப்புகளிலும் மாப்பிசைகிற உன் தொட்டிகளிலும் வரும்.

௪ அந்தத் தவளைகள் உன்மேலும், உன் சனத்தின்மேலும், உன்னுடைய எல்லா ஊழியக்காரர்மேலும் ஏறுமென்கிறார் என்று சொல்லென்றார்.

௫ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனோடே சொல்லவேண்டியதேதெனில், நீ உன் கோலோடே உன்னுடைய கையை நதிகளின்மேலும் ஆறுகளின்மேலும் குளங்களின்மேலும் நீட்டி, எகிப்து தேசத்தின்மேலே தவளைகளை ஏறிவரப்பண்ணென்று சொல்லென்றார்.

௬ அப்படியே ஆரோன் தன் கையை எகிப்தினுடைய தண்ணீர்களின்மேல் நீட்டினான்; அப்பொழுது தவளைகள் ஏறிவந்து, எகிப்துதேசத்தை மூடின.

௭ சாஸ்திரிகளும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்து, எகிப்துதேசத்தின்மேலே தவளைகளை ஏறிவரப்பண்ணினார்கள்.

௮ ¶ ஆனால் பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, கர்த்தர் அந்தத் தவளைகளை என்னையும் என் சனத்தையும் விட்டகற்ற அவரை வேண்டிக்கொள்ளுங்கள், கர்த்தருக்குப் பலியிடும்படிக்குச் சனத்தை விடுவேனென்றான்.

௯ அப்பொழுது மோசே பார்வோனுக்குத் தவளைகள் நதியிலேமாத்திரம் இருப்

பதற்கு, அவைகளை உம்மிடத்திலும் உம்முடைய வீட்டிலும் இராதபடிக்கு அழிக்க, நான் உமக்காகவும் உம்முடைய ஊழியக்காரருக்காகவும் உம்முடைய சனத்திற்காகவும் எப்பொழுது விண்ணப்பம்பண்ண வேண்டும் என்பதை எனக்குக் குறிக்கும் மேன்மை உமக்கே இருக்கட்டும் என்றான்.

௰ அவன் நாளை என்றான்; அப்பொழுது இவன் சொன்னதாவது: எங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது.

௰௧ தவளைகள் உம்மையும் உம்முடைய வீட்டையும் உம்முடைய ஊழியக்காரரையும் உம்முடைய சனத்தையும்விட்டகன்று நதியிலேமாத்திரம் இருக்குமென்றான்.

௰௨ மோசேயும் ஆரோனும் பார்வோனை விட்டுப் புறப்பட்டார்கள்; பிற்பாடு மோசே பார்வோனுக்கு வரப்பண்ணின தவளைகள் நிமித்தம் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

௰௩ கர்த்தர் மோசேயின் சொல்படி செய்தார்; வீடுகளிலும் முற்றங்களிலும் வயல்களிலும் இருந்த தவளைகள் செத்துப்போயிற்று.

௰௪ அவைகளைக் குவியல் குவியலாகச் சேர்த்துப்போட்டார்கள்; அதினால் பூமி நாற்றம் எடுத்தது.

௰௫ இலகுவுண்டாயிற்றென்று பார்வோன் கண்டபொழுதோவெனில், அவன் கர்த்தர் சொல்லியிருந்தபடி தன் இருதயத்தைக் கடினப்படுத்தி அவர்களைக் கேளாதே போனான்.

௰௬ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனுடனே உன் கோலை நீட்டி, பூமியின் தூளை அடி; அப்பொழுது அது எகிப்துதேசமெங்கும் பேன்களாய்ப் போமென்று சொல்லென்றார்.

௰௭ இப்படிச் செய்தார்கள்; ஆரோன் தன் கோலோடே தன் கையை நீட்டி, பூமியின் தூளை அடித்தான், அப்பொழுது ஏராளமான பேன்கள் மனிதரிலும் மிருகசீவன்களிலும் உண்டாயின; எகிப்துதேசமெங்கும் பூமியின் தூளெல்லாம் பேன்களாய்ப் போயின.

௰௮ சாஸ்திரிகளும் தங்கள் ஞானியங்களாலே பேன்களைப் பிறப்பிக்கும்படிக்கு அப்படிச் செய்தார்கள்; *ஆனால் அவர்களுக்குக் கூடாதேபோயிற்று; ஏராளமான பேன்கள் மனிதரிலும் மிருகசீவன்களிலும் இருந்தன. *௨ மோ. ௭. ௰௧, ௰௨, ௨௨: ௮. ௭, ௯, ௰௧.

௰௯ அப்பொழுது சாஸ்திரிகள் பார்வோனோடே, இது பராபரனுடைய விரல் என்றார்கள்; ஆனால் கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனுடைய இருதயம் உரம்கொண்டது; அவர்களைக் கேளாதே போனான்.

௨௰ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ நாளை அதிகாலமே எழுந்திருந்துபோய், பார்வோனுக்கு முன்பாக நில், இதோ தண்ணீரண்டையிலே புறப்பட்டு வருவான்; அவனோடே நீ சொல்லவேண்டியதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடு.

௨௧ நீ நம்முடைய சனத்தை விடாயேயாகில் இதோ நாம் உன்மேலும் உன் ஊழியக்காரர்மேலும் உன் சனத்தின்மேலும் உன் வீடுகளின்மேலும் பலவித வண்டுகளை அனுப்புவோம்; எகிப்தியர் வீடுகளும் அவர்கள் இருக்கிற தேசமும் அந்த வண்டுகளாலே நிரம்பிப்போம்.

௨௨ பூமியின் நடுவில் நாமே கர்த்தர் என்பதை நீ அறியத்தக்கதாக, நாம் நம்முடைய சனமிருக்கிற கோசேன் சீமையை அந்நாளிலே அங்கே வண்டுச்சாதிகள் வாராதபடிக்கு விசேஷித்ததாக்கி,

௨௩ நம்முடைய சனத்திற்கும் உன் சனத்திற்கும் வித்தியாசம்பண்ணும் இரட்சிப்பைக் காண்பிப்போம்; நாளை இந்த அடை

யாளம் சம்பவிக்கும் என்றாரென்று சொல்லென்றார்.

௨௪ அப்படியே கர்த்தர் செய்தார்; மகா திரளான வண்டுச் சாதிகள் பார்வோன் வீட்டிலும் அவன் ஊழியக்காரர் வீடுகளிலும் எகிப்துதேசம் அனைத்திலும் வந்தன; வண்டுகளாலே தேசம் கெட்டுப்போயிற்று.

௨௫ ¶ அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, நீங்கள்போய் உங்கள் பராபரனுக்குத் தேசத்திலேதானே பலியிடுங்கள் என்றான்.

௨௬ அதற்கு மோசே சொன்னதாவது: இப்படிச் செய்யத்தகாது; ஏனெனில் எகிப்தியர் அருவருக்கிற பிரகாரமாய் எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிடுகிறோமே; இதோ எகிப்தியர் அருவருக்கிற பிரகாரமாக, நாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பலியிட்டால் எங்களைக் கல் எறியார்களோ?

௨௭ *எங்கள் பராபரனாகிய கர்த்தர் எங்களுக்குச்சொன்னபடி, நாங்கள் மூன்றுநாள் பயணம் வனாந்தரத்திலே போய் அவருக்குப் பலியிடுவோம் என்றான். *௨ மோ. ௩. ௰௮.

௨௮ அப்பொழுது பார்வோன், நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்திலே பலியிடும்படிக்கு, நான் உங்களை விடுவேன்; நீங்கள் அதிதூரமாய்மாத்திரம் போகாமல், எனக்காக வேண்டுதல்செய்யுங்கள் என்றான்.

௨௯ மோசே சொன்னதாவது: இதோ நான் உம்மைவிட்டுப் புறப்பட்டபின், கர்த்தர் நாளை வண்டுச்சாதிகளைப் பார்வோனையும் அவர் ஊழியக்காரரையும் அவர் சனத்தையும் விட்டகற்ற, நான் அவரை வேண்டிக்கொள்ளுவேன்; ஆனால் சனத்தைக் கர்த்தருக்குப் பலியிட விடாததினாலே, பார்வோன் இனி வஞ்சனைமாத்திரம் பண்ணிக்கொண்டிராராக என்றான்.

௩௰ ¶ மோசே பார்வோனைவிட்டுப் புறப்பட்டுக் கர்த்தரை வேண்டிக்கொண்டான்.

௩௧ அப்பொழுது கர்த்தர் மோசேயின் சொல்படி செய்து, வண்டுச்சாதிகளைப் பார்வோனையும் அவன் ஊழியக்காரரையும் அவன் சனத்தையும் விட்டகற்றினார்; ஒன்றாகிலும் மீந்திருந்ததில்லை.

௩௨ பார்வோனோவென்றால் அந்த முறையும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, சனத்தை விடாதேபோனான்.

௯. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையில் பிரவேசித்து அவனோடே சொல்லவேண்டியது, எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடு.

௨ ஏனெனில் நீ அவர்களை விடமாட்டேனென்று இன்னம் அவர்களை நிறுத்திவைத்தால்,

௩ இதோ கர்த்தருடைய கை வெளியிலிருக்கிற உன் மந்தையாகிய குதிரைகளின் மேலும் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஆடுமாடுகளின்மேலும் மகா கனமான பெருவாரிக்காய்ச்சல் உண்டாக வந்திருக்கும்.

௪ கர்த்தர் இஸ்ரவேலரின் மந்தைக்கும் எகிப்தியரின் மந்தைக்கும் விசேஷித்த வித்தியாசமும்பண்ணுவார்; இஸ்ரவேல் புத்திரரின் சகல மந்தையிலும் ஒன்றும் சாவதில்லை என்றார்.

௫ நாளைக்குக் கர்த்தர் இந்தக் காரியத்தைத் தேசத்திலே செய்வாரென்றும் கர்த்தர் காலத்தைக்குறித்தாரென்றும் சொல்லென்றார்.

௬ மறுநாளிலே கர்த்தர் இந்தக்காரியத்தைச் செய்தார்; எகிப்தியருடைய எல்லாவிதமுமான மந்தை செத்துப்போயிற்று; ஆனால் இஸ்ரவேல் புத்திரரின் மந்தையில் ஒன்றாகிலும் செத்ததில்லை.

௭ பார்வோன் விசாரித்தனுப்பினான்; இதோ இஸ்ரவேலரின் மந்தையில் ஒன்று

கிலும் சாவ இல்லை; பார்வோனுடைய இருதயமோவென்றால் கடினப்பட்டது; அவன் சனத்தை விட்டதில்லை.

௮ அப்பொழுது கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது: உங்கள் கைப்பிடிகள் நிறைய அடுப்பின் நீறு அள்ளிக்கொள்ளுங்கள்; அதை மோசே பார்வோனுடைய கண்களுக்கு முன்பாக வானத்திற்கு நேராக இறைக்கக்கடவன்.

௯ அப்பொழுது அது எகிப்துதேசம் மீதெங்கும் தூசியாகி, எகிப்து தேசமெங்கும் மனிதரிலும் மிருகசீவன்களிலும் கொப்புளங்களை எழும்பப்பண்ணுகிற எரிபந்தமாய்ப் போம் என்றார்.

௰ அப்படியே அவர்கள் அடுப்பின் நீறு அள்ளிக்கொண்டு, பார்வோனுக்கு முன்பாக வந்து நின்றார்கள்; மோசே அதை வானத்திற்கு நேராக இறைத்தான்; அப்பொழுது மனிதரிலும் மிருகசீவன்களிலும் கொப்புளங்களை எழும்பப்பண்ணுகிற எரிபந்தம் உண்டாயிற்று.

௰௧ அந்த எரிபந்தத்தினிமித்தம் சாஸ்திரிகளும் மோசேக்குமுன்பாக நிற்கக்கூடாதிருந்தது; ஏனெனில் அந்த எரிபந்தம் சாஸ்திரிகளிலும் எல்லா எகிப்தியரிலும் உண்டாயிருந்தது.

௰௨ ஆனால் கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தபடியே, கர்த்தர் பார்வோனின் இருதயத்தை உரம்கொள்ளப்பண்ணினார்; அவர்களைக் கேளாதேபோனான்.

௰௩ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ அதிகாலமே எழுந்திருந்து போய், பார்வோனுக்குமுன்பாக நின்று, அவனோடே சொல்லவேண்டியது, எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு விடு.

௰௪ ஏனென்றால் பூமி எங்கும் நம்மைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இந்தமுறை நாம் நம்முடைய வாதைகளை எல்லாம் உன் இருதயத்திலும் உன் ஊழியக்காரரிலும் உன் சனத்திலும் போகவிடுவோம்.

௰௫ ஏனெனில் அப்பொழுதே நாம் நம்முடைய கையை நீட்டி, நீ பூமியில் இராமல் அற்றுப்போகும்படிக்கு, உன்னையும் உன் சனத்தையும் பெருவாரிக்காய்ச்சலால் வாதிப்போம்.

௰௬ ¶ ஆனால் *நம்முடைய வல்லமையை உனக்குக் காண்பிக்கிறதற்கும் நம்முடைய நாமம் பூமி எங்கும் பிரஸ்தாபமாகிறதற்குமே உன்னை நிறுத்தினோம். *உரோ. ௯. ௰௭.

௰௭ இன்னம் நீ நமது சனத்தை விடாதபடிக்கு அதற்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறாயோ?

௰௮ இதோ எகிப்து அஸ்திவாரப்பட்டநாள் முதல்கொண்டு இற்றைவரைக்கும் அதிலே வாராதிருக்கிற மகா கனமான கல்மழையை நாம் நாளை இந்நேரத்திலே வருஷிக்கப்பண்ணுவோம்.

௰௯ இப்பொழுதும் ஆள் அனுப்பி, உன் மந்தையையும் வெளியில் உனக்கிருக்கிற யாவையும் சேர்த்துக்கொள்; வீட்டிலே சேர்த்துக்கொள்ளப்படாமல் வெளியிலே அகப்படப்போகிற எல்லா மனிதசீவனும் மிருகசீவனும் அந்தக் கல்மழை அவைகள் மேல் இறங்குவதினாலே செத்துப்போம் என்றாரென்று சொல்லென்றார்.

௨௰ பார்வோனுடைய ஊழியக்காரரில் எவன் கர்த்தருடைய வார்த்தைக்குப் பயப்பட்டானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மந்தையையும் வீடுகளுக்கு ஓடிவரப்பண்ணினான்.

௨௰௧ ஆனால் எவன் கர்த்தருடைய வார்த்தையைத் தன் மனதிலே வைக்காதேபோனானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மந்தையையும் வெளியிலே வைத்துவிட்டான்.

௨௰௨ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, எகிப்துதேசமெங்கும் மனிதர்மேலும் மிருகசீவன்கள்மேலும் எகிப்துதே

சத்திலிருக்கிற சகலமான பயிர்வகைகள் மேலும் கல்மழை வர, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார்.

௨௩ அப்படியே மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது நெருப்பு தரையில் இறங்கி ஓடத்தக்கதாகக் கர்த்தர் இடிமுழக்கங்களையும் கல்மழையையும் கட்டளையிட்டு; எகிப்துதேசத்தின்மேல் கல்மழையை வருஷிக்கப் பண்ணினார்.

௨௪ கல்மழையும் கல்மழையின் நடுவிலே கலந்த நெருப்பும் மிகக்கொடியதாயிருந்தது; எகிப்துதேசம் குடி ஏறினதுமுதல்கொண்டு அதிலெங்கும் அப்படிக்கொத்தது உண்டானதில்லை.

௨௫ எகிப்துதேசமெங்கும் மனிதரைத் துவக்கி மிருகசீவன்கள்மட்டும், எவை எவை வெளியிலே இருந்தவைகளோ அவைகளை எல்லாம் அந்தக் கல்மழை அடித்துவிட்டது; அது வெளியின் பயிர்வகைகளை எல்லாம் அடித்து, வெளியின் செடிகளை எல்லாம் முறித்துவிட்டது.

௨௬ இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் சீமையிலேமாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது.

௨௭ ¶ அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைத்தனுப்பி, அவர்களோடே சொன்னதாவது: *இந்தமுறை பாவம்செய்தேன்; கர்த்தர் நீதியுள்ளவர், நானும் என் சனமுமோவென்றால் துன்மார்க்கராயிருக்கிறோம். *௨ மோ. ௰. ௰௬, ௰௭.

௨௮ பராபரனுடைய இடி முழக்கங்களும் கல்மழையும் இராதபடிக்கு, கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; இனிப் போதும், நீங்கள் இனி இங்கே தரித்திராதபடிக்கு உங்களை விடுவேனென்றான்.

௨௯ மோசே அவனோடே சொன்னதாவது: நான் பட்டணத்திலிருந்து புறப்பட்டபிற்பாடு, நான் என் உள்ளங்கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிப்பேன்; அப்பொழுது பூமி கர்த்தருடையதென்பதை நீர் அறியும்படிக்கு, இடிமுழக்கங்கள் ஓய்ந்து கல்மழை இனி இராது.

௩௰ ஆனால் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னம் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாகப் பயப்படுவதில்லை என்கிறதை அறிவேனென்றான்.

௩௧ ¶ அப்படியே சணலும் வால்கோதுமைப் பயிரும் அழிக்கப்பட்டுப்போயின; ஏனெனில் வால்கோதுமை கதிர்ப்பயிரும் சணல் தான்பயிருமாயிருந்தன.

௩௨ ஆனால் கோதுமையும் கம்பும் அழிக்கப்படவில்லை; ஏனென்றால் அவைகள் இன்னம் வளராதிருந்தன.

௩௩ ¶ மோசே பார்வோனைவிட்டுப் பட்டணத்திலிருந்து புறப்பட்டு, தன்னுள்ளங்கைகளைக் கர்த்தருக்கு நேராக விரித்தான்; அப்பொழுது இடிமுழக்கங்களும் கல்மழையும் ஓய்ந்து, மழை தரையில் இறங்காதேபோயிற்று.

௩௪ மழையும் கல்மழையும் இடிமுழக்கங்களும் ஓய்ந்துபோயினவென்று பார்வோன் கண்டபொழுதோவெனில், அவன் பாவம்செய்யத் தொடர்ந்து, தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான்; அவனும் அவன் ஊழியக்காரரும்தானே.

௩௫ கர்த்தர் மோசேயைக்கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் உரம்கொண்டது; அவன் இஸ்ரவேல் புத்திரரை விடாதே போனான்.

௰. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையில் பிரவேசி; ஏனெனில் அவர்கள் நடுவே நாம் இந்த நம்முடைய அடையாளங்களைச் செய்யும்படிக்கும்,

௨ நாம் எகிப்திலே நடப்பித்ததையும் நாம் அவர்களுக்குள் செய்த நம்முடைய அடையாளங்களையும் நீ உன் பிள்ளைகளின் செவிகளுக்குமுன்பாகவும் உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் செவிகளுக்குமுன்பாகவும்

விவரிக்கும்படிக்கும், நாமே கர்த்தரென்பதை நீங்கள் அறியும்படிக்கும், நாம் அவன் இருதயத்தையும் அவன் ஊழியக்காரரின் இருதயத்தையும் கடினப்படுத்தினோமென்றார்.

௩ ¶ அப்படியே மோசேயும் ஆரோனும் பார்வோனண்டையில் பிரவேசித்து, அவனோடே சொன்னதாவது: எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறதேதெனில், நமக்குமுன்பாக நீ உன்னைத் தாழ்த்த எந்தமட்டும் மனதில்லாதேபோகிறாய்? நமது சனத்தை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு விடு.

௪ நீ நமது சனத்தை விடமாட்டேன் என்றாயேயாகில், இதோ நாம் நாளை உன் எல்லையிலே வெட்டுக்கிளிகளை வரப்பண்ணுவோம்.

௫ அவைகள் பூமியின் முகத்தைத் தரையைக் காணக்கூடாதபடிக்கு மூடி, கல்மழைக்குத் தப்பி உங்களுக்கு மீதியாக வைக்கப்பட்டதைப் பட்சித்து, வெளியிலே உங்களுக்குத் துளிர்க்கிற செடிகளை எல்லாம் தின்றுவிடும்.

௬ அவைகளால் உன் வீடுகளும் உன்னுடைய எல்லா ஊழியக்காரரின் வீடுகளும் எல்லா எகிப்தியரின் வீடுகளும் நிரம்பும்; உன் பிதாக்களும் உன் பிதாக்களின் பிதாக்களும் தாங்கள் தேசத்திலிருந்த நாள்துவக்கி இந்நாள்வரைக்கும் அப்படிக் கண்டதில்லை என்றாரென்று சொல்லி, திரும்பிக்கொண்டு பார்வோனைவிட்டுப் புறப்பட்டான்.

௭ ¶ அப்பொழுது பார்வோனுடைய ஊழியக்காரர் அவனோடே சொன்னது: எந்தமட்டும் இவன் நமக்குக் கண்ணியாயிருக்கவேண்டும்? அந்த மனிதரைத் தங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடும்; எகிப்து அழிந்துபோயிற்றென்று இன்னம் அறியீரோ என்றார்கள்.

௮ அப்பொழுது மோசேயும் ஆரோனும் பார்வோனண்டைக்குத் திரும்ப அழைக்கப்பட்டார்கள்; அவன் அவர்களுடனே, நீங்கள் போய் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்களென்று சொல்லி, போகிறவர்கள் யார், எவர்கள், என்று கேட்டான்.

௯ மோசே சொன்னதாவது: எங்கள் இளைஞரோடும் எங்கள் முதிர்வயதுள்ளவர்களோடும் எங்கள் குமாரரோடும் எங்கள் குமாரத்திகளோடும் எங்கள் ஆடுகளோடும் எங்கள் மாடுகளோடும்கூடப் போவோம்; ஏனெனில் எங்களுக்குக் கர்த்தரின் பண்டிகை உண்டாயிருக்குமென்றான்.

௰ அப்பொழுது அவன் அவர்களோடே சொன்னதாவது: நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் எப்படி விடுவேனோ, அப்படிக் கர்த்தர் உங்களோடிருப்பாராக; உங்கள் முகத்திற்குமுன்பாகப் பொல்லாப்பு இருக்கிறதென்று பாருங்கள்.

௰௧ அப்படி அல்ல, புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்; ஏனெனில் நீங்கள் தேடினது இதுதானென்று அவன் சொன்னபிற்பாடு அவர்கள் பார்வோன் முகத்தைவிட்டுத் துரத்தப்பட்டார்கள்.

௰௨ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, வெட்டுக்கிளிகள் எகிப்துதேசத்தின்மேல் ஏறி, கல்மழை பின்வைத்த பூமியின் சகல பயிர்வகைகளை எல்லாம் தின்னும்படிக்கு அவைகளுக்காக, உன் கையை எகிப்து தேசத்தின்மேல் நீட்டென்றார்.

௰௩ அப்படியே மோசே தன் கோலை எகிப்துதேசத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் அன்று பகல் முழுவதும் அன்று இராமுழுவதும் கீழ்க்காற்றைத் தேசத்தின்மேல் வரப்பண்ணினார்; விடியற்காலமாகிறபொழுது, கீழ்க்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டுவந்தது.

௰௪ வெட்டுக்கிளிகள் எகிப்துதேசமெங்கும் ஏறி, எகிப்தின் எல்லையிலெல்லாம் மகா ஏராளமாய் இறங்கின; அதற்குமுன் அப்படிக்கொத்த வெட்டுக்கிளிகள் இருந்ததில்லை; அதற்குப்பிறகு இருப்பதுமில்லை.

௰௫ அவைகள் பூமியின் முகத்தையெல்லாம் மூடின; தேசம் அவைகளால் அந்தகாரப்பட்டது; அவைகள் கல்மழை பின்வைத்த நிலத்தின் எல்லாப் பயிர்வகைகளையும் மரங்களின் எல்லாப் பலனையும் தின்றுவிட்டன; எகிப்துதேசமெங்கும் மரங்களிலாகிலும் நிலத்தின் பயிர்வகைகளிலென்கிலும் ஒரு பச்சிலையும் மீதியானதில்லை.

௰௬ ¶ *அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பிக்கத் தீவிரித்து, உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவம்செய்தேன். *௨ மோ. ௮. ௮, ௨௫: ௯. ௨௭.

௰௭ இப்பொழுதும் இந்த முறைமாத்திரம் நீ என் பாவத்தை மன்னி; உங்கள் பராபரனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டகற்ற அவரை விண்ணப்பம் பண்ணுங்களென்றான்.

௰௮ அவன் பார்வோனைவிட்டுப் புறப்பட்டு, கர்த்தரை விண்ணப்பம்பண்ணினான்.

௰௯ அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை திரும்ப வரவிட்டார்; அது வெட்டுக்கிளிகளை எடுத்து நாணல்சமுத்திரத்திலே போட்டது; எகிப்தின் எல்லையிலெல்லாம் அவைகளில் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருந்ததில்லை.

௨௰ கர்த்தரோவென்றால் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரை விட்டதில்லை.

௨௧ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்துதேசத்தின்மேல் உண்டாகும்படிக்கு, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டென்றார்.

௨௨ மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது எகிப்துதேசமெங்கும் மூன்றுநாள்மட்டும் காரிருள் உண்டாயிருந்தது.

௨௩ மூன்றுநாள்மட்டும் ஒருவரை ஒருவர் கண்டதுமில்லை; ஒருவரும் தம்மிடத்தை விட்டு எழுந்ததுமில்லை; எல்லா இஸ்ரவேல் புத்திரருக்குமோவெனில், அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது.

௨௪ ¶ அப்பொழுது பார்வோன் மோசேயை அழைப்பித்து, நீங்கள் போய்க்கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்; உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும்மாத்திரம் நிறுத்தப்பட வேண்டும்; உங்கள் குழந்தைகளும் உங்களோடேகூடப் போகலாம் என்றான்.

௨௫ மோசே சொன்னதாவது: நாங்கள் எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் படைக்கும் பலிகளையும் தகனபலிகளையும் நீர் எங்கள் கையிலே கொடுக்கவேண்டும்.

௨௬ எங்கள் மந்தையும் எங்களோடேகூடப் போகவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை; ஏனெனில் எங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அதிலே எடுப்போம்; இன்னதினாலே கர்த்தருக்கு ஆராதனைசெய்வோம் என்கிறதை நாங்கள் அங்கே வரும்மட்டும் அறியோம் என்றான்.

௨௭ ¶ ஆனால் கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவர்களைவிட மனதில்லாதேபோனான்.

௨௮ பார்வோன் அவனுக்கு, என்னைவிட்டு அப்பாலே போ; நீ இனி என்முகத்தைக் காணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; ஏனென்றால் நீ என் முகத்தைக் காணும் நாளிலே சாவாயென்றான்.

௨௯ அப்பொழுது மோசே, நீர் சொன்னபடி இனி உம்முடைய முகத்தை நான் காண்பதில்லை என்றான்.

௰௧. அதிகாரம்.

அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: இன்னம் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணுவோம்; அதற்குப்பிறகு உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான், சமூலமாய்ப் போகவிடுவதுமல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தவே துரத்துவான்.

௨ *இப்பொழுதும் ஒவ்வொருவன் தன் அயலான் கையிலும் ஒவ்வொருத்தி தன் அயலாள் கையிலும் வெள்ளி உடைமைகளையும் பொன் உடைமைகளையும் கேட்கவேண்டுமென்று சனத்தின் செவிகளுக்குமுன்பாகச் சொல்லென்றார். *௨ மோ. ௩. ௨௧, ௨௨.

௩ அதற்காகக் கர்த்தர் சனத்திற்கு எகிப்தியருடைய கண்களுக்குமுன்பாகத் தயவு கிடைக்கப்பண்ணினார்; மோசே என்ற புருஷனும் எகிப்துதேசத்திலே பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் சனத்தின் பார்வைக்கும் மிகப் பெரியவனாயிருந்தான்.

௪ அப்படியே மோசே சொன்னதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், பாதி இராத்திரியிலே நாம் எகிப்தின் நடுவாகப் புறப்பட்டுப்போவோம்.

௫ அப்பொழுது பார்வோனுடைய இராசாசனத்தின்மேல் உளுக்காரும் அவருடைய தலைச்சன் குமாரனைத் துவக்கி, எந்திரத்தின் பிறகாலே இருக்கிற அடிமைப் பெண்ணுடைய தலைச்சன்பிள்ளைமட்டும், எகிப்து தேசத்திலிருக்கிற முதல்பேறனைத்தும் மிருகசீவன்களுக்குள்ளேயும் தலையீற்றனைத்தும் சாகும்.

௬ அதினால் எகிப்து தேசமெங்கும் முன் ஒருக்காலும் உண்டாகாததும் இனி உண்டாகப்போகாததுமான பெரிய கூக்குரல் இருக்கும்.

௭ ஆனால் கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறியும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் மனிதரைத் துவக்கி மிருகசீவன்கள்மட்டும் ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை.

௮ அப்பொழுது இந்த உம்முடைய ஊழியக்காரர் எல்லாரும் என்னண்டைக்கு இறங்கிவந்து, நீயும் உன் கீழிருக்கிற எல்லாச் சனமுமாய்ப் புறப்படு என்று என்னை வணங்குவார்கள்; அதின்பிறகு புறப்படுவேனென்று சொல்லி, உக்கிரமான கோபத்தோடே பார்வோனை விட்டுப் புறப்பட்டான்.

௯ ¶ கர்த்தர் மோசேயுடனே, எகிப்துதேசத்தில் நம்முடைய அற்புதங்கள் அநேகமாகும்படிக்கு, பார்வோன் உங்களைக் கேளாதே போவானென்று சொல்லி இருந்தபடியே,

௰ மோசேயும் ஆரோனும் இந்த அற்புதங்களை எல்லாம் பார்வோனுக்குமுன்பாகச் செய்தாலும், கர்த்தர் பார்வோனின் இருதயத்தை உரம்கொள்ளப்பண்ணினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிட்டதில்லை.

௰௨. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் எகிப்துதேசத்தில் சொன்னதாவது:

௨ இந்த மாதம் உங்களுக்குத் தலையான மாதம்; இது உங்களுக்கு வருஷத்திலே முதலாம் மாதமாவது.

௩ ¶ நீங்கள் இஸ்ரவேல் சபையோடெல்லாம்பேசிச்சொல்லவேண்டியதேதெனில், இந்த மாதம் பத்தாம்தேதியிலே பிதாக்களாகிய வீட்டுக்காரர் அவரவர் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியை, ஒவ்வொரு வீட்டிற்கு ஒவ்வொரு ஆட்டுக்குட்டி இருக்கும்படிக்கு, பிடிக்கக்கடவர்கள்.

௪ வீட்டிலே இருக்கிறவர்கள் ஆட்டுக்குட்டியைப் புசிக்கப் போதாத கொஞ்சப்பேர்களாய் இருந்தார்களேயாகில், அப்பொழுது ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒருவன் தானும் சமீபமான தன்னுடையஅயல்வீட்டுக்காரனுமாய் ஒன்றைப் பிடிக்கக்கடவன்; அவனவன் புசிப்பதற்குத்தக்கதாக ஆட்டுக்குட்டியின்மேலே இலக்கம் பார்க்கக்கடவீர்கள்.

௫ பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாகிய ஆட்டுக்குட்டி உங்களுக்கு இருக்கவேண்டும்; ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் அதை எடுப்பீர்களாக.

௬ ¶ அதை இந்த மாதம் பதினான்காம்

தேதிமட்டும் வைத்துக்கொண்டிருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் அந்திநேரமான வேளையிலே அதின் குரல்வளையை அறுத்து,

௭ அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீடுகளிலே வாசல் இரண்டு நிலைகளிலும் வாசல்கூட்டின் மேல்சட்டத்திலும் பூசி,

௮ நெருப்பினாலே பொரித்ததாக அந்த மாம்சத்தையும் புளிப்பில்லாத அப்பங்களையும் அன்று இராத்திரியிலே புசிக்கக்கடவர்கள்; கசப்பான கீரைகளோடே அதைப் புசிக்கக்கடவர்கள்.

௯ பச்சையானதாய் அல்லது தண்ணீரிலே வேவித்ததாய் அல்ல, நெருப்பினாலே அதின் தலையும் அதின் தொடைகளும் அதற்குள் இருக்கிறதும் ஏகமாய்ப் பொரிக்கப்பட்டதாய் அதிலே புசிப்பீர்களாக.

௰ அதிலே விடியற்காலம்மட்டும் ஒன்றும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியாலே சுட்டெரிப்பீர்களாக.

௰௧ நீங்கள் உங்கள் அரைகள் கட்டப்பட்டவைகளாகவும் உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் உங்கள் தடிகள் உங்கள் கைகளிலும் இருக்கிறவைகளாகவும் அதைப் புசித்து, தீவிரத்துடனே அதைப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா.

௰௨ ¶ அந்த இராத்திரியிலே நாம் எகிப்துதேசத்திலே கடந்துபோய், எகிப்துதேசத்திலே மனிதனைத்துவக்கி மிருகஜீவன்கள் மட்டும், முதல்பேறாயிருக்கிறவைகளை எல்லாம் அடித்து, எகிப்தின் தேவர்களில் நியாயத்தீர்ப்புகளைச் செய்வோம்; நாம் கர்த்தர்.

௰௩ நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்கான அடையாளமாயிருக்கும்; அந்த இரத்தத்தைக் கண்டு, உங்களை விலகிக் கடந்துபோவோம்; அப்படியே நாம் எகிப்துதேசத்தை அழிக்கும்பொழுது, அழிக்கிறவாதை உங்களுக்குள்ளே வாராதிருக்கும்.

௰௪ ¶ அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலுக்காக இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாய் ஆசரிப்பீர்களாக.

௰௫ ¶ ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவீர்கள்; ஆனால் முதல்நாளிலேதானே புளித்தமாவை உங்கள் வீடுகளில் அற்றுப்போகப்பண்ணக்கடவீர்கள்; ஏனெனில் முதல்நாள் துவக்கி ஏழாம்நாள் மட்டும் எவனாகிலும் புளித்த அப்பம் புசித்தால், அந்த ஆத்துமா இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டுபோவான்.

௰௬ முதலாம்நாளிலே பரிசுத்தமான சபைகூடுதலும் ஏழாம்நாளிலே பரிசுத்தமான சபைகூடுதலும் உங்களுக்கு இருக்கக்கடவது; அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படவேண்டாம்; ஒவ்வொரு ஆத்துமாவுக்குச் சாப்பிடுகிறதற்குத் தேவையானது மாத்திரமே உங்களுக்காகச் செய்யப்படலாம்.

௰௭ புளிப்பில்லாத அப்பங்களின் புசிக்குதலைக் கைக்கொள்ளுவீர்களாக; ஏனெனில் அந்த நாளிலேதானே உங்கள் சேனைகளை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினோம்; ஆகையால் அந்த நாளை உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாக ஆசரிப்பீர்களாக.

௰௮ முதலாம் மாதம் பதினான்காம் தேதி சாயங்காலம்துவக்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம்மட்டும் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவீர்கள்.

௰௯ ஏழுநாள்மட்டும் உங்கள் வீடுகளிலே புளித்தமா காணப்படாதிருப்பதாக; ஏனெனில் எவனாகிலும் புளித்த அப்பத்தைப் புசித்தால், அந்த ஆத்துமா பரதேசியானாலும் சரி, தேசத்திலே பிறந்தவனானாலும் சரி, இஸ்ரவேல் சபையிலிராமல் அறுப்புண்டுபோவான்.

௨௰ நீங்கள் புளித்த அப்பமான யாதொன்றையும் புசிக்கவேண்டாம்; உங்களுடைய எல்லா வாசஸ்தலங்களிலும் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவீர்களென்று சொல்லென்றார்.

௨௧ ¶ அப்பொழுது மோசே இஸ்ரவேலின் மூப்பரை எல்லாம் அழைப்பித்து அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் உங்களுக்கு உங்கள் வம்சத்திற்குத்தக்கவைகளாக ஆட்டுக்குட்டிகளைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, *பஸ்காவை அடித்து, *எபி. ௰௧. ௨௮.

௨௨ இசோப்புக் கிளைகளின் கட்டை வாங்கி, கிண்ணியிலே இருக்கும் இரத்தத்திலே தோய்த்து, கிண்ணியிலே இருக்கும் அந்த இரத்தத்தினால் வாசல்கூட்டின் மேல்சட்டத்திலும் வாசலின் இரண்டு நிலைகளிலும் பூசுங்கள்; உங்களிலோவென்றால் விடியற்காலம்மட்டும் ஒருவரும் தன் வீட்டு வாசலிலிருந்து புறப்படவேண்டாம்.

௨௩ ஏனெனில் கர்த்தர் எகிப்தியரை வாதிப்பதற்குக் கடந்துவருவார்; ஆனால் வாசல்கூட்டின் மேல்சட்டத்திலும் வாசலின் இரண்டு நிலைகளிலும் அந்த இரத்தத்தைக் காணும்பொழுது, கர்த்தர் அழிக்கிறவனை உங்கள் வீடுகளில் வாதிக்கிறதற்கு வரவொட்டாமல், வாசல்படியை விலகிக் கடந்துபோவார்.

௨௪ இந்தக் காரியத்தை என்றைக்கும் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் கட்டளையாகக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

௨௫ கர்த்தர் உங்களுக்குத் தாம் சொன்னபடி கொடுக்கப்போகிற தேசத்திலே நீங்கள் வந்திருக்கும்பொழுது, அந்த ஆராதனையைக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

௨௬ *அப்பொழுது உங்கள் பிள்ளைகள் உங்களுக்கிருக்கிற இந்த ஆராதனை என்னவென்று உங்களைக் கேட்கும்பொழுது, ௨ மோ. ௰௩. ௰௪.

௨௭ நீங்கள் சொல்வதாவது: எகிப்தியரை வாதிக்கையில் எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளை விலகிக் கடந்து, எங்கள் வீடுகளைத் தப்பப்பண்ணின கர்த்தருக்கு இது பஸ்கா என்னப்பட்ட பலி என்பீர்களாக என்றான்; அப்பொழுது சனம் குனிந்து பணிந்துகொண்டது.

௨௮ இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படிச் செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கற்பித்தபடியே செய்தார்கள்.

௨௯ ¶ அப்பொழுது சம்பவித்ததேதெனில், பாதிஇராத்திரியிலே கர்த்தர் பார்வோனுடனே ஆசனத்தின்மேல் உருக்காரும் அவனுடைய தலைச்சன் குமாரனைத்துவக்கி, காவல் வீட்டிலிருந்த சிறையின் தலைச்சன் பிள்ளைமட்டும், எகிப்துதேசத்திலிருந்த முதல்பேறனைத்தையும் மிருகசீவன்களின் தலையீற்றனைத்தையும் அழித்தார்.

௩௰ அப்பொழுது பார்வோனும் அவனுடைய எல்லா ஊழியக்காரரும் எல்லா எகிப்தியரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; ஏனெனில் செத்தவனில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை.

௩௧ ¶ அவன் மோசேயையும் ஆரோனையும் இராத்திரியிலே அழைப்பித்துச் சொன்னதாவது: நீங்களும் இஸ்ரவேல் புத்திரருமாய் எழுந்து, என் சனத்தின் நடுவிலிருந்து புறப்பட்டுப்போய், நீங்கள் சொன்னபடி கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்.

௩௨ உங்கள் ஆடுமாடுகளையும் நீங்கள் சொன்னபடிக்கு ஓட்டிக்கொண்டு போய், என்னையும் ஆசீர்வதியுங்களென்றான்.

௩௩ ¶ எகிப்தியர் தீவிரமாய்ச் சனத்தைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை வெகு துரிதம்பண்ணினார்கள்; ஏனெனில் நாங்கள் எல்லாரும் சாகிறோமென்றார்கள்.

௩௪ ஆகையால் சனம் இன்னம் உப்பாத தங்களுடைய பிசைந்தமாவிருந்த தங்கள் தொட்டிகளைத் தங்கள் சீலைகளில் கட்டி, தங்கள் தோள்களின்மேல் எடுத்துப்போனார்கள்.

௩௫ இஸ்ரவேல் புத்திரர் மோசேயினு

டைய வார்த்தையின்படி செய்து, *எகிப்தியரை வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டிருந்தார்கள். *௨ மோ. ௩. ௨௧; ௰௧. ௨.

௩௬ அதற்காகக் கர்த்தர் சனத்திற்கு எகிப்தியரின் கண்களிலே தயவுகிடைக்கப்பண்ணி இருந்தார்; கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்.

௩௭ ¶ இஸ்ரவேல் புத்திரர் குழந்தைகள் தவிர அறுனூறாயிரம் புருஷர் கால்நடையாய் ராமேசேசைவிட்டுப் பயணம்பண்ணி, சுக்கோத்திற்கு வந்தார்கள்.

௩௮ அவர்களோடும்கூடப் பலசாதியான திரள்சனமும் ஆடுமாடுகள் முதலான ஏராளமாகிய மிருகசீவன்களும் ஏறிவந்தன.

௩௯ அவர்கள் எகிப்திலிருந்து கொண்டு வந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லாத அப்பங்களாகச் சுட்டார்கள்; ஏனெனில் அவர்கள் தரித்துநிற்கக்கூடாமல், எகிப்திலிருந்து துரத்தப்பட்டபடியினாலே அது உப்பாதிருந்தது; அவர்கள் தங்களுக்கு வழிக்கு ஒன்றும் சேகரம்பண்ணினதுமில்லை.

௪௰ ¶ இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த குடியிருப்பு *நானூற்றுமுப்பது வருஷமானது. *கலா. ௩. ௰௭.

௪௧ நானூற்றுமுப்பது வருஷங்களின் முடிவிலே சம்பவித்ததேதெனில், அந்நாளிலேதானே கர்த்தருடைய சேனைகளெல்லாம் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டன.

௪௨ ¶ கர்த்தர் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினதினாலே, இது அவருக்குக் கவனமாய் ஆசரிக்கப்படவேண்டிய இராத்திரி; இதுதானே இஸ்ரவேல் புத்திரரெல்லாரும் தங்கள் தலைமுறைகளிலே கர்த்தருக்குக் கவனமாய் ஆசரிக்கவேண்டிய இராத்திரி.

௪௩ ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது: பஸ்காவின் கட்டளையேதெனில், அந்நிய புத்திரன் ஒருவனும் அதிலே புசிக்கவேண்டாம்.

௪௪ ஆனால் பணத்தினாலே கொள்ளப்பட்ட அடிமையெல்லாம் நீ அவனைச் சுன்னத்துப்பண்ணினபிற்பாடு அதிலே புசிப்பானாக.

௪௫ அந்நியனும் கூலியாளும் அதிலே புசிக்கவேண்டாம்.

௪௬ ஒவ்வொரு வீட்டில் ஒவ்வொன்று புசிக்கப்படக்கடவது; நீ அந்த மாம்சத்தில் ஒன்றும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகவேண்டாம்; *அதிலே நீங்கள் ஒரு எலும்பை முறிக்கவும் வேண்டாம். *௪ மோ. ௯. ௰௨. யோவா. ௰௯. ௩௬.

௪௭ இஸ்ரவேல் சபையெல்லாம் அதை ஆசரிக்கக்கடவது.

௪௮ அந்நியன் ஒருவன் உன்னிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கவேண்டுமென்று இருந்தானேயாகில், அவனிடத்திலிருக்கிற ஆணெல்லாம் சுன்னத்தடையவேண்டும்; பிற்பாடு அவன் அதை ஆசரிக்கிறதற்குச் சேர்ந்து, தேசத்திலே பிறந்தவனைப்போல இருப்பானாக; ஆனால் சுன்னத்தில்லாத ஒருவனும் அதிலே புசிக்கவேண்டாம்.

௪௯ *தேசத்திலே பிறந்தவனுக்கும் உங்கள் நடுவிலே தங்குகிற பரதேசிக்கும் ஒரே நியாயப்பிரமாணம் இருக்கக்கடவதென்றார். *௩ மோ. ௨௪. ௨௨.

௫௰ இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் இப்படிச் செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கற்பித்தபடியே செய்தார்கள்.

௫௧ ¶ இந்தப்பிரகாரமாக அந்நாளிலேதானே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சேனைகளின்படியே எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௰௩. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ *இஸ்ரவேல் புத்திரரில் எங்கும் மனிதரிலும் மிருகசீவன்களிலும் கர்ப்பம்திறந்து

பிறக்கிற முதற்பேற்றை எல்லாம் நமக்குப் பரிசுத்தமாக்கு, அது நம்முடையதென்றார். *௨ மோ. ௨௨. ௨௯, ௩௰: ௩௪. ௰௯.

௩ ¶ அப்பொழுது மோசே சனத்தோடே சொன்னதாவது: நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நீங்கள் நினையுங்கள்; ஏனெனில் கர்த்தர் பலத்த கையினாலே உங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ஆனது கொண்டு புளித்த அப்பம் புசிக்கப்படவேண்டாம்.

௪ *ஆபிப்மாதத்தினுடைய இந்த நாளிலே நீங்கள் புறப்பட்டீர்கள். *௨ மோ. ௨௩. ௰௫.

௫ ஆகையால் கர்த்தர் உனக்குக் கொடுப்போமென்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதும் பாலும் தேனும் ஓடுகிறதுமான தேசமாகிய கானானியர், ஏத்தியர், ஏமோரியர், ஏவியர், ஏபூசியர் என்றவர்களுடைய தேசத்திலே உன்னை வரப்பண்ணினபொழுது, நீ இந்த மாதத்திலே இந்த ஆராதனையைச் செய்வாயாக.

௬ ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவாய்; ஏழாம் நாளிலோவெனில், கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுவதாக.

௭ அந்த ஏழுநாளும் புளிப்பில்லாத அப்பங்கள் புசிக்கப்படக்கடவது; உன்னிடத்திலே புளித்த அப்பமும் காணப்படவேண்டாம்; உன் எல்லைகளிலெல்லாம் உன்னிடத்திலே புளித்தமாவும் காணப்படவேண்டாம்.

௮ அந்நாளிலே உன் குமாரனுக்கு, நான் எகிப்திலிருந்து புறப்படுகையில் கர்த்தர் எனக்குச் செய்ததற்காக இப்படிச் செய்கிறேனென்று அறிவிப்பாயாக.

௯ கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, *இது உனக்கு உன் கையில் அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது; ஏனெனில் பலத்த கையினாலே கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். *௫ மோ. ௬. ௮.

௰ ஆகையால் வருஷத்திற்கு வருஷம் இந்தக் கட்டளையை குறித்த காலத்திலே கைக்கொண்டு வருவாயாக.

௰௧ ¶ பின்னையும் செய்யப்படவேண்டியதேதெனில், கர்த்தர் உனக்கும் உன் பிதாக்களுக்கும் ஆணையிட்டபடியே, உன்னைக் கானானியரின் தேசத்திலே வரப்பண்ணி, அதை உனக்குக் கொடுத்தபொழுது,

௰௨ கர்ப்பம்திறந்து பிறக்கிறவை அனைத்தையும் உனக்கிருக்கும் மிருகசீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பாயாக; அவைகளிலிருக்கிற ஆண்கள் கர்த்தருடையவைகள்.

௰௩ ஆனால் கழுதையின் தலையீற்றையெல்லாம் ஒரு ஆட்டுக்குட்டியினால் மீட்டுக்கொள்வாயாக; மீட்காயேயாகில், அதின் தலையை வெட்டிப்போடு; உன் பிள்ளைகளில் முதல்பேறான சகல நரசீவனையோவென்றால் மீட்டுக்கொள்வாயாக.

௰௪ ¶ இதென்னவென்று நாளை உன் குமாரன் உன்னைக் கேட்கிறதுண்டானால், நீ அவனோடே சொல்லவேண்டியதாவது: கர்த்தர் எங்களைப் பலத்த கையினாலே அடிமை வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௰௫ அதேதெனில் எங்களை விடாதபடிக்கு, பார்வோன் கடினமனதாயிருக்கிறபொழுது, கர்த்தர் எகிப்துதேசத்தில், மனிதரின் தலைச்சன் பிள்ளைகள்துவக்கி, மிருகசீவன்களின் தலையீற்றுகள்மட்டும், உண்டாயிருந்த முதல்பேறுகளை எல்லாம் கொன்றுபோட்டார்; ஆனபடியினாலே கர்ப்பம்திறந்து பிறக்கிற ஆணையெல்லாம் நான் கர்த்தருக்குப் பலியிட்டு, என் பிள்ளைகளின் முதல்பேறானவர்களை எல்லாம் மீட்டுக்கொள்ளுகிறேன்.

௰௬ ஆகையால் கர்த்தர் எங்களைப் பலத்த கையினாலே எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதற்கு, இது உன் கையில் அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நி

னைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவதென்று சொல்லுவாயாக என்றான்.

௰௭ ¶ பார்வோன் சனத்தை விட்டபிற்பாடு சம்பவித்ததேதெனில், சமீபமான பெலிஸ்தரின் தேசவழியாய்ப் பராபரன் அவர்களை அழைத்துக்கொண்டு போகவில்லை; ஏனென்றால் சனம் யுத்தத்தைக் காணும்பொழுது, மனஸ்தாபப்பட்டு எகிப்திற்கு திரும்புமென்றார்.

௰௮ ஆகையால் பராபரன் நாணல் சமுத்திரத்தின் வனாந்தர வழியாய்ச் சனத்தைச் சுற்றிப்போகப்பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரரோவெனில் எகிப்துதேசத்திலிருந்து அணியணியாய் வந்து ஏறினார்கள்.

௰௯ மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு வந்தான்; *ஏனெனில் பராபரன் உங்களை விசாரிக்கவே விசாரிப்பார்; அப்பொழுது உங்களோடேகூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து போய் ஏறப்பண்ணுங்களென்று அவன் இஸ்ரவேல் புத்திரரைக் கெட்டியாய் ஆணையிடுவித்துக்கொண்டிருந்தான். *௧ மோ. ௫௰. ௨௫. யோசு. ௨௪. ௩௨.

௨௰ ¶ அவர்கள் சுக்கோத்திலிருந்து பயணம் புறப்பட்டு, வனாந்தரத்தின் எல்லையான ஏத்தாமிலே பாளயம் இறங்கினார்கள்.

௨௧ கர்த்தரோவெனில் அவர்களை வழிநடத்தும்படிக்கு பகலிலே மேகத்தூணிலும், அவர்களுக்கு வெளிச்சம் காட்டும்படிக்கும் அவர்கள் இரவும் பகலும் போகக்கூடும்படிக்கும் இராத்திரியிலே அக்கினித்தூணிலும், அவர்களுக்குமுன்பாக நடந்தார்.

௨௨ பகலிலே மேகத்தூணும் இரவிலே அக்கினித்தூணும் சனத்திற்குமுன்பாக இருந்து விலகிப்போனதில்லை.

௰௪. அதிகாரம்.

௧ கர்த்தர் மோசேயுடனே பேசிச் சொன்னதாவது:

௨ திரும்பிக்கொண்டு மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்சேப்போனுக்கு முன்பாக இருக்கிற இரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயம் இறங்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லு; அதற்கெதிராகச் சமுத்திரக் கரையிலே பாளயம் இறங்குவீர்களாக.

௩ அப்பொழுது அவர்கள், தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள், வனாந்தரம் அவர்களை அடைத்துப்போட்டதென்று பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்துச் சொல்லுவான்.

௪ ஆகையால் பார்வோன் அவர்களைப் பின்தொடரும்படிக்கு, நாம் அவனிருதயத்தை உரம்கொள்ளப்பண்ணி, நாம் கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிகிறதற்காக, பார்வோனாலும் அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவோமென்றார்; அவர்கள் அப்படிச்செய்தார்கள்.

௫ ¶ சனம் ஓடிப்போயிற்றென்று எகிப்தின் இராசாவுக்கு அறிவிக்கப்பட்டபொழுது, சனத்திற்கு விரோதமாகப் பார்வோனும் அவன் ஊழியக்காரரும் வேறுமனதாகி, நாம் இஸ்ரவேலரை நமக்கு வேலைசெய்யாதபடிக்கு இப்படி விட்டது என்னசெய்கையாய் இருக்கிறதென்றார்கள்.

௬ அவன் தன் இரதங்களைப் பூட்டி, தன் சனத்தைக் கூட்டிக்கொண்டு,

௭ தெரிந்துகொள்ளப்பட்ட அறுநூறு இரதங்களையும் எகிப்தினுடைய எல்லா இரதங்களையும் அவைகள் எல்லாவற்றின்மேலும் அதிகாரிகளான ஆதிக்கக்காரரையும் கூட்டிக்கொண்டு போனான்.

௮ கர்த்தர் எகிப்தின் இராசாவாகிய பார்வோனின் இருதயத்தை உரமாக்கினபடியினாலே, அவன் இஸ்ரவேல் புத்திரரைப் பின்தொடர்ந்தான்; இஸ்ரவேல் புத்திரரோவெனில் உயர்ந்த கையினாலே புறப்பட்டிருந்தார்கள்.

௯ எகிப்தியர் அவர்களைப் பின்தொடர்ந்து, பார்வோனின் எல்லாக் குதிரைகளும் இரதங்களும் அவனுடைய குதிரைக்காரரும்

அவனுடைய இராணுவமுமாய், சமுத்திரத்தண்டையிலே பாகால் சேப்போனுக்கு முன்பாக இருக்கிற இரோத் பன்னத்தாகின் முன்னடியிலே பாளயம் இறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டினார்கள்.

௰ ¶ பார்வோன் சமீபித்துவருகிறபொழுது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்தார்கள்; இதோ, எகிப்தியர் தங்கள் பிறகாலே வருகிறதை அவர்கள் கண்டு மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைநோக்கிக் கூப்பிட்டு,

௰௧ மோசேயுடனே, எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லாததினாலேயோ எங்களை வனாந்தரத்திலே சாகும்படிக்கு அழைத்து வந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினாலே, எங்களுக்கு இப்படிச் செய்ததென்னவென்றும்,

௰௨ நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, எங்களை எகிப்தியருக்கு வேலைசெய்ய விட்டுவிடும், ஏனெனில் நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்குத் தாவிலையென்று உம்மோடே சொன்ன வார்த்தை இதுதானல்லவோவென்றும் சொன்னார்கள்.

௰௩ ¶ ஆனால் மோசே சனத்தோடே சொன்னதாவது: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு கர்த்தர் இன்று உங்களுக்குச் செய்யும் அவருடைய இரட்சிப்பைப் பாருங்கள்; ஏனெனில் நீங்கள் இன்று காண்கிற எகிப்தியரை இனி என்றென்றைக்கும் திரும்பக் காண்பதில்லை.

௰௪ கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மா இருப்பீர்களென்றான்.

௰௫ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ நம்மைநோக்கிக் கூப்பிடுகிறதென்ன? பயணம் புறப்பட வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லு.

௰௬ நீயோவென்றால் உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, அதைப் பிளந்துபோடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.

௰௭ நாமோவெனில் இதோ, எகிப்தியர் உங்கள் பிறகாலே வரும்படிக்கு அவர்களிருதயத்தை உரமாக்கி, பார்வோனாலும் அவனுடைய எல்லா இராணுவத்தாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைக்காரராலும் மகிமைப்படுவோம்.

௰௮ இப்படி நாம் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைக்காரராலும் மகிமைப்படுகிறபொழுது, நாம் கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்களென்றார்.

௰௯ ¶ அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடக்கிற பராபரனுடைய தூதனானவர் தாண்டி வந்து, அவர்கள் பிறகாலே நடந்தார்; அவர்களுக்கு முன்பாக இருந்த மேகத்தூண் தாண்டிவந்து, அவர்கள் பிறகாலே நின்று,

௨௰ எகிப்தியரின் சேனைக்கும் இஸ்ரவேலரின் சேனைக்கும் நடுவாக வந்து, இராமுழுவதும் அது இதைச் சேராதபடியாய் அதற்கு மேகமும் அந்தகாரமுமாய் இருந்து, இதற்கோவென்றால் இரவை வெளிச்சமாக்கிற்று.

௨௰௧ ¶ மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேலே நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் சமுத்திரத்தை இராமுழுவதும் பலத்த கீழ்க்காற்றினாலே விலக்கி, அதை வறண்டுபோகப்பண்ணினார்; அப்படியே தண்ணீர்கள் பிளந்து பிரிந்துபோயின.

௨௰௨ இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே பிரவேசித்துப் போனார்கள்; அவர்களுடைய வலதுபுறமாகவும் அவர்களுடைய இடதுபுறமாகவும் தண்ணீர்கள் அவர்களுக்கு மதிலாக இருந்தன.

௨௰௩ ¶ அப்பொழுது எகிப்தியர் பின்தொடர்ந்து, பார்வோனுடைய எல்லாக் குதிரை

களும் அவனுடைய இரதங்களும் அவனுடைய குதிரைக்காரரும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள்.

௨௪ கிழக்கு வெளுத்துவரும் சாமத்திலே சம்பவித்ததேதென்றால், கர்த்தர் அக்கினியும் மேகமுமான தூணிலிருந்து எகிப்தியரின் சேனையை நோக்கிப்பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து,

௨௫ உருளைகள் அவர்கள் இரதங்களிலிருந்து கழலவும், அவர்கள் வருத்தமாய் நடக்கவும்பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர், இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோமாக; ஏனெனில் கர்த்தர் அவர்களுக்காக எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறாரென்றார்கள்.

௨௬ கர்த்தரோவெனில் மோசேயுடனே, தண்ணீர்கள் எகிப்தியர்மேலும் அவர்களுடைய இரதங்களின்மேலும் அவர்களுடைய குதிரைக்காரர்மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின்மேலே நீட்டென்றார்.

௨௭ அப்படியே மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேலே நீட்டினான்; அப்பொழுது விடியற்காலத்திற்குமுன்னே சமுத்திரம் தன் பலத்தோடே திரும்பி வந்தது; எகிப்தியர் அதற்கெதிராக ஓடும்போது, கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவிலே விழத்தள்ளினார்.

௨௮ தண்ணீர்கள் திரும்பி வந்து, இரதங்களையும் குதிரைக்காரரையும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்திற்குள் பிரவேசித்திருந்த பார்வோனின் இராணுவமனைத்தையும் மூடிப்போட்டன; அவர்களில் ஒருவனாகிலும் மீதியானதில்லை.

௨௯ இஸ்ரவேல் புத்திரரோவென்றால், சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; தண்ணீர்கள் அவர்களுக்கு அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் மதிலாக இருந்தன.

௩௰ ¶ இப்படிக் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார்; இஸ்ரவேலர் எகிப்தியரைக் கடல்கரையிலே செத்துக்கிடக்கக் கண்டார்கள்.

௩௧ கர்த்தர் எகிப்தியரில் செய்த அவருடைய பெரிய கைக்கிரியையை இஸ்ரவேல் கண்டது; ஆகையால் சனம் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தர்பேரிலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயின்பேரிலும் விசுவாசித்தது.

௰௫. அதிகாரம்.

அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் பாடின பாட்டாவது: கர்த்தரைப் பாடுவேன்; ஏனென்றால் உயரவே உயர்ந்தார்; குதிரையையும் அதில் ஏறினவனையும் கடலிலே தள்ளினார்.

௨ ¶ *என் பலமும் என் கீதமும் கர்த்தர்; அவர் எனக்கு இரட்சிப்பானவர்; அவரே என் பராபரன், ஆகையால் அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய பராபரன்; ஆகையால் அவரை உயர்த்துவேன். *சங். ௱௰௮. ௰௪.

௩ கர்த்தரே யுத்தம்பண்ண வல்லவர்; கர்த்தரென்பது அவருடைய நாமம்.

௪ பார்வோனின் இரதங்களையும் அவன் இராணுவத்தையும் சமுத்திரத்திலே தள்ளிவிட்டார்; தெரிந்துகொள்ளப்பட்ட அவன் ஆதிக்கக்காரர் நாணல்சமுத்திரத்தில் அமிழ்ந்துபோனார்கள்.

௫ ஆழங்கள் அவர்களை மூடின; கல்லைப் போலப் பள்ளங்களில் இறங்கினார்கள்.

௬ கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகிமையாயிருக்கின்றது; கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிவிட்டது.

௭ உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உமது முக்கியத்தின் மகத்துவத்தினாலே நிர்மூலமாக்கினீர்; உம்முடைய உக்கிரத்தை அனுப்பினீர்; அது அவர்களைத் தாளடி

லைப்போலப் பட்சித்தது.

௮ உமது நாசியின் சுவாசத்தினாலே தண்ணீர்கள் குவிந்தன; நீரோட்டங்கள் குவியலாக நின்றன; ஆழங்கள் நடுக்கடலிலே கெட்டியாயின.

௯ பின் தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆத்துமா அவர்களால் திரப்பப்படும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சிதறடிக்குமென்று பகைஞன் சொன்னான்.

௰ உம்முடைய காற்றினாலே ஊதினீர், கடல் அவர்களை மூடிற்று; இயத்தைப்போல மிகுந்த தண்ணீர்களில் அமிழ்ந்துபோனார்கள்.

௰௧ கர்த்தாவே, தேவர்களில் உமக்கொப்பானவனார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும் துதிகளில் பயப்படத்தக்கவரும் அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கொப்பானவனார்? *

௰௨ உம்முடைய வலதுகையை நீர் நீட்டினீர், பூமி அவர்களை விழுங்கிவிட்டது.

௰௩ நீர் மீட்டுக்கொண்ட இந்தச் சனத்தை உம்முடைய கிருபையினாலே அழைத்துவந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திற்கு நேராக அதை உம்முடைய பலத்தினாலே வழிநடத்தினீர்.

௰௪ சனசதனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிக்கும்; பெலிஸ்தேயாவின் குடிகளை வேதனை பிடிக்கும்.

௰௫ அப்பொழுது ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள்; மோவாபில் வல்லமையுள்ளவர்களை நடுக்கம்பிடிக்கும்; கானானின் குடிகளெல்லாம் கரைந்துபோவார்கள்.

௰௬ பயங்கரமும் திகிலும் அவர்கள்மேலிறங்கும்; கர்த்தாவே, உமது சனம் கடக்கும்மட்டும், நீர் மீட்ட இந்தச் சனமே கடந்துபோகும்மட்டும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினாலே கல்லைப்போல மவுனமாயிருப்பார்கள்.

௰௭ நீர் அவர்களை உட்பிரவேசிக்கப்பண்ணி, அவர்களைக் கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்குப் படைத்த தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ஆண்டவராகிய தேவரீருடைய கரம் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் நாட்டுவீர்.

௰௮ *கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் இராசரிகம்பண்ணுவார்.

*சங். ௯௩. ௧.

௰௯ ¶ ஏனென்றால் பார்வோனின் குதிரை அவன் இரதங்களோடும் அவன் குதிரைக்காரரோடும் சமுத்திரத்துக்குள் பிரவேசித்தது; அப்பொழுது கர்த்தர் சமுத்திரத்தின் தண்ணீர்களை அவர்கள்மேலே திரும்பப்பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரரோவென்றால் சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்துவந்தார்களென்று பாடினார்கள்.

௨௰ ¶ ஆரோனின் சகோதரியாகிய மீரியாமென்ற தீர்க்கதரிசியும் தன் கையிலே உடுக்கை எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரிகளும் உடுக்கைகளையும் கீதவாத்தியங்களையும் எடுத்து, அவள் பிறகாலே புறப்பட்டார்கள்.

௨௰௧ ¶ மீரியாம் அவர்களுக்கு மறுமொழியாக, கர்த்தரைப் பாடுங்கள்; ஏனென்றால் உயரவே உயர்ந்தார்; குதிரையையும் அதிலேறினவனையும் கடலிலே தள்ளினாரென்பது முதலானவைகளைப் பாடினாள்.

௨௰௨ ¶ பிற்பாடு மோசே இஸ்ரவேலை நாணல் சமுத்திரத்தைவிட்டுப் பயணம்புறப்படப்பண்ணினான்; அவர்கள் சூர்வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போய், மூன்றுநாள் வனாந்தரத்திலே தண்ணீர் கிடையாமல் நடந்து,

௨௰௩ மாராவிலே வந்தார்கள்; ஆனால் மாராவின் தண்ணீரைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; ஏனெனில் அது கசப்பாயிருந்தது; ஆனதுகொண்டு அவ்விடத்திற்கு மாராவென்று பேரிடப்பட்டது.

௨௰௪ அப்பொழுது சனம் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து, எதைக் குடிப்போமென்றார்கள்.

௨௫ மோசே கர்த்தரைநோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரிலே போட்டபொழுது, தண்ணீர் தித்திப்பாயிற்று; அவர் அங்கே அவர்களுக்குப் பிரமாணமும் நியாயமும் கட்டளையிட்டு, அங்கே அவர்களைச் சோதித்துச் சொன்னதாவது:

௨௬ நீ உன் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்கவே கேட்டு, அவர் கண்களுக்குச் செம்மையானதைச் செய்து, அவர் கற்பனைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய எல்லாக் கட்டளைகளையும் கைக்கொண்டால், நாம் எகிப்தியரின்மேல் இறங்கப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உன்மேலே இறங்கப்பண்ணோம்; ஏனெனில் நாம் உன் பரிகாரியாகிய கர்த்தரென்றார்.

௨௭ ¶ பிற்பாடு ஏலிமுக்கு வந்தார்கள்; அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தன; அங்கே தண்ணீர்களண்டையிலே பாளயமிறங்கினார்கள்.

௧௬. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரர் ஏலிமைவிட்டுப் பயணம் புறப்பட்டார்கள்; அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, அவர்களுடைய சபையெல்லாம் ஏலிமுக்கும் சீனாய்க்கும் நடுவே இருக்கிற சீன்வனாந்தரத்திலே வந்தது.

௨ அங்கே வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து,

௩ அவர்களோடே சொன்னதாவது: *நாங்கள் இறைச்சிப் பானைகளண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எகிப்துதேசத்திலே, கர்த்தரின் கையினாலே செத்துப்போனோமானால் தாவிலை; ஏனெனில் இந்தக் கூட்டத்தை எல்லாம் பட்டினியினாலே கொன்றுபோட எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களென்றார்கள். *௪ மோ. ௰௧. ௪.

௪ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: இதோ, நாம் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவோம், சனம் நமது நியாயப்பிரமாணத்திலே நடக்குமோ இல்லையோ என்று நாம் சோதிக்கும்படிக்கு, அது புறப்பட்டு அன்றன்றுள்ள படியை ஒவ்வொருநாளிலே சேர்க்கக்கடவது.

௫ ஆறாம் நாளிலோவென்றால், அவர்கள் கொண்டுவருகிறதைச் சேகரம்பண்ணக்கடவார்கள்; அவர்கள் தினம்தினம் சேர்க்கிறதைப்பார்க்கிலும் அப்பொழுது இரண்டத்தனை உண்டாயிருக்குமென்றார்.

௬ ¶ அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரெல்லாரோடும் சொன்னதாவது: கர்த்தர் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரென்பதைச் சாயங்காலத்திலே அறிவீர்கள்.

௭ விடியற்காலத்திலே கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; ஏனெனில் கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள்.

௮ பின்னையும் மோசே சொன்னதாவது: கர்த்தர் உங்களுக்குச் சாயங்காலத்திலே நீங்கள் புசிக்கிறதற்கு இறைச்சியையும், விடியற்காலத்திலே நீங்கள் திர்ப்தியடையும்படிக்கு அப்பத்தையும் கொடுக்கையில் அதைக் காண்பீர்கள்; ஏனெனில் கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கல்ல, கர்த்தருக்கே விரோதமாயிருக்கிறதென்றான்.

௯ பிற்பாடு மோசே ஆரோனுடனே, கர்த்தருக்குமுன்பாகச் சேருங்கள்; ஏனெனில்

உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டாரென்று இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கெல்லாம் சொல்லென்றான்.

௰ ¶ ஆரோன் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கெல்லாம் இதைச் சொல்லுகிறபொழுது, அவர்கள் வனாந்தர திசையாகத் திரும்பிப் பார்த்தார்கள்; அப்பொழுது இதோ, கர்த்தருடைய மகிமை மேகத்திலே காணப்பட்டது.

௰௧ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௨ இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டோம்; நீ அவர்களுடனே பேசி, நீங்கள் சாயங்காலத்திலே இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்திலே அப்பத்தால் திர்ப்தியாகி, நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்பதை அறிவீர்களென்று சொல்லென்றார்.

௰௩ ¶ சாயங்காலத்தில் சம்பவித்ததேதென்றால், *காடைகள் வந்தேறிப் பாளயத்தை மூடின; விடியற்காலத்திலோவென்றால், பாளயத்தைச் சுற்றிப் பனிவிழுந்திருந்தது. *௪ மோ. ௰௧. ௩௧.

௰௪ விழுந்திருந்த பனி எடுபட்டபிற்பாடு, இதோ, வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்சியான பொடித்துணிக்கைகள் இருந்தன; அவைகள் தரையின்மேல் உறைந்த பனியத்தனை பொடியாய்க் கிடந்தன.

௰௫ இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, ஒருவருக்கொருவர் அது மன்னாவென்றார்கள்; ஏனெனில் அது இன்னதென்று அறியாதிருந்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களோடே சொன்னதாவது: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்.

௰௬ கர்த்தர் கற்பித்த காரியம் ஏதென்றால், அவனவன் புசிக்கத்தகும்மட்டும் அதிலெடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்கள் ஆத்துமாக்களுடைய இலக்கத்தின்படியே, அவனவன் தன்தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக ஒவ்வொரு தலைக்கு ஒவ்வொரு நாழிமுக்காடு எடுத்துக்கொள்ளக்கடவீர்களென்றான்.

௰௭ இஸ்ரவேல் புத்திரர் அப்படிச் செய்து, சிலர் அநேகமும் சிலர் கொஞ்சமுமாய்ச் சேர்த்தார்கள்.

௰௮ பிறகு நாழியினால் அளந்தார்கள்; *அநேகமாய்ச்சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை; கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைச்சலானதுமில்லை; அவரவர் தாங்கள் புசிக்கத்தகும்மட்டும் எடுத்துக்கொண்டார்கள். *௨ கொரி. ௮. ௰௫.

௰௯ மோசே அவர்களுடனே, ஒருவனும் அதில் விடியற்காலம்மட்டும் ஒன்றும்வைக்கவேண்டாமென்றான்.

௨௰ ஆனால் மோசேயின் சொல்கேளாமல் சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சிபிடித்து நாற்றம் எடுத்தது; அவர்கள்பேரிலே மோசே கடுங்கோபம் அடைந்தான்.

௨௰௧ அதைக் காலமே அவனவன் புசிக்கத்தகும்மட்டும் சேர்த்தார்கள்; ஏனெனில் வெயில் ஏறுகிறபொழுது உருகிப்போம்.

௨௰௨ ¶ ஆறாம் நாளிலே சம்பவித்ததேதென்றால், அவர்கள் இரண்டத்தனை அப்பம் ஒவ்வொருவனுக்கு இரண்டு இரண்டு நாழியாகச் சேர்த்தார்கள்; அப்பொழுது சபையின் தலைவரெல்லாரும் வந்து, அதை மோசேக்கு அறிவித்தார்கள்.

௨௰௩ அவன் இவர்களோடே சொன்னதாவது: கர்த்தர் சொன்னது இதுதானே; நாளைக் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்ந்திருக்குதல்; நீங்கள் சுடப்போகிறதைச் சுட்டு, சமைக்கப்போகிறதைச் சமைத்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்களென்றான்.

௨௰௪ மோசே கற்பித்தபடியே அதை மறுநாள்மட்டும் வைத்தார்கள்; அப்பொழுது அது நாறினதுமில்லை; அதிலே பூச்சிபிடித்திருந்ததுமில்லை.

௨௰௫ அப்பொழுது மோசே சொன்னதாவ

௨௫ அதை இன்றைக்குப் புசியுங்கள்; ஏனெனில் இன்று கர்த்தரின் ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே கண்டுபிடிப்பதில்லை.

௨௬ ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம் நாள் ஓய்வுநாளாயிருக்கின்றது; அதிலே அது உண்டாயிராதென்றான்.

௨௭ ஏழாம் நாளிலே சம்பவித்ததேதெனில்; சனத்திலே சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; ஆனால் கண்டுபிடியாதே போனார்கள்.

௨௮ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நம்முடைய கற்பனைகளையும் நம்முடைய நியாயப்பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதே போகிறீர்கள்.

௨௯ பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளைக் கொடுத்தபடியினாலே அவர் உங்களுக்கு ஆறாம் நாளிலே இரண்டுநாளுடைய அப்பத்தைக் கொடுக்கிறாரே; ஏழாம் நாளில் ஒருவனும் தன் தானத்திலிருந்து புறப்படாமல், நீங்கள் அவனவன் தன் தன் தானத்தில் இருங்களென்றார்.

௩௰ அப்படியே சனம் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தது.

௩௧ இஸ்ரவேல் வீட்டார் அதற்கு மன்னாவென்று பெயரிட்டார்கள்; *அது கொத்துமல்லி அம்மாத்திரமும் வெண்மையுமாயிருந்தது; அதின் ருசி தேனிட்ட கச்சாயத்திற்கொப்பாயிருந்தது. *௪ மோ. ௰௧. ௭.

௩௨ ¶ மோசே சொன்னதாவது: கர்த்தர் கற்பித்த காரியமேதெனில், நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபொழுது, உங்களுக்கு வனாந்தரத்திலே புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் தலைமுறைகள் பார்க்கும்படிக்கு, அவர்களுக்காகக் காத்துவைப்பதற்கு அதிலே ஒருகாழி நிரம்ப எடுத்துவை என்பதுதான் என்றான்.

௩௩ பின்னையும் மோசே ஆரோனுடனே, *நீ ஒரு பாத்திரத்தை வாங்கி, அதிலே ஒரு காழி மன்னாவைப் போட்டு, அதை உங்கள் தலைமுறைகளுக்காகக் காப்பதற்குக் கர்த்தருக்குமுன்பாக வை என்றான். *எபி. ௯. ௪.

௩௪ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அது காக்கப்படும்படிக்கு, ஆரோன் அதைச் சாட்சிக்குமுன்பாக வைத்தான்.

௩௫ *இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்திற்குவரும்மட்டும் நாற்பது வருஷம் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான்தேசத்தின் எல்லையில் வரும்மட்டாகத்தானே மன்னாவைப் புசித்தார்கள். *யோசு. ௫. ௰௨.

௩௬ ஒருகாழியோவென்றால், மரக்காலிலே பத்தில் ஒரு பங்காயிருக்கின்றது.

௰௭. அதிகாரம்.

பிற்பாடு இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீன்வனாந்தரத்திலிருந்து பயணம் புறப்பட்டு, கர்த்தருடைய கட்டளையின்படியே பண்ணும் தங்கள் பயணங்களில் இரவீதிமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே சனம் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது.

௨ அப்பொழுது சனம் மோசேயோடே வாதுபண்ணி, நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தாருங்களென்றார்கள்; மோசேயோவென்றால் அவர்களுடனே, என்னோடே ஏன் வாதுபண்ணுகிறீர்கள்? கர்த்தனை ஏன் பரிட்சைபார்க்கிறீர்களென்றான்.

௩ ஆனால் சனம் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியினாலே, சனம் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினாலே கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து வந்து ஏறப்பண்ணினதேதென்றார்கள்.

௪ ¶ மோசே கர்த்தனை நோக்கிக் கூப்பிட்டு, இந்தச் சனத்திற்கென்னசெய்வேன்? *அவர்கள் என்னைக் கல்லெறியச் சற்றுத் தப்புமென்றான். *௪ மோ. ௰௪. ௰.

௫ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ சனத்திற்குமுன்பாக நடந்து, இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டி, நீ ஆற்றை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ.

௬ இதோ, நாம் அங்கே ஓரேபிலே உனக்குமுன்பாகக் கல்மலையின்மேல் நிற்போம்; அங்கே கல்மலையை அடிப்பாயாக; அப்பொழுது சனம் குடிக்க, அதிலிருந்து தண்ணீர் புறப்படுமென்றார்; இப்படியே மோசே இஸ்ரவேலருடைய மூப்பரின் கண்களுக்குமுன்பாகச் செய்தான்.

௭ இஸ்ரவேல் புத்திரருடைய வாதின்நிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரோ இல்லையோ என்று, அவர்கள் கர்த்தரைப் பரிட்சைபார்த்ததின்நிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு *மாசா என்றும் மெரிபாவென்றும் பெயரிட்டான். *சங். ௯௫. ௮, ௯.

௮ ¶ ஆமலேக்கியர் வந்து இரவீதிமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்.

௯ அப்பொழுது மோசே யோசுவாவுடனே, நீ நமக்கு மனிதரைத் தெரிந்துகொண்டு புறப்பட்டு, ஆமலேக்குக்கு விரோதமாக யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மேட்டினுடைய சிகரத்தின்மேலே பராபரனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்.

௰ மோசே தனக்குச் சொன்னபடியே யோசுவா ஆமலேக்குக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்படிக்குச் செய்தான்; ஆனால் மோசேயும், ஆரோனும், ஊரும் மேட்டினுடைய சிகரத்தின்மேல் ஏறினார்கள்.

௰௧ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேல் மேல்கொண்டது; ஆனால் அவன் தன் கையைத் தாழவிடுகையில், ஆமலேக் மேல்கொண்டது.

௰௨ மோசேயின் கைகளோவென்றால்பாரமாயின; ஆகையால் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊருமோவெனில் ஒருவன் இந்தப்பக்கமும் ஒருவன் அந்தப்பக்கமுமாயிருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இந்த அடைவாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்மட்டும் ஒரு நேராயிருந்தன.

௰௩ அப்படியே யோசுவா ஆமலேக்கையும் அவன் சனத்தையும் பட்டயத்தின்கருக்கினாலே முறிய அடித்தான்.

௰௪ *பிற்பாடு கர்த்தர் மோசேயுடனே, நீ இதை நினைவுகூருதலுக்காக ஒரு புத்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவிகளுக்கு ஒப்புவி; ஏனெனில் ஆமலேக்கை வானத்தின்கீழிராதபடிக்கு நாசம்பண்ணவே பண்ணுவோமென்றார். *௫ மோ. ௨௫. ௰௭, ௰௯. ௧ சாமு. ௰௫. ௨௩.

௰௫ மோசே ஒரு பீடத்தைக்கட்டி, அதற்குக் கர்த்தர் என்னுடைய கொடியென்று பேரிட்டு,

௰௬ ஆமலேக்கின் கை கர்த்தருடைய ஆசனத்திற்கு விரோதமானபடியினாலே, கர்த்தரின் யுத்தம் தலைமுறை தலைமுறையாக அவனுக்கு விரோதமாக இருக்குமென்றான்.

௰௮. அதிகாரம்.

பராபரன் மோசேக்கும் தமது சனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்ததெல்லாவற்றையும் கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும் *மீதியானில் ஆசாரியனாயிருக்கிற மோசேயின் மாமனாகிய எத்திரோ கேட்டபொழுது, *௨ மோ. ௩. ௧.

௨ அவன் *மோசே திரும்பத் தன்னண்டைக்கனுப்பி இருந்த அவன் பெண்சாதியாகிய சிப்போராளையும், *௨ மோ. ௪. ௨௬.

௩ அவனுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டுபயணப்பட்டான்; *ஒருவன் பேர் கேர்சோன்; ஏனென்றால் அந்நியதேசத்திலே பரதேசியானேனென்றான். *௨ மோ. ௨. ௨௨.

௪ மற்றவன் பேர் எலியேசர்; ஏனென்றால் என் பிதாவின் பராபரன் துணையாயிருந்து, என்னைப் பார்வோனின் பட்டயத்திற்குத் தப்புவித்தாரென்றான்.

௫ மோசேயின் மாமனாகிய எத்திரோ அவன் குமாரரோடும் அவன் பெண்சாதியோடும்கூட மோசே பாளயம் போட்டிருந்த பராபரனுடைய பர்வதம் இருக்கும் வனாந்தரத்திலே அவனண்டையில் வந்து,

௬ எத்திரோ என்ற உன் மாமனாகிய நானும் உன் பெண்சாதியும் அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உன் அண்டைக்கு வந்தோமென்று மோசேக்குச் சொல்லி அனுப்பினான்.

௭ அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டு போய், அவனை வணங்கி முத்தம்செய்தான்; ஒருவரை ஒருவர் சுகமுண்டோவென்று கேட்டு, கூடாரத்திலே வந்தார்கள்.

௮ பிற்பாடு மோசே தன் மாமனுக்குக் கர்த்தர் இஸ்ரவேலுக்காகப் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்தவை எல்லாவற்றையும் வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும் கர்த்தர் தங்களை நீங்கலாக்கி விடுவித்ததையும் விவரித்தான்.

௯ கர்த்தர் இஸ்ரவேலை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அதற்குச் செய்த எல்லா நன்மையினிமித்தமும் எத்திரோ சந்தோஷப்பட்டுச் சொன்னதாவது:

௰ உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த சனத்தை விடுவித்த கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

௰௧ கர்த்தர் எல்லாத் தேவர்களையும்பார்க்கப் பெரியவரென்பதை இப்பொழுது அறிவேன்; ஏனெனில் அவர்கள் இடும்புசெய்த காரியத்திலே அவர்களை மேல்கொண்டாரென்று சொல்லி,

௰௨ மோசேயின் மாமனாகிய எத்திரோ சர்வாங்கதகனத்தையும் பலிகளையும் பராபரனுக்குக் கொண்டுபோய்ச் செலுத்தினான்; பிற்பாடு ஆரோனும் இஸ்ரவேல் மூப்பர் அனைவரும் மோசேயின் மாமனோடேகூடப் பராபரனுக்கு முன்பாக அப்பம் புசிக்கவந்தார்கள்.

௰௩ ¶ மறுநாளிலே சம்பவித்ததேதெனில், மோசே சனத்தை நியாயம்விசாரிக்க உட்கார்ந்தான்; சனம் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் மோசேக்கு முன்பாக நின்றது.

௰௪ அவன் சனத்திற்காகச் செய்ததையெல்லாம் மோசேயின் மாமன் கண்டு, நீ சனத்திற்காகச் செய்கிற இந்தக் காரியமென்ன? நீ ஒருவனே உட்கார்ந்திருக்கச் சனமெல்லாம் காலமேதுவக்கிச் சாயங்காலம்மட்டும் உனக்குமுன்பாக நிற்பானேனென்றான்.

௰௫ அப்பொழுது மோசே தன் மாமனுக்குச் சொன்னது: பராபரனைக் கேட்கச் சனம் என்னண்டைக்கு வரும்.

௰௬ ஏனெனில் அவர்களுக்கு ஒருகாரியம் இருந்தால் என்னண்டைக்கு வருகிறார்கள்; அப்பொழுது நான் அவனவனுக்கும் அவனவனுக்கடுத்தவனுக்கும் நியாயம்தீர்த்து, பராபரனுடைய சட்டங்களையும் அவருடைய நியாயப்பிரமாணங்களையும் அறிவிக்கிறேனென்றான்.

௰௭ அப்பொழுது மோசேயின் மாமன் அவனோடே சொன்னதாவது: நீ செய்கிற காரியம் நல்லதல்ல.

௰௮ நீயும் தொய்யவே தொய்ந்துபோகிறாய்; உன்னோடிருக்கிற இந்தச் சனமும் அப்படித்தான்; ஏனென்றால் அது உனக்கு மிஞ்சின பாரமானகாரியம்; நீ ஒருவனாய் அதைச் செய்யக்கூடாது.

௰௯ இப்பொழுதும் என் சொல்லைக்கேள்; உனக்கு ஒரு ஆலோசனை சொல்லுவேன்; அப்பொழுது பராபரன் உன்னோடுகூட இருப்பார்; சனத்திற்காக நீ பராபரனுக்கு முன்பாக இரு; நீ விசேஷங்களைப் பராபரனண்டைக்குக் கொண்டுபோய்,

௨௰ கட்டளைகளையும் நியாயப்பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் நடக்கவேண்டிய வழியையும் அவர்கள் செய்யவேண்டிய கிரியையையும் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவாயாக.

௨௧ ஆனால் நீ எல்லாச்சனத்திலும் பராபரனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையைப் பகைக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைப் பார்த்து, அவர்களை அவர்கள்மேல் ஆயிரம் பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் வை.

௨௨ அவர்கள் சகல காலத்திலும் சனத்தை நியாயம் விசாரித்து, சகல பெரியகாரியத்தையும் உன்னண்டைக்குக் கொண்டுவந்து, சகல சிறிய காரியத்தையும் தாங்கள் தானே தீர்க்கக்கடவர்கள்; இப்படி உன்மேல் இருக்கிற பாரத்தை லகுவாக்கு, அவர்கள் உன்னோடேகூடச் சுமப்பார்களாக.

௨௩ இந்தப்பிரகாரமாக நீ செய்வதும் இப்படிப் பராபரன் உனக்குக் கட்டளையிடுவதும் உண்டானால், நீ தரித்திருக்கக்கூடும்; இந்த எல்லாச் சனமும் சுகமாய்த் தங்களிடத்திற்கு வந்து சேரலாமென்றான்.

௨௪ ¶ மோசே தன் மாமன் சொல்கேட்டு, அவன் சொன்னபடி எல்லாம் செய்தான்.

௨௫ மோசே இஸ்ரவேலரிலெல்லாம் திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் சனத்தின்மேலே தலைவராக்கினான்.

௨௬ அவர்கள் சகல காலத்திலும் சனத்தை நியாயம் விசாரிப்பார்கள்; பலத்த காரியத்தை மோசே அண்டைக்குக் கொண்டுவந்து, சிறிய காரியத்தை எல்லாம் தாங்கள்தானே தீர்ப்பார்கள்.

௨௭ பிற்பாடு மோசே தன் மாமனை அனுப்பிவிட்டான்; இவன் திரும்பத் தன் தேசத்திற்குப் போய்விட்டான்.

௰௯. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம்மாதமாகிற அன்றுதானே சீனாய்வனாந்திரத்திலே வந்தார்கள்.

௨ அவர்கள் இரவீதிமிலிருந்து பயணம் புறப்பட்டு, சீனாய்வனாந்தரத்திலே வந்து. வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்; அங்கே பர்வதத்திற்கெதிராக இஸ்ரவேல் பாளயம் இறங்கினபொழுது,

௩ மோசே பராபரனண்டைக்கேறினான்; கர்த்தர் பர்வதத்திலிருந்து அவனைக் கூப்பிட்டுச் சொன்னதாவது: நீ யாக்கோபு வீட்டாருக்குச் சொல்லவும் இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியதேதெனில்,

௪ நாம் எகிப்தியருக்குச் செய்ததையும் *நாம் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேலே சுமந்து, உங்களை நம்மண்டையில் சேர்த்ததையும் நீங்கள் கண்டீர்கள். *௫ மோ. ௩௨. ௰௧.

௫ இப்பொழுதும் நீங்கள் நமது சத்தத்தைக் கேட்கவே கேட்டு, நமது உடம்படிக்கையைக் கைக்கொண்டால், சகல சனதனங்களிலும் *நீங்கள் நமக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; ஏனெனில் பூமியெல்லாம் நம்முடையது. *௫ மோ. ௭. ௬.

௬ நீங்கள் நமக்கு *ஆசாரிய இராசாங்கமும் பரிசுத்த சாதியுமாய் இருப்பீர்களென்பது, நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகளென்றார். *௧ பே. ௨. ௯.

௭ ¶ மோசே வந்து சனத்தின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த இந்த வார்த்தைகளை எல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான்.

௮ அப்பொழுது சனமெல்லாம் ஏகமாய்ப் பிரதியுத்தாரம் கொடுத்து, *கர்த்தர் சொன்னவைகளை எல்லாம் செய்வோமென்றார்

கள்; மோசே சனத்தின் வார்த்தைகளை கர்த்தரண்டைக்குத் திரும்பக் கொண்போனான். *௨ மோ. ௨௪. ௩.

௯ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, இதோ, நாம் உன்னோடே சொல்லும் வார்த்தைகளைச் சனம் கேட்டு, உன்னையும் என்றைக்கும் விசுவாசிக்கும்படிக்கு, நாம் மேகத்தின் இருட்டிலே உன்னண்டைக்கு வருவோமென்றார்; ஏனெனில் சனத்தின் வார்த்தைகளை மோசே கர்த்தருக்கு அறிவித்திருந்தான்.

௰ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ சனத்தண்டைக்குப் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தமாக்கு; அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வெளுத்து,

௰௧ மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்; ஏனென்றால் மூன்றாம் நாளிலே கர்த்தர் எல்லாச் சனத்தின் கண்களுக்குமுன்பாகச் சீனாய்ப்பர்வதத்தின்மேல் இறங்குவார்.

௰௨ நீ சனத்திற்குச் சுற்றிலும் எல்லை குறித்து, *பர்வதத்தில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும், எச்சரிக்கையாய் இருங்களென்று சொல்லுவாயாக; ஏனெனில் பர்வதத்தைத் தொடுகிறவனெல்லாம் கொலையுண்ணவே கொலையுண்பான். *எபி. ௰௨. ௰௮.

௰௩ ஒரு கையானாலும் அதைத் தொடவேண்டாம்; மிருகமானாலும் மனிதனாலும் சரி, அதைத் தொட்டால் உயிரோடே வைக்கப்படாமல் கல்லெறியுண்ணவே எறியுண்டு, அல்லது எய்யவே எய்யுண்டு சாவவேண்டும்; எக்காளம் நெடுந்தொனியாகத் தொனிக்கையிலே அவர்கள் பர்வதத்திலே ஏறக்கடவர்களென்றார்.

௰௪ ¶ அப்படியே மோசே பர்வதத்திலிருந்து சனத்தண்டைக்கு இறங்கி, சனத்தைப் பரிசுத்தமாக்கினான்; அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வெளுத்தார்கள்.

௰௫ அவன் சனத்துடனே, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருங்கள், பெண்சாதியைச் சேராதிருங்களென்றான்.

௰௬ ¶ மூன்றாம் நாளிலே விடியற்காலமாகிறபொழுது சம்பவித்ததேதெனில், இடிமுழக்கங்களும் மின்னல்களும் பர்வதத்தின்மேலே கனமேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயின; பாளயத்திலிருந்த சனமெல்லாம் நடுங்கின.

௰௭ அப்பொழுது மோசே சனத்தைப் பராபரனுக்கு எதிர்கொண்டு போக, பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; *அவர்கள் பர்வதத்தின் அடியிலே தாழத் தரித்து நின்றார்கள். *௫ மோ. ௪. ௰௧.

௰௮ கர்த்தர் சீனாய்ப்பர்வதத்தின்மேல் அக்கினியில் இறங்கினபடியினாலே, அவை எல்லாம் புகைக்காடாய் இருந்தன; அதின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; பர்வதமெல்லாம் மிகவும் அதிர்ந்தது.

௰௯ எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாயிற்று; மோசே பேசினான், பராபரன் அவனுக்குச் சத்தமாய் மறுமொழி கொடுத்தார்.

௨௰ கர்த்தர் சீனாய்ப்பர்வதத்தின்மீதில் இருக்கிற கொடுமுடியிலே இறங்கினபொழுது, கர்த்தர் மோசேயைப் பர்வதத்தின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறினான்.

௨௰௧ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: சனம் கர்த்தரண்டைக்கு ஏறிப்பார்க்கிறதற்கு எல்லையைக் கடவாதபடிக்கும், அவர்களில் அநேகர் விழுந்துபோகாதபடிக்கும், நீ இறங்கி அவர்களைத் திடச்சாட்சியாக எச்சரி.

௨௰௨ கர்த்தரண்டையிலே சேருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே அழிக்குதல் செய்யாதபடிக்கு, தங்களைப் பரிசுத்தமாக்கக்கடவர்களென்றார்.

௨௰௩ அப்பொழுது மோசே கர்த்தருடனே, சனம் சீனாய்ப்பர்வதத்தில் ஏறமாட்டாது; ஏனெனில் பர்வதத்தை எல்லை பிரித்து,

அதைப் பரிசுத்தமாக்கென்று தேவரீர் எங்களைத் திடச்சாட்சியாய் எச்சரித்தீர் என்றான்.

௨௪ ஆனால் கர்த்தர் மோசேயுடனே, இறங்கிப் போ; நீயும் உன்னோடேகூட ஆரோனுமாய் ஏறிவரக்கடவீர்கள்; ஆசாரியர்களும் சனமுமோவென்றால், கர்த்தர் தங்களுக்குள்ளே அழிக்குதல் செய்யாதபடிக்கு, அவரண்டைக்கு ஏற எல்லையைக் கடவாதிருப்பார்களாக என்றார்.

௨௫ அப்படியே மோசே சனத்தண்டைக்கு இறங்கி, அதை அவர்களுக்குச் சொன்னான்.

௨௰. அதிகாரம்.

அப்பொழுது பராபரன் பேசிச் சொன்ன எல்லா வார்த்தைகளுமாவது:

௨ ¶ *உன்னை அடிமைவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் பராபரனாகிய கர்த்தர் நாமே. *௫ மோ. ௫. ௬. சங். ௮௧. ௰௧.

௩ நமக்குமுன்பாக உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

௪ ¶ உயர வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டானவைகளுக்கு ஒத்திருக்கிற *ஒரு சுருபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை என்கிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். *௩ மோ. ௨௬. ௧. சங். ௯௭. ௭.

௫ நீ அவைகளை நமஸ்கரிக்கவும் அவைகளைச் சேவிக்கவும் வேண்டாம்; ஏனென்றால் உன் பராபரனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, நம்மைப் பகைக்கிறவர்களுக்கோவென்றால் பிதாக்களுடைய அநியாயத்தைப் பிள்ளைகளிடத்திலே மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம்.

௬ ஆனால் நம்மைச் சிநேகித்து, நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, ஆயிரம் தலைமுறைமட்டும் தயவுசெய்கிறவராயிருக்கிறோம்.

௭ ¶ உன் பராபரனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காயாக; ஏனென்றால் கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

௮ ¶ ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்க நினைப்பாயாக.

௯ ஆறுநாள் நீ வேலைசெய்து உன் கிரியையை எல்லாம் நடப்பிப்பாயாக.

௰ ஆனால் ஏழாம்நாள் உன் பராபரனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகசீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற உன் பரதேசியானாலும் யாதொரு வேலையைச் செய்யவேண்டாம்.

௰௧ ஏனென்றால் கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, *ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார். *௧ மோ. ௨. ௨௩.

௰௨ ¶ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாள்கள் நீடித்திருக்கிறதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

௰௩ ¶ கொலைசெய்யாயாக.

௰௪ ¶ விபசாரம்பண்ணாயாக.

௰௫ ¶ களவுசெய்யாயாக.

௰௬ ¶ உனக்கடுத்தவனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாயாக.

௰௭ ¶ உனக்கடுத்தவன் வீட்டை இச்சியாயாக; உனக்கடுத்தவனுடைய பெண்சாதியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னையும் உனக்கடுத்தவனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காயாக என்றார்.

௰௮ ¶ சனமெல்லாம் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளச் சத்தத்தையும் பர்வதம் புகைகிறதையும் கண்டார்கள்; அதைக் காண்கையில், சனம் பின்வாங்கி, தூரத்திலே நின்று,

௰௯ மோசேயுடனே, நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; நாங்கள் சாவாதபடிக்குப் பராபரன் எங்களோடே பேசாதிருப்பாராக என்றார்கள்.

௨௰ மோசே சனத்துடனே, பயப்படாதிருங்கள்; ஏனெனில் உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவம்செய்யாதபடிக்கு அவர் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், பராபரன் வந்தாரென்றான்.

௨௧ ¶ சனம் தூரத்திலே நின்றது; மோசேயோவென்றால் பராபரன் இருந்த இருளுக்குள்ளே சேர்ந்துபோனான்.

௨௨ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியதேதெனில், நாம் வானத்திலிருந்து உங்களோடே பேசினதை நீங்கள் கண்டீர்கள்.

௨௩ நீங்கள் நமக்குமுன்பாக வெள்ளித்தேவர்களையாகிலும் பொன்தேவர்களையாகிலும் உங்களுக்கு உண்டாக்கவே உண்டாக்கவேண்டாம்.

௨௪ நீ மண்ணான பலிபீடத்தை நமக்குண்டாக்கி, அதின்மேல் உன் தகனபலிகளையும் உன் சமாதான பலிகளையும் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பலி இடுவாயாக; நாம் எவ்விடத்திலாகிலும் நம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபம் பண்ணினால், அவ்விடத்தில் உன்னண்டைக்கு வந்து, உன்னை ஆசீர்வதிப்போம்.

௨௫ கல்லான பலிபீடத்தை நமக்கு உண்டாக்கப்போனாயேயாகில், அதை வெட்டின கல்லுகளாலே கட்டாயாக; ஏனென்றால் நீ உன் உளியை அதின்மேல் நடமாடப்பண்ணுகிறதினால், அதைப் பரிசுத்தக்குலைச்சல் ஆக்குவாய்.

௨௬ நமது பலிபீடத்திற்குமுன்பாக உன் நிருவாணம் காணப்படாதபடிக்கு, நீ அதற்குப் படிகளால் ஏறவும் வேண்டாம்.

௨௧. அதிகாரம்.

பின்னையும் நீ அவர்களுக்கு அறியப்பண்ணவேண்டிய நியாயங்களாவது:

௨ எபிரேய சாதியான அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே இலவசமாகத் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்பட்டுப் போவானாக.

௩ ஒண்டிக்காரனாய் வந்திருந்தானானால், ஒண்டிக்காரனாய்ப் புறப்படுவானாக; பெண்சாதிக்குப் புருஷனாயிருந்தானானால், அவன் பெண்சாதி அவனோடேகூடப் புறப்படுவாளாக.

௪ அவன் எசமாநன் அவனுக்குப் பெண்சாதியைக் கொடுத்ததும், இவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளையாகிலும் பெண்பிள்ளைகளையாகிலும் பெற்றதும் உண்டானால், பெண்சாதியும் அவன் பிள்ளைகளும் அவன் எசமாநனைச் சேர்வார்களாக; அவனோ ஒருவனாய்ப் புறப்படுவானாக.

௫ அந்த வேலைக்காரனோவென்றால், என் எசமாநனையும் என் பெண்சாதியையும், என் பிள்ளைகளையும் சிநேகிக்கிறேன்; நான் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்படுவதில்லை என்று சொல்லவே சொன்னால்,

௬ அவன் எசமாநன் அவனைத் தேவர்களண்டைக்கு அழைத்துப்போய், அவனைக் கதவின்கிட்ட, அல்லது கதவின் நிலையின்கிட்டச் சேரப்பண்ணக்கடவன்; அங்கே அவன் எசமாநன் அவன் காதைக் கம்பியினாலே குத்துவானாக; அதற்குப்பின் என்றைக்கும் அவனுக்கு வேலைசெய்யக்கடவன்.

௭ ¶ ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப்போட்டானானால், அவள் வேலைக்காரர் புறப்படுகிறதுபோலப் புறப்பட ஒண்ணாது.

௮ அவளைத் தனக்கு நியமித்த எசமாந

னின் பார்வைக்கு ஆகாதேபோனால், அவன் மீட்கப்படட்டும்; அவன் அவளைத் துரோகம்பண்ணி, அவளை அந்நியசாதியார் கையிலே விற்றுப்போட அவனுக்கு அதிகாரமில்லை.

௯ அவன் தன் குமாரனுக்கு அவளை நியமித்தானானால், குமாரத்திகளின் நியாயத்திற்குத் தக்கதாய் அவளுக்குச் செய்யக்கடவன்.

௰ அவனுக்கு வேறொருத்தியைக் கொண்டானேயாகில், அவளுடைய பிழைப்பையும் உடுப்பையும் குடிஇருப்பையும் குறைக்காமலிருப்பானாக.

௰௧ அவன் இந்த மூன்றும் அவளுக்குச் செய்யாதேபோனால், அவள் கிரயமில்லாமல் இலவசமாய்ப் புறப்படவேண்டும்.

௰௨ ¶ *ஒருவனைச் சாக அடித்தவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். *௧ மோ. ௯. ௬.

௰௩ * இவன் அவனுக்குச் சதிபண்ணாமல் பராபரன் அவனை இவன் கைக்கு நேரிடப்பண்ணினாரேயாகில், இவன் ஓடிப்போயிருக்கும் அடைக்கலத்தை உனக்குக் கட்டளையிடுவோம். *௪ மோ. ௩௫. ௬.

௰௪ ஒருவன் தனக்கடுத்தவனுக்கு விரோதமாக அவனைச் சர்ப்பனையாய்க் கொன்றுபோடும் அகங்காரத்தைப்பண்ணினானேயானால், அவன் சாவும்படிக்கு அவனை நம்முடைய பீடத்தண்டையிலும் இருந்து பிடித்துக்கொண்டு போவாயாக.

௰௫ தன் தகப்பனையாகிலும் தன் தாயையாகிலும் அடிக்கிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௰௬ ¶ எவனாகிலும் ஒருவன் ஒரு மனிதனைத் திருடி அவனை விற்றுப்போட்டால். அல்லது இவன் அவன் கையிலே கண்டுபிடிக்கப்பட்டானானால், அவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௰௭ ¶ *தன் தகப்பனையாகிலும் தன் தாயையாகிலும் சபிக்கிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். *௩ மோ. ௨௰. ௯.

௰௮ மனிதர் சண்டைபண்ணி, ஒருவன் தனக்கடுத்தவனைக் கல்லினால் எறிந்து அல்லது கையினாலே அடித்ததினாலே, இவன் சாவாமல் கட்டில் கிடையாய் விழுந்து,

௰௯ திரும்ப எழுந்திருந்து, வெளியிலே தன் ஊன்றுகோலைப் பிடித்து நடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்; ஆனால் அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாகக் குணமாக்குவிக்கக்கடவன்.

௨௰ ¶ ஒருவன் தன் அடிமையை, அல்லது தன் அடிமைப்பெண்ணைக் கோலினால் அடிக்கிறதினாலே, இவன் அவன் கையின்கீழ்ச் செத்துப்போனால், பழிக்குப்பழிவாங்கப்படவேண்டும்.

௨௰௧ ஒருநாள் அல்லது இரண்டுநாள் இருந்தானேயாகில், பழிவாங்கப்படவேண்டாம்; ஏனெனில் இவன் அவனுடைய உடைமையாய் இருந்தவன்.

௨௰௨ ¶ மனிதர் சண்டைபண்ணி, கர்ப்பவதியான ஒரு ஸ்திரீயை அடிக்கிறதினாலே. அவளுக்கு வேறே சேதமில்லாமல் கர்ப்பம் விழுந்துபோனால், அப்பொழுது அடித்தவன் ஸ்திரீயின் புருஷன் தன்மேலே சுமத்துகிறதற்குத்தக்கதாய், தருமத்தாருடைய தீர்ப்பின்படியே தண்டம் கொடுக்கவே கொடுக்கவேண்டும்.

௨௰௩ வேறே சேதமுண்டாயிற்றேயானால், நீ சீவனுக்குச் சீவன்,

௨௰௪ கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்,

௨௰௫ சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு, பழிகொடுக்கக்கடவாய்.

௨௰௬ ¶ ஒருவன் தன் அடிமையின் கண்ணிலே, அல்லது தன் அடிமைப்பெண்ணின் கண்ணிலே அடிக்கிறதினாலே அதைக் கெடுத்தால், அவன் இவன் கண்ணுக்குப்பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

௨௭ அவன் தன் அடிமையின் பல்லை, அல்லது தன் அடிமைப்பெண்ணின் பல்லை விழப்பண்ணினால், அவன் இவன் பல்லுக்குப்பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

௨௮ ஒரு மாடு ஒரு ஆண்சாதியை, அல்லது ஒரு பெண்சாதியை முட்டிப்போட்டதினாலே சாவுண்டானால், அந்த மாடு கல்லெறியவே கல்லெறியப்படவும் அதின் மாம்சம் புசிக்கப்படாதே போகவும்கடவது, அப்பொழுது மாட்டின் எசமாநன் ஆக்கினைக்கு நீங்கலானவன்.

௨௯ ஆனால் மாடு முதலே முட்டுகிறதாயிருந்து, அது அதின் எசமாநனுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதைப் பத்திரம்பண்ணாததினாலே, அது ஒரு ஆண்சாதியை அல்லது ஒரு பெண்சாதியைக் கொன்றுபோட்டால், மாடும் கல்லெறியப்படவேண்டும், அதின் எசமாநனும் கொலைசெய்யப்படவேண்டும்.

௩௰ மீட்புக்கு அபராதம் அவன்மேலே சுமத்தப்பட்டதேயானால், அவன் தன் சீவனை மீட்கும்பொருளாக, தன்மேலே சுமத்தப்பட்டபடி எல்லாம் செலுத்தக்கடவன்.

௩௧ அது ஒருவன் மகனை முட்டிப்போட்டாலும் சரி, ஒருவன் மகளை முட்டிப்போட்டாலும் சரி, இந்த நியாயத்தின்படியே அவனுக்குச் செய்யப்படக்கடவது.

௩௨ மாடு ஒரு அடிமையை, அல்லது அடிமைப்பெண்ணை முட்டிப்போட்டிருந்தால், அவன் இவர்களுடைய எசமாநனுக்கு முப்பது சேக்கலிடை வெள்ளியைக் கொடுக்கவும் மாடு கல்லெறியப்படவும் வேண்டும்.

௩௩ ¶ ஒருவன் ஒரு குழியைத் திறந்துவைத்ததினாலே, அல்லது ஒரு குழியை வெட்டி அதை மூடாதே போனதினாலே, அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந்தால்,

௩௪ குழிக்குடையவன் அதின் விலையைக் கொடுத்து பணமாய் அதின் எசமாநனுக்குச் செலுத்தவும் கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

௩௫ ¶ ஒருவனுடைய மாடு அவனுக்கு அடுத்தவனுடைய மாட்டை முட்டிப்போட்டதினாலே இது செத்தால், அவர்கள் உயிரோடிருக்கிற மாட்டை விற்று, அதின் கிரயத்தைப் பங்கிட்டு, செத்ததையும் பங்கிட்டுக்கொள்ளக்கடவர்கள்.

௩௬ அல்லவென்று, அந்த மாடு முதலே முட்டுகிறமாடென்று அறியப்பட்டிருந்தும், அதின் எசமாநன் அதைப் பத்திரம்பண்ணாதிருந்தானானால், அவன் மாட்டுக்கு மாட்டைக் கொடுக்கவே கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

௨௨. அதிகாரம்.

எவனொருவன் மாட்டை அல்லது ஒரு ஆட்டைத் திருடி அதை அடித்தால், அல்லவென்று அதை விற்றுப்போட்டால், அவன் மாட்டுக்கு ஐந்துமாடுகளையும் ஆட்டுக்கு நான்கு ஆடுகளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்.

௨ ¶ திருடன் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டுச் செத்தால், அவனுக்காக இரத்தப்பழி சுமராது.

௩ சூரியன் அவன்மீதில் உதித்திருந்ததேயானால், அவனுக்காக இரத்தப்பழி சுமரும்; திருடனோவென்றால், திரும்பச் செலுத்தவே செலுத்தக்கடவன்; அவனுக்கு இல்லாதிருந்தால், தன் களவுக்காக விலைப்படக்கடவன்.

௪ அவன் திருடின மாடாகிலும், கழுதையாகிலும், ஆடாகிலும் உயிருடனே அவன் கையிலே கண்டுபிடிக்கப்பட்டால், இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தக்கடவன்.

௫ ¶ வயலையாகிலும் திராட்சத்தோட்டத்தையாகிலும் பட்டிமேய, ஒருவன் தன் மிருகசீவன்களை வேறொருவன் நிலத்திலே விட்டால், அவன் தன் வயலிலே நலமானதிலும் தன் திராட்சத்தோட்டத்திலே நல

மானதிலும் எடுத்து, உத்தரவாதம்பண்ணக்கடவன்.

௬ அக்கினி எழும்பி, முள்ளுக்களிலே பற்றிக்கொண்டு, கதிர்ப்போராயாகிலும் முதிர்ப்பயிராயாகிலும் நிலத்திலுள்ளதையாகிலும் சுட்டுப்போட்டால், அக்கினியைக் கொளுத்தினவன் அக்கினிச் சேதத்திற்கு உத்தரவாதம் பண்ணவேண்டும்.

௭ ¶ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்திலே திரவியத்தையாகிலும் உடைமைகளையாகிலும் அடைக்கலமாக வைத்திருக்கும்போது அது அவன் வீட்டிலிருந்து திருடப்பட்டுப்போனால், அப்பொழுது திருடன் அகப்பட்டானேயாகில், அவன் இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தவேண்டும்.

௮ திருடன் அகப்படாதேபோனால், அப்பொழுது அந்த வீட்டுக்காரன் தனக்கடுத்தவனுடைய பொருளின்மேலே தன் கையைப் போட்டதில்லையோ என்பதற்காக, *தேவர்களண்டைக்குக் கொண்டுபோகக்கடவன். *௨ மோ. ௨௧. ௬.

௯ ஒரு மாட்டுக்காகிலும் கழுதைக்காகிலும் ஆட்டுக்காகிலும் வஸ்திரத்திற்காகிலும் ஒருவன் தன்னுடையதென்று சொல்லுகிற காணாமல்போன யாதொரு பொருளுக்காகிலும் அடுத்த அநியாயத்தினுடைய யாதொரு விசேஷமிருந்தால், இருதிறத்தாருடைய நியாயம் தேவர்களண்டைக்கு வரக்கடவது; தேவர்கள் எவனைக் குற்றவாளியென்று தீர்க்கிறார்களோ, அவன் தனக்கடுத்தவனுக்கு இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தக்கடவன்.

௰ ¶ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்தில் ஒரு கழுதை, மாடு, ஆடு முதலான மிருகசீவனை அடைக்கலமாக விட்டிருக்கும்போது அது செத்தால், அல்லது சேதப்பட்டால், அல்லது ஒருவரும் காணாமல் ஓட்டிக்கொண்டு போகப்பட்டால்,

௰௧ அப்பொழுது அவன் தன் கையைத் தனக்கடுத்தவனுடைய பொருளின்மேலே போட்டதில்லையோ என்பதற்காக, கர்த்தருடைய ஆணை இருவருக்குள்ளும் நடுவிருக்கக்கடவது; ஆகில் அதின் எசமானன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்; மற்றவன் கொடுக்கத் தேவையில்லை.

௰௨ அது அவன் வசத்திலிருந்து திருடப்பட்டுப் போயிற்றேயானால், அவன் அதின் எசமானனுக்கு அதற்காக உத்தரவாதம் பண்ணக்கடவன்.

௰௩ அது பீறப்பட்டதேயானால், அதற்குச் சாட்சியை ஒப்புவிப்பானாக, பீறுண்டதற்காக அவன் உத்தரவாதம் பண்ணத்தேவையில்லை.

௰௪ ¶ ஒருவன் தனக்கடுத்தவன் கையில் இரவலாக வாங்கினது அதின் எசமானனண்டையில் இராதிருக்கும்போது சேதப்பட்டால், அல்லது செத்துப்போனால், அவன் உத்தரவாதம் பண்ணக்கடவன்.

௰௫ அதின் எசமானன் அண்டையில் இருந்தானேயாகில், இவன் உத்தரவாதம் பண்ணுவதில்லை; அது கொடைக்கூலிக்கு வாங்கப்பட்டிருந்ததானால், அது அவன் கொடைக்கூலிக்கு வந்த சேதம்.

௰௬ ¶ நியமிக்கப்படாத ஒரு கன்னியாஸ்திரியை ஒருவன் மோசம்போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காகப் பரியம்கொடுக்கவே கொடுத்து, அவளை விவாகம்பண்ணவேண்டும்.

௰௭ அவன் தகப்பன் அவளை இவனுக்குக் கொடுக்கமாட்டோம் என்றானேயாகில், இவன் கன்னியாஸ்திரிகளுக்காகக் கொடுக்கப்படுகிற பரியமுறைமையின்படியே திரவியம் நிறுத்துக்கொடுக்கவேண்டும்.

௰௮ ¶ சூனியக்காரியை நீ உயிரோடே வைக்கவேண்டாம்.

௰௯ ¶ *மிருகத்தோடே புணர்ச்சிபண்ணுகிறவனெல்லாம் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். *௩ மோ. ௨௰. ௰௫.

௨௰ ¶ கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்காரிக்கப்படக்கடவன்.

௨௰௧ ¶ *பரதேசியைச் சிறுமைப்படுத்தாம

னும் ஒடுக்காமலும் இருப்பாயாக; ஏனெனில் நீங்கள் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள். *௩ மோ. ௰௯. ௩௩, ௩௪.

௨௨ ஒரு கைம்பெண்சாதியையும் தாய்தகப்பனில்லாத பிள்ளையையும் ஒடுக்காமலிருப்பீர்களாக.

௨௩ அவர்களை நீ ஒடுக்கவே ஒடுக்கும்போது, அவர்கள் நம்மை நோக்கிக் கூப்பிடவே கூப்பிட்டால், அவர்கள் கூப்பிடுதலை நாம் கேட்கவே கேட்டு,

௨௪ நாம் கோபமூண்டவராகி, உங்கள் பெண்சாதிகள் கைம்பெண்சாதிகளும் உங்கள் பிள்ளைகள் தாய்தகப்பனில்லாத பிள்ளைகளுமாய்ப் போக, உங்களைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவோம்.

௨௫ ¶ *உன்னிடத்திலே சிறுமைப்பட்டிருக்கிற நம்முடைய சனத்தில் ஒருவனுக்கு நீ திரவியம் கடனாகக்கொடுத்தால், அவனுக்கு வட்டி சுமத்துகிறவன்போல இராயாக. *௩ மோ. ௨௫. ௩௫, ௩௬.

௨௬ *உனக்கு அடுத்தவனுடைய வஸ்திரத்தை நீ அடகாக வாங்கினால், பொழுது புகாததற்குமுன்னே அதை அவனுக்குத் திரும்பக் கொடுப்பாயாக. *௫ மோ. ௨௪. ௰௨, ௰௩.

௨௭ ஏனெனில் அவன் மூடிக்கொள்ளுகிறது அதுமாத்திரம்தானே; அதுவே அவன் தன் தோலை மூடிக்கொள்ளுகிற அவனுடைய வஸ்திரம்; வேறு எதினாலே மூடிக்கொண்டு படுத்துக்கொள்ளுவான்; ஆகையால் சம்பவிப்பதேதெனில், அவன்நம்மை நோக்கிக் கூப்பிடும்பொழுது, நாம் கேட்போம்; ஏனெனில் நாம் இரக்கமுள்ளவர்.

௨௮ ¶ தேவர்களைத் தூஷணியாமலும் உன் சனத்தில் அதிபதியானவனைச் சபிக்காமலும் இருப்பாயாக.

௨௯ ¶ உன் போர்க்களத்தின் காணிக்கையையும் உன் ஆலையின் காணிக்கையையும் செலுத்தத் தாமதிக்கவேண்டாம்; உன் குமாரரில் முதல்பேறானவனை நமக்குக் கொடுப்பாயாக.

௩௰ உன் மாடுகளிலும் உன் ஆடுகளிலும் அப்படித்தான் செய்வாயாக; குட்டி ஏழுநாள் தன் தாயோடே இருக்கட்டும், எட்டாம் நாளிலே அதை நமக்குச் செலுத்துவாயாக.

௩௧ ¶ நீங்கள் நமக்குப் பரிசுத்த மனிதராயிருக்கக்கடவீர்கள்; ஆகையால் வெளியிலே பீறுண்டுபோன மாம்சத்தைப் புசியாமல், அதை நாய்களுக்குப் போடுவீர்களாக.

௨௩. அதிகாரம்.

அபாண்டமான விசேஷத்தை ஏற்றுக்கொள்ளாயாக; கொடுமையுள்ள சாட்சியாயிருக்க ஆகாதவனோடே கலவாயாக.

௨ பொல்லாப்புச் செய்யப்போகிற திரளினைப் பின்செல்லாமலும், நியாயத்தைப் புரட்டப்போகிற திரளினர்களின் பிறகாலே சாய்கிறதற்கான உத்தரவை வழக்கிலே சொல்லாமலும் இருப்பாயாக.

௩ தரித்திரனுடைய முகத்தையும் அவன் வியாச்சியத்திலே பாராயாக.

௪ ¶ சிதறிப்போனதாகிய *உன் சத்துருவின் மாட்டையாகிலும் அவனுடைய கழுதையையாகிலும் சந்தித்தாயானால், அதை அவனண்டையிலே திருப்பவே திருப்பிக்கொண்டு போவாயாக. *லூக். ௬. ௨௭.

௫ உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதையைத் தன் சுமையின்கீழ்க் கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவாதிருப்பாயோ? அவனோடேகூட அதற்கு உதவவே உதவுவாயாக.

௬ ¶ உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்திலே அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.

௭ கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக; குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைப்படுத்தாயாக; ஏனெனில் ஆகாதவனை நீதிமானாகத் தீரோம்.

௮ ¶ *பரிதானம் வாங்காயாக; ஏனெனில் பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குரு

டாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்குகின்றது. *௫ மோ. ௰௬. ௰௯.

௯ ¶ *பரதேசியை ஒடுக்காயாக; ஏனெனில் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்த நீங்கள் பரதேசியின் இருதயத்தை அறிவீர்கள். *௨ மோ. ௨௨. ௨௧.

௰ ¶ நீ ஆறுவருஷம் உன் தேசத்தை விதைத்துப் பயிரிட்டு அதின் பலனைச் சேர்த்து,

௰௧ ஏழாம் வருஷத்திலோவென்றால் அதை உன் ஜனத்தில் எளியவர்கள் புசிக்கும்படிக்கும், மீதியானதை வெளியின் சிவன்கள் தின்னும்படிக்கும், சும்மா வைத்துவிடுவாயாக; உன் திராட்சத்தோட்டத்திற்கும் உன் ஒலிவத்தோப்புக்கும் அப்படியே செய்வாயாக.

௰௨ ¶ நீ ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம் நாளிலோவெனில் உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் பரதேசியும் முசிப்பாறவும், ஓய்ந்திருப்பாயாக.

௰௩ நாம் உங்களுக்குச் சொன்னதிலெல்லாம் சாவதானமாய் இருங்கள்; வேறே தேவர்களின் பேரை நினையிர்களாக; அது உன் வாயினாலே கேட்கப்படாதிருப்பதாக.

௰௪ ¶ வருஷத்தில் மூன்றுதரம் நமக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக.

௰௫ நீ புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையைக் கைக்கொண்டு, நாம் உனக்குக் கற்பித்தபடி ஆபிப் மாதத்தினுடைய திட்டமான காலத்திலே ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பாயாக; ஏனெனில் அதிலே எகிப்திலிருந்து புறப்பட்டாய்; ஆனால் வெறுங்கையாய் நமக்கு முன்பாகக் காணப்படீர்களாக.

௰௬ நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதல்பலனைச் செலுத்துகிற அறுப்புநாளின் பண்டிகையையும், வருஷமுடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபொழுது, சேர்ப்பின் பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

௰௭ *வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்சாதியெல்லாம் கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதிக்கு முன்பாகக் காணப்படக்கடவது. *௨ மோ. ௩௪. ௨௩.

௰௮ ¶ புளித்தமா இருக்கும்போது நமது பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக; நம்முடைய பண்டிகையின் கொழுப்பு விடியற்காலம்மட்டும் இராத்தங்கவும் வேண்டாம்.

௰௯ உன் சிமையின் முதல்விளைச்சல்களில் முந்தின கனியை உன் பராபரனாகிய கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவருவாயாக; *வெள்ளாட்டுக்குட்டியை அதினுடைய தாயின் பாலோடேகூடச் சமைக்காயாக. *௩ மோ. ௨௨. ௨௮.

௨௰ ¶ இதோ, உன்னை வழியிலே காக்கிறதற்கும், நாம் ஆயத்தம்பண்ணின தானத்திற்கு உன்னைக் கொண்டுபோகிறதற்கும், நாம் ஒரு தூதனை உனக்குமுன்பாக அனுப்புகிறோம்.,

௨௧ நீ அவர் முகத்திற்கு முன்பாகச் சாவதானமாயிருந்து, அவர் சத்தத்தைக் கேள்; அவரைக் கோபப்படுத்தாதே; ஏனெனில் உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை, அதேனென்றால் நமது நாமம் அவருள்ளத்தில் இருக்கின்றது.

௨௨ நீ அவர் சத்தத்தைக் கேட்கவே கேட்டு, நாம் சொல்லுவதை எல்லாம் செய்தாயேயாகில், நாம் உன்னைப் பகைக்கிறவர்களைப் பகைத்து, உன்னை இறுகப்பிடிக்கிறவர்களை இறுகப்பிடிப்போம்.

௨௩ ஏனெனில் நம்முடைய தூதர் உனக்குமுன்பாக நடந்து, உன்னை எமோரியரும். ஏத்தியரும், பேரீசியரும், கானானியரும். ஏவியரும், எபூசியரும் இருக்கிற இடத்திலே கொண்டுபோவார்; அவர்களை நாம் அதம்பண்ணுவோம்.

௨௪ நீ அவர்கள் தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும் அவர்களைச் சேவிக்காமலும் அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலம்பண்ணவே

பண்ணி, அவர்கள் சிலைகளை உடைக்கவே உடைத்துப்போடுவாயாக.

௨௫ உங்கள் பராபரனாகிய கர்த்தரையே சேவிப்பீர்களாக; அப்பொழுது அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்; அப்பொழுது வியாதியை உன் நடுவிலிருந்து விலக்குவோம்.

௨௬ கர்ப்பம் விழுகிறவளும் மலடியும் உன் தேசத்திலே உண்டாயிருப்பதில்லை; உன் நாள்களின் இலக்கத்தை நிறைவேற்றுவோம்.

௨௭ நாம் நம்முடைய பயங்கரத்தை உ[illegible]க்குமுன்பாக அனுப்பி, நீ வந்துசேரும் எல்லாச் சனத்தையும் கலங்கடித்து, உன் சத்துருக்களை எல்லாம் உனக்கு முதுகைக் காட்டப்பண்ணி,

௨௮ உன் முகத்திற்கு முன்பாக ஏவியனையும், கானானியனையும், ஏத்தியனையும் துரத்திவிட, வண்டுகளை உனக்குமுன்பாக அனுப்புவோம்.

௨௯ தேசம் பாழாகாமலும் வெளியின் மிருகங்கள் உனக்கு விரோதமாய் வர்த்திக்காமலும் இருக்கும்படிக்கு, நாம் அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே உனக்கு முன்பாகத் துரத்திவிடாமல்,

௩௰ நீ பலுகி, தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்மட்டும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உனக்கு முன்பாகத் துரத்திவிட்டு,

௩௧ ¶ உன் எல்லையை நாணல்சமுத்திரம் துவக்கி, பெலிஸ்தரின் சமுத்திரம்மட்டாகவும்; வனாந்தரம்துவக்கி நதிமட்டாகவும் வைப்போம்; ஏனெனில் நாம் தேசத்தின் குடிகளை, நீ அவர்களை உனக்குமுன்பாகத் துரத்திவிடும்படிக்கு, உங்கள் கைகளில் ஒப்புக்கொடுப்போம்.

௩௨ அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடம்படிக்கை பண்ணாயாக.

௩௩ அவர்கள் உன்னை நமக்கு விரோதமாகப் பாவம்செய்யப் பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிரார்களாக; ஏனெனில் நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், உனக்குக் கண்ணியாகவே இருக்குமென்றார்.

௨௪. அதிகாரம்.

பிற்பாடு அவர் மோசேயோடே சொன்னதாவது: நீயும், ஆரோனும், நாதாகும், அபீகூவும், இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது பேருமாய்க் கர்த்தரண்டைக்கு ஏறிவந்து, தூரத்திலிருந்து பணியுங்கள்.

௨ இவர்கள் கர்த்தரண்டைக்குச் சேராமல், மோசே ஒருவனாய்ச் சேரக்கடவன்; சனம் இவனோடேகூட ஏறிவரவேண்டாமென்றார்.

௩ ¶ மோசே வந்து, கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் எல்லா நியாயங்களையும் சனத்திற்கு விவரித்தான்; அப்பொழுது சனம் எல்லாம் ஒரு சத்தமாய், கர்த்தர் பேசின எல்லா வார்த்தைகளின்படியேயும் செய்வோமென்று பிரதியுத்தாரம் சொன்னார்கள்.

௪ அப்பொழுது மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்திருந்து, பர்வதத்திற்கு அடியிலே ஒரு பலிபீடத்தையும் இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களையும் கட்டி,

௫ இஸ்ரவேல் புத்திரரில் வாலிபரை அனுப்பினான்; அவர்கள் தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதான பலிகளாகக் காளை எருதுகளைப் பலியிட்டார்கள்.

௬ அப்பொழுது மோசே பாதி இரத்தத்தைவாங்கி, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே தெளித்து,

௭ உடம்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு, சனத்தின் காதுகள்கேட்க வாசித்தான்; அப்பொழுது அவர்கள் கர்த்தர் சொன்னதை எல்லாம் செய்து, கீழ்ப்படிவோமென்றார்கள்.

௮ அப்பொழுது மோசே இரத்தத்தை வாங்

தி, *சனத்தின்மேலே தெளித்து, இதோ இந்த எல்லா வார்த்தைகளின்மேலும் கர்த்தர் உங்களோடே பண்ணின உடம்படிக்கையின் இரத்தமென்றான். *எபி.௯.௨௰.

௯ ¶ பிற்பாடு மோசேயும், ஆரோனும், நாதாபும், அபீகூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய்,

௰ *இஸ்ரவேலின் பராபரனைக் கண்டார்கள்; அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லின் வேலைக்கொப்பாகவும், வானத்தின் காந்தியான பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. *எசே. ௧. ௨௬.

௰௧ அவர் இஸ்ரவேல் புத்திரருடைய தலைவர்பேரிலே தம்முடைய கையைப் போகவிடாதிருந்தார்; அவர்கள் பராபரனைத் தரிசித்தபிற்பாடு புசித்துக் குடித்தார்கள்.

௰௨ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ நம்மண்டைக்குப் பர்வதத்தின்மேல் ஏறிவந்து, அங்கே இரு; நாம் உனக்குக் கற்பலகைகளையும், அவர்களை உபதேசிப்பதற்கு நாம் எழுதின நியாயப்பிரமாணத்தையும், கற்பனைகளையும் கொடுப்போம் என்றார்.

௰௩ அப்பொழுது மோசே தன் வேலைக்காரனாகிய யோசுவாவோடுங்கூட எழுந்து போனான்; மோசே பராபரனுடைய பர்வதத்தில் ஏறினான்.

௰௪ அவன் மூப்பரோடே சொன்னதாவது: நாங்கள் உங்களண்டைக்குத் திரும்பி வரும்மட்டும், இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள்; இதோ, ஆரோனும் ஊரும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; எவனுக்குக் கலைகாரியங்கள் உண்டோ, அவன் அவர்களண்டையிலே சேரக்கடவனென்றான்.

௰௫ ¶ மோசே பர்வதத்தில் ஏறினபொழுது, ஒரு மேகம் பர்வதத்தை மூடிற்று.

௰௬ கர்த்தருடைய மகிமை சீனாய்பர்வதத்தின்மேலே தங்கியிருந்தது; மேகம் ஆறுநாள் அதை மூடியிருந்தபிற்பாடு, அவர் ஏழாம் நாளிலே மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார்.

௰௭ பர்வதத்தின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் உருவு, இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போலிருந்தது.

௰௮ மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து, பர்வதத்தில் ஏறி, இரவும் பகலும் நாற்பதுநாள் பர்வதத்திலிருந்தான்.

௨௫. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நமக்குக் காணிக்கையை எடுத்துச் செலுத்தும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரரோடே பேசு; நமக்குச் செலுத்தும் காணிக்கையை *மனப்பூர்வமான எல்லாருடைய கையிலும் வாங்குவீர்களாக. *௨ மோ. ௩௫. ௫. ௨ கொரி. ௯. ௰௩.

௩ நீங்கள் அவர்கள் கையில் வாங்கவேண்டிய காணிக்கையாவது: பொன்னும் வெள்ளியும் வெண்கலமும்,

௪ இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும்,

௫ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களும், தகசுகளின் தோல்களும், சீத்திம் மரங்களும்,

௬ விளக்குக்கு எண்ணெயும், அபிஷேக எண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களும், தூபங்காட்டுதலுக்குச் சுகந்தவர்க்கங்களும்,

௭ ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் கோமேதகக்கல்லுகளும், பதித்துவைக்கும் இரத்தினங்களும்தானே.

௮ நாம் தங்கள் நடுவிலே வாசம்பண்ண, நமக்கொரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.

௯ வாசஸ்தலத்தின் மாதிரியையும், அதினுடைய எல்லாப் பண்டம்பாடிகளின் மாதிரியையும், நாம் உனக்குக் காண்பிக்கும்படி எல்லாம் அதைச் செய்வீர்களாக.

௰ ¶ சீத்திம் மரங்களால் ஒரு பெட்டி

யைப் பண்ணக்கடவார்கள்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமாயிருப்பதாக.

௧௧ அதை எங்கும் சுத்தமான பொன்தகட்டால் மூடுவாயாக; நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதனால் மூடி, அதின்மேல் சுற்றிலும் பொன்னான திரணையை உண்டாக்கி,

௧௨ அதற்கு நான்கு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கோடிகளிலே, இந்தப்பக்கம் இரண்டு வளையங்களும், அந்தப்பக்கம் இரண்டு வளையங்களும் இருக்கும்படிக்குத் தைத்து,

௧௩ சீத்திம் மரங்களான வாரைகளைச் செப்பனிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

௧௪ அந்த வாரைகளால் பெட்டியைச்சுமக்கும்படிக்கு, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய்.

௧௫ அந்த வாரைகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல், அதின் வளையங்களிலே இருக்கக்கடவது.

௧௬ நீ அந்தப் பெட்டியிலே நாம் உனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைத்து,

௧௭ ¶ சுத்தமான பொன்னினாலே கிருபாசனமான மூடியைப் பண்ணுவாயாக; அது இரண்டரைமுழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கக்கடவது.

௧௮ பொன்னான இரண்டு கேருபீன்களையும் அடிக்கப்பட்ட பொன்னினாலே உண்டாக்கி, கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களில் இருக்கப்பண்ணக்கடவாய்.

௧௯ ஒரு கேருபீன் இந்தப்புறத்து ஓரத்திலும் மற்றக் கேருபீன் அந்தப்புறத்து ஓரத்திலும் இருக்கத்தானே; அந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களிலே அதனோடே ஏக வேலையாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பண்ணக்கடவீர்கள்.

௨௰ அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளாலே கிருபாசனமான மூடியை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்களுமாயிருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனமான மூடியை நோக்குகிறவைகளாயிருப்பதாக.

௨௧ நீ கிருபாசனமான மூடியைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டியிலோவென்றால், நாம் உனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைப்பாயாக.

௨௨ *அங்கே உன்னைச் சந்திப்போம்; கிருபாசனமான மூடியின்மீதிலும் சாட்சியினுடைய பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலுமிருந்து நாம் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப்போகிறவைகளை எல்லாம் உன்னோடே சொல்லுவோம். *௪ மோ. ௭. ௮௯.

௨௩ ¶ சீத்திம் மரங்களால் ஒரு மேசையையும் பண்ணுவாயாக; அது இரண்டு முழ நீளமும் ஒருமுழ அகலமும் ஒன்றரைமுழ உயரமுமாயிருக்கக்கடவது.

௨௪ அதை நீ சுத்தமான பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்னான திரணையை உண்டாக்கி,

௨௫ சுற்றிலும் அதற்கு நான்கு விரல்கடையான சட்டத்தையும் அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன்னான திரணையையும் உண்டாக்கி,

௨௬ அதற்கு நான்கு பொன் வளையங்களைப் பண்ணி, அவைகளை அதின் நான்கு கால்களுக்கு இருக்கும் நான்கு கோடிகளில் தைக்கக்கடவாய்.

௨௭ அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கும் வாரைகளுக்கு இடங்களாயிருக்கும்படிக்கு, சட்டத்திற்கு எதிரே இருக்கவேண்டும்.

௨௮ அந்த வாரைகளைச் சீத்திம் மரங்களாலே பண்ணி, அவைகளைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்; அவைகளால் மேசை சுமக்கப்படுவது.

௨௯ அதின் கலங்களையும் தூபக்கிண்ணிகளையும், தட்டுகளையும், அதற்கு அடுத்தவைகளாகிய வார்க்கிற கரகங்களையும் பண்ணக்கடவாய்; சுத்தமான பொன்னினாலே உண்டாக்கக்கடவாய்.

௩௰ மேசையின்மேலே எப்பொழுதும் எனக்குமுன்பாகச் சமுகத்து அப்பங்களை வைக்கக்கடவாய்.

௩௧ ¶ சுத்தமான பொன்னினாலே ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக; அது அடிக்கப்பட்ட பொன்னினாலே பண்ணப்படவேண்டும்; அதின் தண்டும், அதின் கிளைகளும், அதின் மொக்குகளும், அதின் மாதளம்பழங்களும், அதின் பூக்களும் அதனோடொன்றாயிருப்பதாக.

௩௨ ஆறு கிளைகள் அதின் பக்கங்களிலிருந்து புறப்படுவது; குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் ஒரு பக்கத்திலும், குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் மறுபக்கத்திலுமிருந்து புறப்படுவது.

௩௩ ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்கொட்டைகளின் சாயலான மூன்று மொக்குகளும், ஒரு மாதளம்பழமும், ஒரு பூவும் இருப்பதாக; குத்துவிளக்கிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளிலும் அப்படி இருக்கவேண்டும்.

௩௪ விளக்குத்தண்டிலோவென்றால், வாதுமைக்கொட்டைகளின் சாயலான நான்கு மொக்குகளும், அதின் மாதளம்பழங்களும், அதின் பூக்களும் இருப்பதாக.

௩௫ அதிலிருந்து புறப்படுகிற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் இருப்பதாக; விளக்குத்தண்டிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளுக்கும் அப்படி இருக்கவேண்டும்.

௩௬ அவைகளின் மாதளம்பழமும் அவைகளின் கிளைகளும் அதிலிருந்து உண்டானவைகளாயிருப்பதாக; இவையெல்லாம் அடிக்கப்பட்ட சுத்தமான பொன்னாகிய ஒரே துண்டாயிருக்கவேண்டும்.

௩௭ அதின்மேல் ஏழு விளக்குகளையும் உண்டாக்குவாயாக; அதற்கு நேரெதிராய் எரியும்படிக்கு ஏற்றப்படக்கடவது.

௩௮ அதின் கத்திரிகளும் விளக்கணைக்கிற கருவிகளும் சுத்தப் பொன்னாயிருப்பதாக.

௩௯ அதை இந்த எல்லா முஸ்தீதுகளோடும்கூட ஒரு தாலந்து சுத்தமான பொன்னினாலே உண்டுபண்ணுவார்களாக.

௪௰ *பர்வதத்திலே உனக்குக் காண்பிக்கப்பட்ட அவைகளுடைய மாதிரியின்படியே அவைகளைச் செய்யப் பார்ப்பாயாக.

* ௨ மோ. ௨௬. ௩௰. எபி. ௮. ௫.

௨௬. அதிகாரம்.

* வாசஸ்தலத்தையோவென்றால், திரித்த மெல்லிய பஞ்சுநூலும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலுமான பத்துச் சமுக்காளங்களால் உண்டுபண்ணுவாயாக; அவைகளில் விநோத வேலையான கேருபீன்கள் இருக்கும்படியாக அவைகளைப் பண்ணக்கடவாய். * ௨ மோ. ௩௬. ௮.

௨ ஒவ்வொரு சமுக்காளம் இருபத்தெட்டுமுழ நீளமும் நான்குமுழ அகலமுமாயிருப்பதாக; சமுக்காளங்களுக்கெல்லாம் ஒரே அளவு இருக்கக்கடவது.

௩ ஐந்து சமுக்காளங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவும், மற்ற ஐந்து சமுக்காளங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவும் வேண்டும்.

௪ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடையோரத்தில் இளநீலநூல்காதுகளை உண்டுபண்ணி, இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் கடையோரத்திலும் அப்படியே உண்டுபண்ணுவாயாக.

௫ ஒரு சமுக்காளத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் காதுகள் ஒன்றுக்கொன்று எதிராய்ச் சேர்ந்திருக்கும்படிக்கு உண்டுபண்ணுவாயாக.

௬ ஏக வாசஸ்தலமாய்ப் போகும்படிக்கு

ஐம்பது பொன் துறடுகளையும்பண்ணி, சமுக்காளங்களை ஒன்றுக்கொன்று துறடுகளாலே இணைத்துப்போடுவாயாக.

௭ ¶ வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும் ஆட்டுமயிர்ச் சமுக்காளங்களாகிய பதினொரு சமுக்காளங்களையும் பண்ணக்கடவாய்.

௮ ஒவ்வொரு சமுக்காளம் முப்பதுமுழ நீளமும் நான்குமுழ அகலமுமாயிருப்பதாக; பதினொரு சமுக்காளங்களுக்கும் ஒரே அளவு இருக்கக்கடவது.

௯ ஐந்து சமுக்காளங்களை ஒன்றாகவும் ஆறு சமுக்காளங்களை ஒன்றாகவும் இணைத்து, ஆறாம் சமுக்காளத்தைக் கூடாரத்தின் முகப்பிற்குமுன்னே, இரட்டையாய்ப் போடுவாயாக.

௰ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடைஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணி,

௰௧ ஐம்பது வெண்கலத் துறடுகளைப்பண்ணி, துறடுகளைக் காதுகளில் பூட்டி, கூடாரத்தை அது ஒன்றாகும்படிக்கு இணைத்துவிடுவாயாக.

௰௨ கூடாரத்தின் சமுக்காளங்களில் மிச்சமான அரைச்சமுக்காளத்தின் மீதியோவென்றால், வாசஸ்தலத்தின் பின்புறத்திலே மிஞ்சித் தொங்குவதாக.

௰௩ கூடாரத்தினுடைய சமுக்காளங்களின் நீளத்திலும் மீதியானதிலே இந்தப்புறத்தில் ஒரு முழமும் அந்தப்புறத்தில் ஒரு முழமும் வாசஸ்தலத்தை மூடும்படிக்கு அதின் பக்கங்களிலே மிஞ்சித் தொங்குவதாக.

௰௪ ¶ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாக்களின் தோல்களாலே கூடாரத்திற்கு ஒரு மூடியையும் அதின்மேலே தகசுகளின் தோல்களால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுவாயாக.

௰௫ ¶ நிமிர்ந்துநிற்கிற பலகைகளையும் வாசஸ்தலத்திற்குச் சீத்திம் மரங்களால் செப்பணிடுவாயாக.

௰௬ ஒவ்வொரு பலகை பத்துமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமாயிருக்கக்கடவது.

௰௭ ஒன்றுக்கொன்று எதிரே இசைவான ஒழுங்காயிருக்கிற இரண்டு முளைகள் ஒவ்வொரு பலகைக்கு இருக்கவேண்டும்; இப்படியே வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் செய்வாயாக.

௰௮ ¶ நீ வாசஸ்தலத்திற்காகச் செப்பணிடுகிற பலகைகளில் இருபது பலகை தெற்கே தென்திசைக்கு எதிராக நிற்கக்கடவது.

௰௯ அந்த இருபது பலகைகளின்கீழே வைக்கும் நாற்பது வெள்ளிக்கால்களை ஒவ்வொரு பலகையின்கீழ் அதின் அதின் இரண்டிரண்டு முளைகளுக்கான கால்களாகத்தானே பண்ணக்கடவாய்.

௨௰ ¶ வாசஸ்தலத்தின் வடக்கான மறுபக்கத்திலும் இருபது பலகையும்,

௨௧ அவைகளின்கீழ் நாற்பது வெள்ளிக்கால்களும், ஒவ்வொரு பலகையின்கீழே இரண்டிரண்டு கால்களாக நிற்கக்கடவது.

௨௨ ¶ வாசஸ்தலத்தின் மேல்புறத்திற்கு ஆறு பலகைகளையும்,

௨௩ வாசஸ்தலத்தின் இரண்டு பக்கக் கோடிகளுக்கு இரண்டு பலகைகளையும் செப்பணிடுவாயாக.

௨௪ இவைகள் தாழத்துவக்கி இரண்டு பக்கங்களை ஏகமாய்ப் பிடித்து, உயரத்தை ஒரு அள்ளினாலே இசைத்திருக்கவேண்டும்; இரண்டு கோடிகளுக்கு அப்படியிருக்க இரண்டும் அப்படிச் செய்யப்படுவதாக.

௨௫ அப்படியே எட்டுப் பலகைகள் இருக்கவேண்டியது; அவைகளினுடைய வெள்ளிக்கால்கள் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டிரண்டு கால்களாகப் பதினாறு கால்கள் இருக்கவேண்டும்.

௨௬ ¶ சீத்திம் மரங்களால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,

௨௭ வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் வா

சஸ்தலத்தின் மேல்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணுவாயாக.

௨௮ நடுத்தாழ்ப்பாள் ஒரு முனைதுவக்கி மறுமுனைமட்டும் பலகைகளின் மையத்தை உருவிப் பாய்ச்சப்படுவதாக.

௨௯ பலகைகளைப் பொன்தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினாலே பண்ணி, தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்.

௩௰ ¶ அப்படியே வாசஸ்தலத்தைப் பர்வதத்தில் உனக்குக் காண்பிக்கப்பட்ட அதினுடைய நியாயத்தின்படியே எடுப்பிப்பாயாக.

௩௧ ¶ *இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமான ஒரு திரையையும் உண்டுபண்ணக்கடவாய்; அதிலே விநோத வேலையான கேருபீன்கள் இருக்கும்படியாக அது பண்ணப்படுவதாக. *௨ மோ. ௩௬. ௩௫.

௩௨ பொன்தகடு மூடியதும் பொன்னான வளைவாணிகளுள்ளதும் நான்கு வெள்ளிக் கால்கள்மேல் நிற்கிறதுமான நான்கு சீத்திம் மரத்தூண்களிலே அதைத் தூக்கிவைப்பாயாக.

௩௩ துறடுகளின்கீழே அந்தத் திரையைத் தூக்கிவைத்து, சாட்சியின் பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைப்பாயாக; அந்தத் திரை உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலத்திற்கும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்திற்கும் நடுவே இருப்பதாக.

௩௪ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்திலே சாட்சியினுடைய பெட்டியின்மீதில் கிருபாசனமான மூடியை வைத்து,

௩௫ திரைக்குப் புறம்பாக மேசையையும் மேசைக்கெதிரே வாசஸ்தலத்தின் தென்புறமாகக் குத்துவிளக்கையும் வைத்து, மேசையையோ வடபுறமாக வைப்பாயாக.

௩௬ ¶ இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலும் சித்திரத் தையல்வேலையுமான ஒரு மறைவையும் கூடாரத்தின் வாசலுக்கு உண்டாக்கி,

௩௭ அந்த மறைவுக்குச் சீத்திம் மரமான ஐந்து தூண்களைச் செப்பனிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளுக்குப் பொன் வளைவாணிகளை உண்டாக்கி, அவைகளுக்கு ஐந்து வெண்கலக் கால்களை வார்ப்பிக்கக்கடவாய்.

௨௭. அதிகாரம்.

ஐந்துமுழ நீளமும் ஐந்துமுழ அகலமுமான பலிபீடத்தையும் சீத்திம் மரங்களால் உண்டுபண்ணக்கடவாய்; அது நாற்சதுரமும் மூன்றுமுழ உயரமுமாயிருப்பதாக.

௨ அதின் நான்கு கோடிகளின்மேல், அதனோடே ஏகமாயிருக்கும் அதின் கொம்புகளை உண்டாக்கி அதை வெண்கலத்தகட்டால் மூடி,

௩ அதின் சாம்பலை எடுக்கும் அதின் செப்புச் சட்டிகளையும், அதின் கரண்டிகளையும், அதின் கலங்களையும், அதின் முள்துறடுகளையும், அதின் கலசங்களையும் உண்டாக்கி, அதின் முட்டுகளையெல்லாம் வெண்கலத்தால் பண்ணி,

௪ வலைபோலிருக்கிற ஒரு வெண்கலச் சல்லடையை அதற்குண்டாக்கி, அந்த வலையின் நான்கு முனைகளின்மேல் நான்கு வெண்கல வளையங்களை உண்டாக்கி,

௫ அந்த வலை பலிபீடத்தின் பாதிமட்டும் வரும்படிக்கு, அதைத் தாழப் பலிபீடத்தின் சுற்றிற்குக் கீழ்ப்புறமாக வைக்கக்கடவாய்.

௬ பலிபீடத்திற்குச் சீத்திம் மரவாளைகளையும் பண்ணி, அவைகளை வெண்கலத்தகட்டால் மூடி,

௭ பலிபீடம் எடுத்துப் போகப்படுகையில், அந்த வாளைகள் அதின் இரண்டு பக்கங்களில் இருக்கும்படிக்கு, அவைகள் வளையங்களிலே பாய்ச்சப்படுவதாக.

௮ அது குழாயாயிருக்கும்படிக்கு அதைப்

பலகைகளினாலே பண்ணுவாயாக; உனக்குப் பர்வதத்தில் காண்பிக்கப்பட்டபடியே அதைப் பண்ணக்கடவார்கள்.

௯ ¶ *வாசஸ்தலத்தின் பிரகாரத்தையும் உண்டுபண்ணுவாயாக; தெற்கே தென்திசைக்கு எதிரான பக்கத்திற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலும் நூறுமுழ நீளமுமான வெளி ஆடைகளும், *௨ மோ. ௩௮. ௯.

௰ அவைகளின் இருபதுதூண்களும் இருப்பதாக; இவைகளின் இருபது கால்கள் வெண்கலமும், தூண்களின் வளைவாணிகளும் அவைகளின் வளையங்களும் வெள்ளியுமாயிருப்பதாக.

௰௧ அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கு நூறுமுழ நீளமான வெளி ஆடைகளும், அவைகளின் இருபது தூண்களுமிருப்பதாக; இவைகளின் இருபது கால்கள் வெண்கலமும் தூண்களின் வளைவாணிகள் வெள்ளியுமாயிருப்பதாக.

௰௨ பிரகாரத்தினுடைய மேல்ப்பக்கமான அகலத்திற்கு ஐம்பதுமுழ நீளமான வெளி ஆடைகளும், அவைகளுக்குப் பத்துத் தூண்களும் இவைகளுக்குப் பத்துக் கால்களுமிருப்பதாக.

௰௩ சூரியன் உதிக்கிற திசையாகிய பிரகாரத்தின் கீழ்ப்பக்கமான அகலமும் ஐம்பது முழமாயிருப்பதாக.

௰௪ அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான வெளிஆடைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், இவைகளுக்கு மூன்று கால்களுமிருப்பதாக.

௰௫ மறுபுறத்திற்குப் பதினைந்துமுழ நீளமான வெளிஆடைகளும் அவைகளுக்கு மூன்று தூண்களும் இவைகளுக்கு மூன்று கால்களுமிருப்பதாக.

௰௬ பிரகாரத்தின் வாசலுக்கோவென்றால் இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலும் சித்திரத் தையல்வேலையும் இருபதுமுழ நீளமுமான ஒரு மறைவும் அதற்கு நான்கு தூண்களும் இவைகளுக்கு நான்கு கால்களும் இருப்பதாக.

௰௭ சுற்றிலும் இருக்கும் பிரகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளி வளையங்கள் போடப்பட்டிருப்பதாக; அவைகளின் வளைவாணிகள் வெள்ளியும் அவைகளின் கால்கள் வெண்கலமுமாயிருப்பதாக.

௰௮ பிரகாரத்தின் நீளம் நூறுமுழமும் இருபுறத்தகலம் ஐம்பது முழமும் உயரம் ஐந்துமுழமுமாயிருப்பதாக; அது திரித்த மெல்லிய பஞ்சுநூலும் அவைகளின் கால்கள் வெண்கலமுமாய் இருப்பதாக.

௰௯ வாசஸ்தலத்தின் சகல வேலையிலும் அதற்குத் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும் அதினுடைய எல்லா முளைக்கூச்சுகளும் பிரகாரத்தினுடைய எல்லா முளைக்கூச்சுகளும் வெண்கலமாயிருப்பதாக.

௨௰ ¶ குத்துவிளக்கை எப்பொழுதும் எரியப்பண்ணும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் இடித்து வடிக்கப்பட்ட தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னண்டைக்குக்கொண்டுவர நீ அவர்களுக்குக் கற்பிப்பாயாக.

௨௧ ஆசரிப்பின் கூடாரத்தில் சாட்சிக்கு முன்னிருக்கும் திரைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன் குமாரரும் அதைச் சாயங்காலந்துவக்கி, விடியற்காலம்மட்டும் கர்த்தருக்குமுன்பாக எரியவைக்கக்கடவர்கள்; இது அவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாக இஸ்ரவேல் புத்திரராலே நடக்கும் நித்திய கட்டளையாயிருக்கக்கடவது.

௨௮. அதிகாரம்.

நீ உன் சகோதரனாகிய ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரனையும் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்கு இஸ்ரவேல் புத்திரரின் நடுவிலிருந்து பிரித்து உன்னண்டையில் சேர்த்துக்கொள், ஆரோனையும், நாதாப், அபீகூ, எலெயாசார், இத்தமார் என்ற ஆரோனின் குமாரரையும் தானே.

௨ உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, மகிமைக்கும் அலங்காரத்திற்குமான பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணுவாயாக.

௩ ஆரோனைப் பரிசுத்தம்பண்ணுகிறதற்கும் அவன் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்கிறதற்கும் அவனுடைய வஸ்திரங்களை உண்டாக்கும்படிக்கு, நாம் ஞானத்தின் ஆவியால் நிரப்பின ஞானமான இருதயமுள்ள யாவரோடும் நீ பேசுவாயாக.

௪ அவர்கள் உண்டாக்கவேண்டிய வஸ்திரங்களாவது: மார்ப்பதக்கமும், ஆசாரிய சால்வையும், அங்கியும், முத்துவருணமான உள்சட்டையும், பாகையும், நடுக்கட்டும்தானே; அந்த அடைவாய் உன் சகோதரனாகிய ஆரோன் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, அவனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணக்கடவர்கள்.

௫ அவர்கள் பொன்னும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும் எடுத்து,

௬ ¶ ஆசாரிய சால்வையைப் பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், விநோத வேலையாய்ப் பண்ணக்கடவர்கள்.

௭ இரண்டு தோளின்மேலும் அதின் இரண்டு முனைகள் சேர்க்கப்பட்டு, அப்படி அது இணைக்கப்படவேண்டும்.

௮ அந்த ஆசாரிய சால்வையின்மேலிருக்கவேண்டிய விநோதமான நச்சை அந்த வேலையாகத்தானே, பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணப்பட்டு, அதனோடே ஏகத்துண்டாயிருப்பதாக.

௯ பின்னையும் நீ இரண்டு கோமேதகக் கல்லை வாங்கி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டுவாயாக.

௰ அவர்கள் பிறந்த வரிசையின்படியே, அவர்கள் நாமங்களில் ஆறுநாமங்கள் ஒரு கல்லிலும், மற்ற ஆறுநாமங்கள் மறுகல்லிலும் இருக்கத்தானே.

௰௧ இரத்தினங்களில்முத்திரை வெட்டுகிறவர்கள் செய்கிறதுபோல, அந்த இரண்டு கற்களில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டி, அவைகளுக்குச் சுற்றிலும் தங்கம் இழைத்து,

௰௨ ஆரோன் கர்த்தருக்குமுன்பாகத் தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை நினைப்புக்காகச் சுமந்துவர, அந்த இரண்டு கற்களை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேலே, அவர்கள் நினைப்புக்கான கற்களாக வைக்கக்கடவாய்.

௰௩ ஆகையால் பொன் வளையங்களையும் பண்ணி,

௰௪ சரியான அளவுகளும் முடிச்சுக்குத்திவேலையுமான இரண்டு சரப்பளிகளையும் சுத்தப்பொன்னினாலே உண்டாக்கி, முடிச்சுக்குத்திகளான சரப்பளிகளை அந்த வளையங்களில் சேர்க்கக்கடவாய்.

௰௫ ¶ விநோத வேலையாய் நியாயத்தின் மார்ப்பதக்கத்தையும் பண்ணுவாயாக; அதை ஆசாரிய சால்வையின் வேலைக்கொத்ததாய்ப் பண்ணக்கடவாய்; பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் அதைச் செய்வாயாக.

௰௬ அது நாற்சதுரமும் இரட்டையும் ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அகலமுமாய் இருக்கக்கடவது.

௰௭ அதிலே நான்கு பத்தி இரத்தினக் கற்களை நிறையப்பதிப்பாயாக; முதலாம் பத்தி கெம்பும், புஷ்பராகமும், மரகதமும்,

௰௮ இரண்டாம் பத்தி சிவப்புக்கல்லும், நீலக்கல்லும், வச்சிரமும்,

௰௯ மூன்றாம் பத்தி பத்மராகமும், வயிடூரியமும், அமேத்தீஸ்தும்,

௨௰ நான்காம் பத்தி தர்சீஸ் இரத்தினமும், கோமேதகமும், யஸ்பியுமாய் இருப்பதாக; அவைகள் தங்கள் இடங்களில் பொன்னினு

ளை பதித்திருக்கக்கடவது.

௨௧ இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்கள் உள்ளவைகளுமாய் இருக்கவேண்டும்; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே முத்திரை வெட்டாய் வெட்டியிருக்கக்கடவது.

௨௨ அந்த மார்ப்பதக்கத்திற்கென்று நீ சரி அளவுகளும் முடிச்சுக்குத்திகள் வேலையுமான சுத்தப் பொன் சரப்பளிகளையும் பண்ணி,

௨௩ இரண்டு பொன்மோதிரங்களையும் மார்ப்பதக்கத்திற்குப் பண்ணி, இந்த இரண்டு மோதிரங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு முனைகளிலே வைத்து,

௨௪ பொன்னான அந்த இரண்டு முடிச்சுக்குத்திகளை மார்ப்பதக்கத்தின் முனைகளில் இருக்கிற இரண்டு மோதிரங்களில் மாட்டி,

௨௫ இரண்டு முடிச்சுக்குத்திகளின் இரண்டு நுனிகளை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேல் அதின் முன்புறத்திலிருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டிப்போடுவாயாக.

௨௬ நீ பின்னையும் இரண்டு பொன்மோதிரங்களைப்பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையின் கீழ்ப்புறத்திற்கு எதிரானமார்ப்பதக்கத்தினுடைய மற்ற இரண்டு முனைகளில் அதினுடைய ஓரத்திற்குள்ளாக வைத்து,

௨௭ வேறே இரண்டு பொன்மோதிரங்களையும் பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையினுடைய முன்புறத்தின் இரண்டு கீழ்ப் பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,

௨௮ மார்ப்பதக்கம் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்குமேலாக இருக்கும்படிக்கும், அது ஆசாரிய சால்வையிலிருந்து விட்டுப்போகாதபடிக்கும், அதை அதின் மோதிரங்களால் ஆசாரிய சால்வையின் மோதிரங்களோடே இளநீலமான கயிற்றினாலே கட்டுவார்களாக.

௨௯ அப்படியே ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கையில், தன் இருதயத்தின்மேல் நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை எப்பொழுதும் கர்த்தருக்கு முன்பாக நினைப்புண்டாகும்படிக்குச் சுமந்துவரக்கடவன்.

௩௰ ¶ நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே வெளிச்சங்களையும் உத்தமங்களையும் ஆரோன் கர்த்தரின் சந்நிதிக்குள் பிரவேசிக்கையில், அவைகள் அவன் இருதயத்தின்மேல் இருக்கும்படிக்கு வைப்பாயாக; அப்படியே ஆரோன் தன் இருதயத்தின்மேலே இஸ்ரவேல் புத்திரருடைய நியாயத்தை எப்பொழுதும் கர்த்தருக்குமுன்பாகச் சுமந்துவரக்கடவன்.

௩௧ ¶ ஆசாரிய சால்வையின் கீழிருக்கும் அங்கியைமுழுவதும் இளநீலநூலால் உண்டாக்கக்கடவாய்.

௩௨ தலைநுழைகிற அதின் வாய் அதின் நடுவில் இருக்கவும் அதின் வாய்க்கு நெய்த வேலையான ஒரு நாடா சுற்றிலும் இருக்கவும்வேண்டும்; அது கிழியாதபடிக்கு மார்க்கவசத்தின் வாய்க்கொத்தது அதற்கு இருப்பதாக.

௩௩ அதின் கீழோரங்களிலோவென்றால், இளநீலநூல் இரத்தாம்பரநூல் சிவப்புநூல் வேலையான மாதளம்பழங்களையும், அவைகளின் நடுவே சுற்றிலும் பொன்மணிகளையும், அதின் ஓரங்களிலே சுற்றிலும் தொங்கப்பண்ணி வைப்பாயாக.

௩௪ அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் ஒரு பொன்மணியும், ஒரு மாதளம்பழமும், ஒரு பொன்மணியும், ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்குவதாக.

௩௫ ஆரோன் ஆராதனைசெய்யக் கர்த்தருக்குமுன்பாகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், வெளியே வரும்பொழுதும் அவன் சாவாதபடிக்கு அதி

அவனில் அவன் சத்தம் கேட்கப்படத் தரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

௩௬ ¶ நீ சுத்தப் பொன்பட்டத்தையும் பண்ணி, அதிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்பதை முத்திரை வெட்டாக வெட்டி,

௩௭ அது பாகையிலிருக்கும்படியாக, அதை இளநீலமான கயிற்றிலே பாகையின் முகப்பிலே கோத்துக் கட்டிவைப்பாயாக.

௩௮ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணிக்கைகளில் எல்லாம் பரிசுத்தம்பண்ணிச் செலுத்தும் பரிசுத்த வஸ்துக்களுடைய அக்கிரமத்தை ஆரோன் சுமந்துவரும்படிக்கு, அது ஆரோனுடைய நெற்றியின்மேல் இருப்பதாக; கர்த்தருக்குமுன்பாக அவர்கள்மேல் பிரியம் உண்டாகும்படிக்கு, அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருப்பதாக.

௩௯ ¶ மெல்லிய பஞ்சுநூலால் முத்துவருணமான உள்சட்டையையும் மெல்லிய பஞ்சுநூலால் பாகையையும் உண்டாக்கி, நடுக்கட்டையோவென்றால் சித்திரத் தையல்வேலையாகப் பண்ணுவாயாக.

௪௰ நீ ஆரோனுடைய குமாரருக்கும் சட்டைகளையும், நடுக்கட்டுகளையும், மகிமைக்கும் அலங்காரத்திற்குமான குல்லாக்களையும் உண்டுபண்ணுவாயாக.

௪௧ உன் சகோதரனாகிய ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்கள் கைகளை நிரப்பி, அவர்களைப் பரிசுத்தம் பண்ணுவாயாக.

௪௨ அவர்களுக்கு இடுப்புத்துவக்கி முழங்கால்கள்மட்டும் வருகிற சணல்நூல் சல்லடங்களையும், நிருவாணத்தின் சதையை மூடும்படிக்கு உண்டுபண்ணக்கடவாய்.

௪௩ ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனைசெய்ய ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், அல்லது பலிபீடத்தண்டைக்குச் சேரும்பொழுதும், அவர்கள் அக்கிரமம் சுமந்து சாவாதபடிக்கு, அவைகள் அவர்களில் தரித்திருக்கவேண்டும்; அவனுக்கும் அவனுக்குப்பிற்பாடு அவன் வித்தாருக்கும் அது நித்தியகட்டளை.

௨௯. அதிகாரம்.

நமக்கு ஆசாரிய ஊழியம்செய்ய அவர்களைப் பரிசுத்தம்பண்ணும்படிக்கு நீ அவர்களுக்குச் செய்யவேண்டியதாவது: நீ ஒரு காளை எருதையும் பழுதற்ற இரண்டு ஆட்டுக்கடாக்களையும்,

௨ கோதுமையின் மெல்லிய மாவினாலே சுட்ட புளிப்பில்லாத அப்பத்தையும், எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் வாங்கு.

௩ நீ இவைகளை ஒரே கூடையிலே வைத்து, கூடையோடே இவைகளையும் காளை எருதையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து,

௪ ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசல்முன்பாகச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரிலே கழுவி,

௫ வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு, ஆரோனுக்கு உள்சட்டையையும் ஆசாரிய சால்வையின் அங்கியையும் ஆசாரிய சால்வையையும் மார்ப்பதக்கத்தையும் தரித்து, அவனுக்கு ஆசாரிய சால்வையின் விசேஷமான கச்சையைக் கட்டி,

௬ அவன் தலையிலே பாகையைப் போட்டு, பரிசுத்த கிரீடத்தைப் பாகையிலே தரித்து,

௭ ¶ அபிஷேகத்தெண்ணெயை வாங்கி, அவன் தலையின்மேலே வார்த்து, அவனை அபிஷேகம்பண்ணி,

௮ ¶ பிற்பாடு அவன் குமாரரைச் சேரப்பண்ணி, ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு நித்தியகட்டளையாக இருக்கும்படிக்கு அவர்களுக்குச் சட்டைகளை உடுத்தி,

௯ ஆரோனையும் அவன் குமாரரையும் நடுக்கட்டுகளால் அரைக்கட்டி, இவர்களுக்குக் குல்லாக்களைப் போட்டுக் கட்டி, ஆரோனுடைய கையையும் அவன் குமாரரின் கையையும் நிரப்பி,

௰ ¶ காளை எருதை ஆசரிப்பின் கூடாரத்திற்குமுன்பாகக் கொண்டுவருவாயாக; அப்பொழுது ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக் காளை எருதினுடைய தலையின்மேலே வைக்கக்கடவர்கள்.

௰௧ பிற்பாடு நீ அந்தக் காளை எருதை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலண்டையிலே கர்த்தருக்குமுன்பாகக் குரல்வளை அறுத்து,

௰௨ அதின் இரத்தத்திலே கொஞ்சம் வாங்கி, உன் விரலினால் பலிபீடத்தில் கொம்புகள்மேல் இட்டு, மற்ற இரத்தத்தை எல்லாம் பலிபீடத்து அடியிலே ஊற்றி,

௰௩ குடல்களை மூடிய எல்லாக் கொழுப்பையும் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்திப்போட்டு,

௰௪ காளை எருதின் மாம்சத்தையும் அதின் தோலையும் அதின் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய்; அது பாவம்போக்கும்பலி.

௰௫ ¶ அதற்குப்பிறகு அந்த ஆட்டுக்கடாக்களில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

௰௬ பிற்பாடு நீ அதைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

௰௭ ஆட்டுக்கடாவை அதின் சந்து சந்தாய்த் துண்டித்து, அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் கழுவி, அவைகளை அந்தத் துண்டங்களின்மேலும் அதின் தலையின்மேலும் வைத்து,

௰௮ ஆட்டுக்கடாவை முழுவதும் பலிபீடத்தின்மேல் கொளுத்திப்போடுவாயாக; அது கர்த்தருக்கான சர்வாங்க தகனபலி; அது ஆற்றுகிற வாசனையும் கர்த்தருக்கான தகனமுமாயிருக்கும்.

௰௯ ¶ அதற்குப்பிறகு நீ மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

௨௰ பிற்பாடு நீ அதைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் வாங்கி, ஆரோனின் வலதுகாது மடலிலும் அவன் குமாரரின் வலதுகாது மடலிலும் அவர்கள் வலதுகையினுடைய பெருவிரலின்மேலும் அவர்கள் வலதுகாலினுடைய பெருவிரலின்மேலும் இட்டு, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,

௨௧ பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேக எண்ணெயிலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவன் வஸ்திரங்களும் அவனோடும்கூட அவன் குமாரரும் அவர்கள் வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படிக்கு, அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவன் குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள்மேலும் தெளித்து,

௨௨ அந்த ஆட்டுக்கடாக்கள் நிரப்புதலின் ஆட்டுக்கடாவானபடியினாலே, அதிலிருக்கும் கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையும், வலது முன்னம்தொடையையும்,

௨௩ கர்த்தருக்குமுன்பாக வைத்திருக்கிற புளிப்பில்லாத அப்பங்களின் கூடையில் ஒரு அப்பத்தையும், எண்ணெய் அப்பமாகிய ஒரு அதிரசத்தையும், ஒரு அடையையும் எடுத்து,

௨௪ அவைகளை எல்லாம் ஆரோனின் உள்ளங்கைகள்மேலும் அவன் குமாரரின் உள்ளங்கைகள்மேலும் வைத்து, அவைகளைக்

கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டப்படுகிற காணிக்கையாக அசைவாட்டி,

௨௫ பிற்பாடு அவைகளை அவர்கள் கைகளிலெடுத்து, பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியின்மீதில் வைத்து, கர்த்தருக்குமுன்பாக ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்திப்போடக்கடவாய்; அது கர்த்தருக்கான தகனம்.

௨௬ ஆரோனின் கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடாவிலே நீ மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டக்கடவாய்; அது உன் பங்காயிருக்கும்.

௨௭ ஆரோனின் கைகளையும் அவன் குமாரரின் கைகளையும் நிரப்புதலின் ஆட்டுக்கடாவிலே அசைவாட்டப்படுகிற மார்க்கண்டத்தையும் ஏறெடுத்து, படைக்கப்படுகிற முன்னம்தொடையையும் பரிசுத்தமாக்குவாயாக.

௨௮ இஸ்ரவேல் புத்திரர் பலியிடுகிறதிலே அப்படிக்கொத்தவைகள் நித்தியகட்டளையாக ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்வதாக; ஏனெனில் அது ஏறெடுக்கிற படைப்பு; இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளிலே ஏறெடுக்கப்படும் அவர்களுடைய படைப்புக் கர்த்தருடையது.

௨௯ ¶ ஆரோனுக்கிருக்கிற பரிசுத்த வஸ்திரங்களை அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரர் உடுத்து, அபிஷேகம்பண்ணப்படவும், அவர்கள் கைகள் நிரப்பப்படவும், அவைகள் இவர்களைச் சேர்வதாக.

௩௰ பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனைசெய்ய ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்கத்தக்கதாக, அவன் குமாரரில் அவன் பட்டத்திற்கு வருகிற ஆசாரியன் அவைகளை ஏழுநாள்மட்டும் உடுத்துக்கொள்ளக்கடவன்.

௩௧ கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடாவை நீ எடுத்து, அதின் மாம்சத்தைப் பரிசுத்த இடத்தில் வேவிப்பாயாக.

௩௨ அந்த ஆட்டுக்கடாவின் மாம்சத்தையும், கூடையிலிருக்கிற அப்பத்தையும். ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலே புசிக்கக்கடவர்கள்.

௩௩ ஏனெனில் அவர்களுடைய கைகளை நிரப்பவும், அவர்களைப் பரிசுத்தம்பண்ணவும், அதினாலே பாவநிவிர்த்தி செய்யப்பட்டது; அந்நியனோவெனில் அவைகளிலே புசிக்கவேண்டாம்; ஏனெனில் அவைகள் பரிசுத்தம்.

௩௪ கைகளை நிரப்புதலின் மாம்சத்திலும் அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலம்மட்டும் மீந்திருந்ததேயானால், அதை அக்கினியாலே சுட்டெரிப்பாயாக; அது புசிக்கப்படவேண்டாம்; ஏனெனில் அது பரிசுத்தம்.

௩௫ ¶ இந்தப்பிரகாரமாக நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் நாம் உனக்குக் கற்பித்தபடி எல்லாம் செய்வாயாக; நீ ஏழுநாள்மட்டும் அவர்கள் கைகளை நிரப்பி,

௩௬ பாவநிவிர்த்திக்காக ஒவ்வொருநாளில் ஒவ்வொரு காளை எருதைப் பாவம் போக்கும் பலியாக்கி, பலிபீடத்தையும் பாவநிவிர்த்தியை அதற்காகச் செய்கிறதினாலே பாவமற்றதாக்கி, அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கு அதை அபிஷேகம் பண்ணுவாயாக.

௩௭ ஏழுநாள்மட்டும் பலிபீடத்திற்காகப் பாவநிவிர்த்தியைப் பண்ணி, அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய்; பலிபீடம் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாய் இருப்பது; பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

௩௮ ¶ பலிபீடத்தின்மேல் நீ பலியிடவேண்டியதேதெனில், எப்பொழுதும் ஒவ்வொரு நாளிலே ஒரு வயதான இரண்டிரண்டு ஆட்டுக்குட்டிகள்தானே.

௩௯ ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும் மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமான வேளையிலும் பலியிடுவாயாக.

௪௰ ஒரு மரக்காலிலே பத்திலொரு பங்கானதும், இடித்து வடிக்கப்பட்ட கால் படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லியமாவையும், திராட்சப்பழ இரசத்திலே கால்படியாகிய ஒரு ஊற்றுதலையும், ஒரு ஆட்டுக்குட்டிக்காகப் படைத்து,

௪௧ மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமாகிற வேளையிலே பலியிடுகிறபொழுது, காலையில் படைத்த காணிக்கைக்கும் அதின் ஊற்றுதலுக்கும் ஒத்த பிரகாரமாக அதை ஆற்றுகிற வாசனைக்காகச் செய்யக்கடவாய்; அது கர்த்தருக்கான தகனம்.

௪௨ நாம் உன்னுடனே பேச உங்களைச் சந்திக்கப்போகிற தானமாகிய ஆசரிப்புக்கூடாரத்தினுடைய வாசலென்ற கர்த்தரின் சந்நிதியிலே, இவைகள் உங்கள் தலைமுறை தலைமுறையாக எப்பொழுதும் செலுத்தப்படவேண்டிய சர்வாங்க தகனபலிகள்.

௪௩ *அங்கே இஸ்ரவேல் புத்திரரைச் சந்திப்போம்; அந்த ஸ்தலம் நம்முடைய மகிமையினாலே பரிசுத்தமாக்கப்படும்.

*௨ மோ. ௨௰. ௨௪.

௪௪ நாம் ஆசரிப்பின் கூடாரத்தையும் பலிபீடத்தையும் பரிசுத்தமாக்கி, ஆரோனையும் அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்குப் பரிசுத்தமாக்கி,

௪௫ இஸ்ரவேல் புத்திரரின் நடுவே வாசம்பண்ணி, அவர்களுக்குப் பராபரனாய் இருப்போம்.

௪௬ தங்கள் நடுவே நாம் வாசம்பண்ணும்படிக்கு, தங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாம் தங்கள் பராபரனாகிய கர்த்தரென்று அறிவார்களாக; நாம் அவர்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௰. அதிகாரம்.

தூபம்காட்டுகிறதற்கு *ஒரு தூபபீடத்தையும் சீத்திம் மரங்களினாலே உண்டாக்குவாயாக. *௨ மோ. ௩௭. ௨௫.

௨ அது ஒருமுழ நீளமும் ஒருமுழ அகலமுமான சதுரமும், இரண்டுமுழ உயர்ச்சியும், அதின் கொம்புகள் அதனோடே ஏகமுமாயிருப்பதாக.

௩ நீ அதையெல்லாம் அதின்மேலே பலகையையும் சுற்றிலுமிருக்கும் அதின் பக்கங்களையும் அதின் கொம்புகளையும் சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டுபண்ணி,

௪ அதினுடைய திரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களிலும் அதைச் சுமக்கும் வாரைகளின் இடங்களாகிற இவ்விரண்டு பொன்வளையங்களை அதற்குப் பக்கத்தின் இரண்டு கோடிகள் அருகே உண்டாக்கி,

௫ அதின் வாரைகளையும் சீத்திம் மரங்களாலே பண்ணி, பொன்தகட்டால் மூடக்கடவாய்.

௬ சாட்சியினுடைய பெட்டியின் முன்னேயும் சாட்சியின்மேல் இருக்கிறதும் நாம் உன்னைச் சந்திப்பதுமான கிருபாசன மூடியின்முன்னேயும் இருக்கும் திரைக்குமுன்பாக அதை வைக்கக்கடவாய்.

௭ ஆரோன் காலைமாறு விளக்குகளைச் சீர்ப்படுத்துகிறபொழுதும், அதின்மீதில் சுகந்தவர்க்கங்களினாலே தூபம் காட்டுவானாக; அந்திநேரமாகிற வேளையிலே விளக்குகளை ஏற்றுகிறபொழுதும், அதின்மீதில் கந்தவர்க்கங்களினாலே தூபம் காட்டக்கடவன்.

௮ அது எப்பொழுதும் உங்கள் தலைமுறை தலைமுறையாகக் கர்த்தருக்கு முன்பாகக் காட்டப்படும் தூபம்.

௯ அதின்மீதில் அந்நிய தூபவர்க்கத்தையாகிலும், ஒரு தகனபலியையாகிலும், காணிக்கையையாகிலும், ஏறப்பண்ணீர்களாக; அதின்மேல் ஒரு ஊற்றுதலையும் ஊற்றீர்களாக.

௰ வருஷத்தில் ஒருமுறை ஆரோன் அதின் கொம்புகளின்மேலே பாவங்களை நிவிர்த்தி பண்ணும் பலியின் இரத்தத்தாலே பாவநிவிர்த்தி பண்ணுவானாக; அப்படி அவன் உங்கள் தலைமுறை தலைமுறையாக வருஷத்தில் ஒருமுறை பாவநிவிர்த்திபண்ணுவானாக; அது கர்த்தருக்குப் பரிசுத்தத்திற்குப்

பரிசுத்தமாயிருக்குமென்றார்.

௰௧ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௨ நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படியே கணக்குப் பார்க்கிறபொழுது, அவர்களை எண்ணுகையில் அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவர் தம்தம் ஆத்துமாவிற்காகக் கர்த்தருக்கு மீட்கும்பொருளைக் கொடுக்கக்கடவர்கள்.

௰௩ எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிறவன் எல்லாம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி அரைச் சேக்கலைக் கொடுக்கவேண்டும்; சேக்கலானது இருபது கேரா; அரைச் சேக்கலே கர்த்தருக்குச் செலுத்தப்படுவது.

௰௪ எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிற இருபது வயதுமுதல்கொண்டு மேல்பட்டவனெல்லாம் அதைக் கர்த்தருக்குச் செலுத்தவேண்டும்.

௰௫ உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்திபண்ணும் கட்டளையை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்துகையில், அரைச் சேக்கலுக்கு ஐசுவரியவான் ஏறக்கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் குறையக் கொடுக்கவும் வேண்டாம்.

௰௬ பாவநிவிர்த்தியின் அந்தத் திரவியத்தை நீ இஸ்ரவேல் புத்திரர்கையில் வாங்கி, அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்குக் கொடுப்பாயாக; அப்படியே உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தியாகும்படிக்கு, அது கர்த்தருக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரின் நினைப்புக்காக இருக்குமென்றார்.

௰௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௮ *கழுவுகிறதற்கு நீ வெண்கலத்தால் ஒரு தொட்டியையும் வெண்கலத்தால் அதின் புரிமனையையும் உண்டாக்கி, அதை ஆசரிப்பின் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. *உ மோ. ௩௮. ௮: ௪௰. ௩௰.

௰௯ அதினிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்.

௨௰ அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், அல்லவென்று கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலிபீடத்தண்டைக்கு ஆராதனைசெய்யவும் சேரும்பொழுதும், அவர்கள் சாவாதபடிக்குத் தண்ணீரினாலே தங்களைக் கழுவக்கடவர்கள்.

௨௧ அவர்கள் சாவாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் தாமே கழுவக்கடவர்கள்; அது அவனுக்கும், தலைமுறை தலைமுறையாக இருக்கும் அவன் வித்தாருக்கும் நித்தியகட்டளை என்றார்.

௨௨ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௩ நீ மேன்மைத்தரமான சுகந்தவர்க்கங்களாகிற தானாய் வடிந்த வெள்ளைப்போளத்திலே, பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலாலே ஐந்நூறு சேக்கலிடையையும், சுகந்த கறுவாப்பட்டையிலே பாதி அம்மாத்திரமான இருநூற்றைம்பது சேக்கலிடையையும், சுகந்த வசம்பில் இருநூற்றைம்பது சேக்கலிடையையும்,

௨௪ காசியாவில் ஐந்நூறு சேக்கலிடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு படியையும், வாங்கிக்கொண்டு,

௨௫ அதனால் தயிலக்காரன் வேலையாகக் கூட்டப்பட்ட பரிமளதயிலமான *பரிசுத்த அபிஷேக எண்ணெயை உண்டுபண்ணுவாயாக; அது பரிசுத்த அபிஷேக எண்ணெயாயிருக்கக்கடவது. *உ மோ. ௩௭. ௨௯.

௨௬ அதினாலே நீ ஆசரிப்பின் கூடாரத்தையும், சாட்சியின் பெட்டியையும்,

௨௭ மேசையையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், குத்துவிளக்கையும், அதின் முட்டுகளையும் தூபங்காட்டும் பீடத்தையும்,

௨௮ தகனபலிபீடத்தையும், அதினுடைய

எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமணையையும், அபிஷேகம்பண்ணி,

௨௯ அவைகள் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பரிசுத்தமாக்குவாயாக; அவைகளைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருப்பது.

௩௰ நீ ஆரோனையும் அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்கு அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தமாக்குவாயாக.

௩௧ இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதாவது: இது உங்கள் தலைமுறை தலைமுறையாக நமக்குப் பரிசுத்த அபிஷேக எண்ணெயாயிருப்பது.

௩௨ அது மனிதனுடைய மாம்சத்தின்மேல் வார்க்கப்படவேண்டாம்; அவர்கள் அது செய்யப்பட்ட திட்டத்திற்கொத்தவிதமாகச் செய்யவும்வேண்டாம்; அது பரிசுத்தமானது; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.

௩௩ அதைப்போலொத்த தயிலத்தைக் கூட்டுகிறவனும், அதிலெடுத்து அந்நிய வஸ்துவின்மேல் வார்க்கிறவனும், தன் சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவனென்று சொல்லென்றார்.

௩௪ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ கந்தவர்க்கங்களாகிய வடித்த வெள்ளைப்போளமும் குங்கிலியமும் அல்பான் பிசினுமென்ற கந்தவர்க்கங்களையும் சுத்தமான குங்கிலியத்தையும் ஒன்றுக்கொன்று சரிஇடையாக வாங்கிக்கொண்டு,

௩௫ அதைத் தயிலக்காரன் வேலையாகப் பரிமளமேற்றி, துப்புரவும் பரிசுத்தமுமான *தூபவர்க்கமாக்கி, *௨ மோ.௩௭.௨௯.

௩௬ அதிலே சிலவற்றை இடித்துப் பொடியாக்கி, நாம் உன்னைச் சந்திக்கப்போகிற ஆசரிப்பின் கூடாரத்திலிருக்கும் சாட்சிக்கு முன்பாக வைப்பாயாக; உங்களுக்கு அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

௩௭ இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்கிற திட்டத்திற்கு ஒத்தவிதமாக நீங்கள் உங்களுக்குச் செய்யவேண்டாம், அது உனக்குக் கர்த்தருக்கென்று பரிசுத்தமாயிருப்பதாக.

௩௮ அதைப்போலொத்ததை மோப்பதற்காகச் செய்கிறவன் தன் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவன் என்றார்.

௩௧ அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ இதோ நாம் யூதாவின் கோத்திரத்திலே ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெத்சாலேயேலைப் பேர்சொல்லி அழைத்து,

௩ விநோதமான வேலைகளை யோசித்துப் பண்ணுகிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்,

௪ இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதித்துவைக்கிறதற்கும், மரத்தில் நேர்த்தியான வேலைசெய்கிறதற்கும், சகலவித வேலையைப் பண்ணுகிறதற்கும்,

௫ ஞானமும் உணர்வும் அறிவும் சகலவித வேலைக்கான வித்தையும் அவனுக்குண்டாக, அவனைப் பராபரனுடைய ஆவியினாலே நிரப்பினோம்.

௬ இதோ நாம் தாண் கோத்திரத்திலே அகிசாமாகின் குமாரனாகிய அகோலியப்பை அவனோடே கூட்டி, ஞானமான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தைக் கொடுத்தோம்; நாம் உனக்குக் கற்பித்ததை எல்லாம் அவர்கள் செய்வார்கள்.

௭ ஆசரிப்பின் கூடாரத்தையும் சாட்சியின் பெட்டியையும் அதின்மேல் இருக்கும் கிருபாசனமூடியையும் கூடாரத்தினுடைய எல்லா முட்டுகளையும்,

௮ மேசையையும் அதின் முட்டுகளையும்

சுத்தமான குத்துவிளக்கையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தூபபீடத்தையும்,

௯ தகனபலிபீடத்தையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தொட்டியையும் அதின் புரிமணையையும்,

௰ ஆராதனையின் சீலைகளையும் ஆசாரிய ஊழியம் செய்கிறதற்கான ஆசாரியனாகிய ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும்,

௰௧ அபிஷேகத்தெண்ணெயையும் பரிசுத்த ஸ்தலத்திற்கான சுகந்தவர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும் அவர்கள் நாம் உனக்குக் கற்பித்தபடி எல்லாம் செய்வார்களென்றார்.

௰௨ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

௰௩ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நம்முடைய ஓய்வுநாள்களையே கைக்கொள்ளக்கடவீர்கள்; ஏனெனில் நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று நீங்கள் அறிவதற்கு அது உங்கள் தலைமுறை தலைமுறையாக நமக்கும் உங்களுக்கும் நடுவான அடையாளம்.

௰௪ ஆகையால் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவீர்களாக; ஏனெனில் அது உங்களுக்குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; அதிலே வேலை செய்கிற எந்த ஆத்துமாவும் தன் சனத்தின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்பதாக.

௰௫ ஆறுநாள் வேலை செய்யப்படுவதாக; ஏழாம் நாளோவெனில் வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தம்; ஓய்வுநாளிலே வேலைசெய்கிறவன் எவனும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௰௬ ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைகளில் ஓய்வுநாளை நித்திய உடம்படிக்கையாக ஆசரிக்கும்படிக்கு, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள்.

௰௭ அது என்றைக்கும் நமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவான அடையாளம்; ஏனெனில் ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.

௰௮ ¶ அவர் சீனாய்பர்வதத்திலே மோசேயோடே பேசித் தீர்ந்தபிற்பாடு, அவர் அவனுக்குப் பராபரனுடைய விரலினாலே எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளைக் கொடுத்தார்.

௩௰௨. அதிகாரம்.

மோசே பர்வதத்திலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதைச் சனம் கண்டபொழுதோவெனில், சனம் ஆரோனண்டையிலே கூட்டமாகக் கூடி, அவனுடனே, நீர் எழுந்து, எங்கள்முன் நடந்துபோகிற தேவர்களை *எங்களுக்கு உண்டுபண்ணும்; ஏனென்றால் எங்களை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின அந்த மோசே என்கிறவருக்கு என்ன சம்பவித்ததென்று அறியோம் என்றார்கள். *௫ மோ. ௯. ௭.

௨ அப்பொழுது ஆரோன் அவர்களுடனே, உங்கள் பெண்சாதிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளிலிருக்கிற பொன் கடுக்கன்களைக் கழற்றி, என்னண்டைக்குக் கொண்டுவாருங்கள் என்றான்.

௩ அப்பொழுது சனமெல்லாம் தங்கள் காதுகளிலிருந்த பொன்கடுக்கன்களைக் கழற்றி, ஆரோனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௪ அவன் அவர்கள் கையிலே அதை வாங்கி, ஒரு எழுத்தாணியினாலே குறிபோட்டு, வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியை அதினால் உண்டுபண்ணினான்; அப்பொழுது அவர்கள், இஸ்ரவேலே இவைகள் உன்னை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின உன்னுடைய தேவர்கள் என்றார்கள்.

௫ ஆரோன் அதைக் கண்டு, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான்.

௬ மறுநாள் அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, சர்வாங்க தகனபலிகளைப் பலியிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பிற்பாடு சனம் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உளுக்காந்து, விளையாடுகிறதற்கும் எழுந்திருந்தார்கள்.

௭ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: இறங்கிப் போ; ஏனெனில் நீ எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப் பண்ணின உன்னுடைய சனம் தன்னைக் கெடுத்துவிட்டது.

௮ நாம் தங்களுக்குக் கற்பித்த வழியைச் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்குண்டாக்கி, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு, இஸ்ரவேலே இவைகள் உன்னை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின உன்னுடைய தேவர்கள் என்றார்களென்று சொல்லி,

௯ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதேதெனில், இந்தச் சனத்தைப் பார்த்தோம்; இதோ, அது கடினக்கழுத்துள்ள சனம்.

௰ இப்பொழுதும் நாம் அவர்களை அழிக்கும்படிக்கு, நமது கோபம் அவர்களுக்கு விரோதமாக எரிய, நம்மை விட்டுவிடு; அப்பொழுது * உன்னைப் பெரிய சாதியாக்குவோம் என்றார். * ௪ மோ. ௰௪. ௰௨.

௰௧ ¶ *ஆனால் மோசே தன் பராபரனாகிய கர்த்தருடைய முகத்தை நோக்கிக் கெஞ்சிச் சொன்னதாவது: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையான கையினாலும் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உம்முடைய சனத்திற்கு விரோதமாக உம்முடைய கோபம் எரிவானேன். *௪ மோ. ௰௪. ௰௩.

௰௨ அவர்களை மலைகளிலே கொன்றுபோடவும், அவர்களைப் பூமியின்மேல் இராதபடிக்கு நிர்மூலம்பண்ணவும், அவர்களைத் தீமைக்கென்றே புறப்படப்பண்ணினாரென்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது சனத்திற்குத் தீங்குசெய்யாதபடிக்குப் பரிதாபமாய் இரும்.

௰௩ உம்முடைய ஊழியக்காரராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்; உங்கள் வித்தை வானத்தின் நட்சத்திரங்கள் அத்தனையாகப் பெருகப்பண்ணி, நாம் சொன்ன இந்தத் தேசத்தை எல்லாம் உங்கள் வித்திற்கு, அதை என்றைக்கும் சுதந்தரிக்கும்படிக்குக் கொடுப்போமென்று உம்மைக்கொண்டு அவர்களுக்கு ஆணையிட்டு, அவர்களோடே சொன்னீரே என்றான்.

௰௪ அப்பொழுது கர்த்தர் தமது சனத்திற்குச் செய்வோமென்று சொன்ன தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபப்பட்டார்.

௰௫ ¶ அப்பொழுது மோசே திரும்பிக்கொண்டு பர்வதத்திலிருந்து இறங்கிப்போனான்; சாட்சியின் இரண்டு பலகைகள் அவன் கையிலிருந்தன; அவைகள் இருபுறங்களிலும் இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் எழுதப்பட்ட பலகைகளாயிருந்தன.

௰௬ *அந்தப் பலகைகள் பராபரனுடைய செய்கையும், அவைகளிலே பதிந்த எழுத்து பராபரனுடைய எழுத்துமாயிருந்தன. * ௨ மோ. ௩௧. ௰௮.

௰௭ சனம் கெம்பீரத்திலே கூப்பிடுகிற சத்தத்தை *யோசுவா கேட்டு மோசேயோடே, யுத்தத்தின் இரைச்சல் பாளயத்தில் உண்டாயிருக்கின்றதென்றான். * ௨ மோ. ௨௩. ௰௩, ௰௪.

௰௮ அவனோவென்றால் அது செயித்துக் கூப்பிடுகிறவர்களின் சத்தமும் அல்ல, முறிந்து கூப்பிடுகிறவர்களின் சத்தமும் அல்ல, பாடுகிறவர்களின் சத்தத்தை நான் கேட்கிறேனென்றான்.

௰௯ அவன் பாளயத்திற்குச் சமீபித்து, கன்றுக்குட்டியையும் கூத்துகளையும் காண

கிறபொழுது சம்பவித்ததேதெனில், மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையில் இருக்கிற பலகைகளைப் பர்வதத்தடியிலே எறிந்து உடைத்துப்போட்டு,

௨௰ அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் எரித்துப்போட்டு, அதைப் பொடியாகும்மட்டும் அரைத்து, *தண்ணீரின்மேல் தூவி, இஸ்ரவேல் புத்திரருக்குக் குடிக்கக்கொடுத்தான். *௫ மோ. ௯. ௨௧.

௨௧ ¶ மோசே ஆரோனோடே, நீ இந்தச் சனத்தின்மேலே பெரும் பாவத்தைச் சுமக்கப்பண்ண, அது உனக்கு என்ன செய்ததென்றான்.

௨௨ அப்பொழுது ஆரோன் சொன்னதாவது: என் ஆண்டவனுக்குக் கோபம் மூளாதிருப்பதாக; இந்தச் சனத்தை நீர் அது பொல்லாததென்று அறிவீர்.

௨௩ அவர்கள் என்னோடே, எங்கள் முன் நடந்துபோகிற தேவர்களை எங்களுக்கு உண்டுபண்ணும்; ஏனெனில் எங்களை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின அந்த மோசே என்கிறவருக்கு என்ன சம்பவித்ததென்று அறியோம் என்றார்கள்.

௨௪ அப்பொழுது நான் அவர்களோடே, எவர்களுக்குப் பொன் உடைமை உண்டோ, அவர்கள் அதைக் கழற்றி, எனக்குத் தரக்கடவர்கள் என்றேன்; அதை அக்கினியிலே போட்டேன்; அதனால் இந்தக் கன்றுக்குட்டி உண்டாயிற்றென்றான்.

௨௫ ¶ சனம் நிருவாணமானதென்றும், அதற்கு விரோதமாய் எழும்புகிறவர்களுக்கு முன்பாக அதற்கு இக்கிஷை வர ஆரோன் அதை நிருவாணப்படுத்தினான் என்றும் மோசே பார்த்து,

௨௬ அவன் பாளயத்தின் வாசலிலே நின்றுகொண்டு, எவர்கள் கர்த்தருடையவர்களோ அவர்கள் என்னைச் சேரக்கடவர்கள் என்றான்; அப்பொழுது இலேவியின் புத்திரரெல்லாரும் அவனண்டையிலே வந்து கூடினார்கள்.

௨௭ அவர்களோடே அவன் சொன்னதாவது: நீங்கள் அவனவன் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயத்தில் வாசலுக்குவாசல் கடந்து திரிந்து, அவனவன் தன் சகோதரனையும் அவனவன் தன் சிநேகிதனையும் தனக்கடுத்தவனையும் கொன்றுபோடுங்களென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

௨௮ இலேவியின் புத்திரர் மோசே சொன்னபடி செய்தார்கள்; சனத்தில் அந்நாளிலே ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள்.

௨௯ ஏனென்றால், கர்த்தர் இன்று உங்கள்மேல் ஆசீர்வாதத்தைக் கட்டளையிடும்படிக்கு, நீங்கள் இந்நாளிலே அவனவன் தன் மகனுக்கும் தன் சகோதரனுக்கும் விரோதமாகிறதினாலே, கர்த்தருக்கு உங்கள் கைகளை நிரப்புங்களென்று மோசே சொல்லியிருந்தான்.

௩௰ ¶ மறுநாளிலே சம்பவித்ததேதெனில், மோசே சனத்துடனே, நீங்கள் கன பாதகமான பாவம் செய்தீர்கள்; இப்பொழுதும் நாம் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி அடையலாமோவென்று கர்த்தரண்டைக்குப் போய் ஏறுவேன் என்றான்.

௩௧ அப்படியே மோசே கர்த்தரண்டைக்குத் திரும்பிச் சொன்னதாவது: ஆ, இந்தச் சனம் கன பாதகமான பாவம்செய்து, தங்களுக்குப் பொன்தேவர்களை உண்டாக்கினார்கள்.

௩௨ இப்பொழுதும் அவர்கள் பாவத்தை மன்னித்தருளும்; இல்லாவிட்டால் என்னை நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலே கிறுக்கிப்போடுமென்றான்.

௩௩ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: யார் நமக்கு விரோதமாய்ப் பாவம்செய்கிறானோ அவனை நமது புஸ்தகத்திலே கிறுக்கிப்போடுவோம்.

௩௪ இப்பொழுதும் நீ போய், நாம் உனக்குச் சொன்ன இடத்திற்குச் சனத்தை

அழைத்துப்போ; இதோ நம்முடைய தூதன் உனக்குமுன்பாக நடப்பான்; ஆனால் நாம் விசாரிக்கும் நாளிலே அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்திலே விசாரிப்போம் என்றார்.

௩௫ அப்படியே சனம் உண்டுபண்ணினதாகிய ஆரோனுடைய செய்கையான கன்றுக்குட்டியின் நிமித்தம் கர்த்தர் அவர்களை வாதித்தார்.

௩௩. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீயும் எகிப்துதேசத்திலிருந்து நீ ஏறிவரப்பண்ணின சனமுமாய் இவ்விடத்தைவிட்டு, உன் வித்திற்குக் கொடுப்போமென்று நாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குப் போயேறுங்கள்.

௨ நாம் ஒரு தூதனை உனக்குமுன்பாக அனுப்பி, கானானியனையும், எமோரியனையும், எத்தியனையும், பெரிசியனையும், எவியனையும், எபூசியனையும் துரத்திவிடுவோம்.

௩ ஆனால் வழியிலே நாம் உன்னை நிர்மூலம்பண்ணாதபடிக்கு, நாம் உன் நடுவே நடந்தேறோம்; எனெனில் நீங்கள் கடினக்கழுத்துள்ள சனமென்றார்.

௪ ¶ தீங்கான இந்த வார்த்தையைச் சனம் கேட்டபொழுது, ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக்கொள்ளாமல் துக்கித்துக்கொண்டிருந்தார்கள்.

௫ எனென்றால், நீங்கள் கடினக்கழுத்துள்ள சனம்; நாம் ஒரு நிமிஷத்திலே உன் நடுவிலே எழும்பினால் உன்னை நிர்மூலம் பண்ணுவோம்; இப்பொழுதும் நாம் உனக்கு என்னசெய்யவேண்டுமென்று அறியும்படிக்கு, நீ போட்டிருக்கிற உன் ஆபரணங்களைக் கழற்றிப்போடென்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லென்பதை, கர்த்தர் மோசேயோடே சொல்லி இருந்தார்.

௬ ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் ஓரேப் பர்வதத்திற்கு முன்பாகத் தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போட்டார்கள்.

௭ ¶ மோசே கூடாரத்தைப் பேர்த்து, அதைப் புறம்பே பாளயத்திற்குத் தூரமாகப் போட்டுக்கொண்டு, அதை ஆசரிப்பின் கூடாரமென்றான்; ஆனதுகொண்டு கர்த்தரைக் கேட்பவனெல்லாம் பாளயத்திற்குப் புறம்பான ஆசரிப்பின் கூடாரத்திற்குப் புறப்பட்டுப் போவான்.

௮ மோசே கூடாரத்திற்குப் புறப்பட்டுப் போகும்பொழுது, சனமெல்லாம் எழுந்திருந்து, அவரவர் தம்தம் கூடாரத்தின் வாசல்படியில் நின்று, அவன் கூடாரத்திற்கு உட்படும்மட்டும், அவன் பிறகே பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

௯ ¶ மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்கையில் மேகத்தூண் இறங்கி, கூடாரத்தின் வாசல்படியிலே நின்றது; அங்கே மோசேயோடே பேசினார்.

௰ சனமெல்லாம் மேகத்தூணைக் கூடாரத்தின் வாசல்படியிலே நிற்கக் காணும்பொழுது, எழுந்திருந்து அவரவர் தங்கள் கூடாரத்தின் வாசல்படியிலே பணிந்துகொள்ளுவார்கள்.

௰௧ *கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுகிறதுபோலப் பேசுவார்; பிற்பாடு இவன் பாளயத்திற்குத் திரும்பிவருவான்; ஆனால் நூனின் குமாரனாகிய யோசுவாவென்ற அவன் வேலைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்பின் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருப்பான். *௪ மோ. ௰௨. ௮.

௰௨ ¶ மோசே கர்த்தரோடே சொன்னதாவது: இதோ தேவரீர் என்னோடே இந்தச் சனத்தைப்போய் எறப்பண்ணென்று சொன்னீர்; ஆனால் உன்னைப் பேர்சொல்லி அறிந்திருக்கிறோமென்றும், நம்முடைய கண்களில் உனக்குக் கிருபை கிடைத்ததென்றும், தேவரீர் சொல்லியிருந்தும், யாரை என்னோடேகூட அனுப்புவீரென்பதை எனக்கு அறிவிக்காதிருக்கிறீர்.

௰௩ இப்பொழுதும் உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததேயானால், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைக்கும்படியாக உம்மை நான் அறியட்டும்; இந்தச் சாதி உம்முடைய சனமென்று பாருமென்றான்.

௰௪ அதற்கவர் நாம் உன்னை இளைப்பாறப் பண்ணும்படிக்கு, *நம்முடைய முகம் உனக்குமுன்பாக நடந்துபோம் என்றார்.
*யோவா. ௰௪. ௬. கொலோ. ௧. ௰௫. எபி. ௬. ௩.

௰௫ அப்பொழுது அவன் அவரோடே சொன்னதாவது: உம்முடைய முகம் நடந்துபோகாதிருந்தால் எங்களை இங்கேயிருந்து புறப்படப்பண்ணீராக.

௰௬ ஏனெனில் எனக்கும் உமது சனத்திற்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படலாம்; நீர் எங்களோடே நடந்துபோகிறதினாலே அல்லவோ, அப்படியே பூமியின்மீதுள்ள எல்லாச் சனத்திலும் நானும் உம்முடைய சனமும் விசேஷித்தவர்களென்று விளங்குமென்றான்.

௰௭ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே, நீ சொன்ன இந்த வார்த்தையின்படியேயும் செய்வோம்; ஏனெனில் நம்முடைய கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; உன்னைப் பேர்சொல்லி அறிந்திருக்கிறோம் என்றார்.

௰௮ அப்பொழுது அவன் உம்முடைய மகிமையை எனக்குக் காண்பியுமென்றான்.

௰௯ அதற்கு அவர், நாம் நம்முடைய தயை எல்லாம் உனக்கு முன்பாகக் கடக்கப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்குமுன்பாகக் கூறி, நாம் கிருபைவைத்தவன்மேல் கிருபையாயிருந்து, நாம் இரக்கம்வைத்தவன்மேல் இரக்கமாயிருப்போமென்று சொல்லி,

௨௰ பின்னையும் நம்முடைய முகத்தைப் பார்க்கமாட்டாய்; ஏனெனில் ஒரு மனிதனும் நம்மைப் பார்த்து, உயிரோடிருக்கக்கூடாதென்றார்.

௨௧ பின்னையும் கர்த்தர் சொன்னதாவது: இதோ, நம்மண்டையில் ஒரு இடம் இருக்கின்றது, அங்கே நீ கல்மலையில் நிற்பாயாக.

௨௨ அப்பொழுது சம்பவிப்பதேதெனில். நம்முடைய மகிமை கடக்கும்போது, நாம் உன்னை அந்தக் கல்மலையின் வெடிப்பிலே வைத்து, நாம் கடந்துபோகும்மட்டும் நம்முடைய கரத்தினால் உன்னை மூடுவோம்.

௨௩ பிற்பாடு நம்முடைய கரத்தை வாங்குவோம்; அப்பொழுது நமக்குப் பின்னாகப் பார்ப்பாய்; நம்முடைய முகமோவென்றால், பார்க்கப்படக்கூடாதென்றார்.

௩௰௪. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள், நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளிலிருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவோம்.

௨ நீ விடியற்காலத்திற்கு ஆயத்தமாயிருந்து, காலமே சீனாய்ப்பர்வதத்தில் ஏறி, அங்கே பர்வதத்தின் கொடுமுடியிலே நமக்குக் காத்துநில்.

௩ உன்னோடேகூட ஒருவரும் ஏறவும், பர்வதமெங்கும் ஒருவரும் காணப்படவும் வேண்டாம்; இந்தப் பர்வதத்திற்கு எதிராக ஆடுமாடு மேயவும் வேண்டாமென்றார்.

௪ ¶ அப்பொழுது மோசே முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை இழைத்து, அதிகாலேமே எழுந்திருந்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே இரண்டு கற்பலகைகளைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு, சீனாய்ப்பர்வதத்தில் ஏறினான்.

௫ அப்பொழுது கர்த்தர் ஒரு மேகத்திலே இறங்கி, அங்கே அவனண்டையிலே நின்றுகொண்டு, கர்த்தருடைய நாமத்தைக் கூறினார்.

௬ கர்த்தர் அவனுக்குமுன்பாகக் கடந்து

போகிறபொழுது, அவர் கூறினதாவது: அவர் கர்த்தர், அவர் கர்த்தர், *அவர் மனஉருக்கமும் இரக்கமும் நீடியசாந்தமும் மகா கிருபையும் உண்மையுமுள்ள பராபரன். *௪ மோ. ௰௪. ௰௭, ௰௮. சங். ௮௬. ௰௫: ௱௩. ௭, ௮: ௱௪௫. ௮. யோவா. ௨. ௰௩.

௭ *அவர் ஆயிரம் தலைமுறைகளுக்குக் கிருபையைக் காக்கிறவர்; அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; அவர் குற்றமுள்ளவனைக் குற்றமற்று நீங்கவொட்டாமல், பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும் பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவரென்று கூறினார். * சங். ௱௩. ௩. மீகா. ௭. ௰௮, ௰௯.

௮ மோசே தீவிரமாகத் தரைமட்டும் குனிந்து பணிந்துகொண்டு,

௯ ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததேயாகில், ஆண்டவர் எங்கள் நடுவிலே நடந்துபோவாராக; ஏனெனில் அது கடினக்கழுத்துள்ள சனம்; நீரோவெனில் எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களைச் சுதந்தரித்துக்கொள்வீராக என்றான்.

௰ ¶ அப்பொழுது அவர் சொன்னதாவது: இதோ, நாம் உடம்படிக்கைபண்ணுகிறோம்; பூமி எங்கும் எந்தச் சாதிகளிடத்திலும் சிருஷ்டிக்கப்படாதிருக்கிற அதிசயங்களை உன்னுடைய எல்லாச் சனத்திற்கும் முன்பாகச் செய்வோம்; நீ தங்கியிருக்கிற சனமெல்லாம் கர்த்தருடைய செய்கையைப் பார்க்கப் போம்; ஏனெனில் நாம் உன்னோடே இருந்து செய்யப்போகிறது பயங்கரமாயிருக்கும்.

௰௧ இன்று நாம் உனக்குக் கற்பிக்கிறதையே கைக்கொள்; இதோ, ஏமோரியனையும், கானானியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனையும், ஏபூசியனையும் உனக்குமுன்பாகத் துரத்திவிடுகிறோம்.

௰௨ நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடி உன் நடுவே கண்ணி ஆகாதபடிக்கு நீ அவர்களோடே உடம்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இரு.

௰௩ அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடக்கடவீர்கள்.

௰௪ ஏனெனில் அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளலாகாது; அதேனென்றால் கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவரென்பது; அவர் எரிச்சலுள்ள பராபரன்.

௰௫ அந்தத் தேசத்தின் குடிகளோடே உடம்படிக்கைபண்ணாயாக; மற்றப்படி அவர்களுடைய தேவர்களின் பிறகாலே சோரம்போய், அவர்கள் தேவர்களுக்குப் பலியிடுவார்கள்; அவர்கள் உன்னை அழைக்கையில், நீ போய் அவர்கள் பலியிட்டதிலே புசித்து,

௰௬ அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அப்படியே அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களின் பிறகாலே சோரம்போகையில் உன் குமாரரையும் தங்கள் தேவர்களின் பிறகாலே சோரம்போகப்பண்ணுவார்கள்.

௰௭ வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உனக்குண்டாக்காயாக.

௰௮ ¶ நீ புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையைக் கைக்கொண்டு, நாம் உனக்குக் கற்பித்தபடி ஆபீப் மாதத்தின் திட்டமான காலத்திலே, ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பாயாக; ஏனெனில் ஆபீப் மாதத்திலே எகிப்திலிருந்து புறப்பட்டாய்.

௰௯ கர்ப்பம் திறந்து பிறக்கிற யாவும் உன் ஆடுமாடுகளின் மந்தையிலே தலையீற்றான ஆண் யாவும் நம்முடையவைகள்.

௨௰ ஆனால் கழுதையின் தலையீற்றை ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்வாயாக; மீட்காயேயானால் அதின் தலையை வெட்டிப்போடக்கடவாய்; உன் பிள்ளைகளில்

முதல்பேறானவைகளை எல்லாம் மீட்டுக்கொள்வாயாக; வெறுங்கையாய் நமக்கு முன்பாகக் காணப்படார்களாக,

௨௧ ¶ ஆறுநாள் வேலைசெய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பாயாக; உழுகிற காலமானாலும் அறுக்கிற காலமானாலும் ஓய்ந்திருப்பாயாக.

௨௨ ¶ கோதுமை அறுப்பின் முதல்பலனைச் செலுத்தும் ஏழு வாரங்களின் பண்டிகையையும் வருஷமுடிவிலே சேர்ப்பின் பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

௨௩ ¶ வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்சாதி எல்லாம் இஸ்ரவேலின் பராபரனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதிக்குமுன்பாகக் காணப்படக்கடவது.

௨௪ ஏனெனில் நாம் புறச்சாதிகளை உனக்குமுன்பாகத் துரத்திவிட்டு, உன் எல்லைகளை விஸ்தாரமாக்குவோம்; நீ வருஷத்தில் மூன்றுதரம் உன் பராபரனாகிய கர்த்தரின் சந்நிதிக்குமுன்பாகக் காணப்படப் போயேறுகையில், ஒருவரும் உன் தேசத்தை இச்சிப்பதில்லை.

௨௫ ¶ புளித்தமா இருக்கும்போது, நமது பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக; பஸ்காப்பண்டிகையின் பலி விடியற்காலம்மட்டும் இராத்தங்கவும் வேண்டாம்.

௨௬ உன் சீர்மையின் முதல் விளைச்சலில் முந்தின கனியை உன் பராபரனாகிய கர்த்தரின் வீட்டிற்குக் கொண்டுவருவாயாக; வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலோடேகூடச் சமைக்காயாக என்றார்.

௨௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயுடனே, இந்த வார்த்தைகளை எழுதிக்கொள்; ஏனெனில் இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடம்படிக்கை பண்ணினோமென்றார்.

௨௮ அவன் அங்கே கர்த்தரோடே இரவும் பகலும் நாற்பதுநாள் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தான்; அவர் பத்து வசனங்களாகிய உடம்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினார்.

௨௯ ¶ மோசே சாட்சியின் இரண்டு பலகைகளைத் தன் கையிலே பிடித்து, சீனாய் பர்வதத்திலிருந்து இறங்குகிறபொழுது, அவர் தன்னோடே பேசினதினாலே தன் முகத்தின் தோல் பிரகாசிக்கின்றதென்கிறதை அவன் அறியாதிருந்தான்.

௩௰ ஆரோனும் இஸ்ரவேலின் எல்லாப் புத்திரரும் மோசேயைப் பார்க்கும்பொழுது, இதோ, அவன் முகத்தின் தோல் பிரகாசித்தது; ஆகையால் அவனண்டைக்குச் சேரப் பயந்தார்கள்.

௩௧ ஆனால் மோசே அவர்களைக் கூப்பிட்டான்; அப்பொழுது ஆரோனும் சபையிலுள்ள எல்லாப் பிரபுக்களும் அவனண்டைக்குத் திரும்பினார்கள்; மோசே அவர்களோடே பேசினான்.

௩௨ அதற்குப் பிறகு இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் அவனண்டையில் சேர்ந்தார்கள்; அப்பொழுது அவன் சீனாய்ப்பர்வதத்திலே கர்த்தர் தன்னோடே பேசினவைகளை எல்லாம் அவர்களுக்குக் கற்பித்தான்.

௩௩ மோசே அவர்களோடே பேசி * முடியும்மட்டும், தன் முகத்தின்மேல் முக்காடு போட்டிருந்தான். *௨ கொரி. ௩. ௭.

௩௪ ஆனால் மோசே கர்த்தரின் சந்நிதியிலே அவரோடே பேசும்படிக்கு உள்பிரவேசிக்கையில், முக்காட்டை வாங்கிப் புறப்படும்மட்டும் போடாதிருந்தான்; அவன் புறப்பட்டுவந்து, தனக்குக் கற்பிக்கப்பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லும்பொழுதோவெனில்,

௩௫ இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை அதின் தோல் பிரகாசிக்கிறதென்று பார்த்தார்கள், ஆகையால் மோசே அவரோடே பேசும்படிக்கு உள்பிரவேசிக்கும்மட்டும், முக்காட்டைத் திரும்பத் தன் முகத்தின் மேலே போடுவான்.

௩௫. அதிகாரம்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபையை எல்லாம் கூட்டி, அவர்களோடே

சொன்னதாவது: கர்த்தர் செய்யக் கற்பித்ததேதெனில்,

௨ ஆறுநாளுக்குள்ளே உன் வேலையைச் செய்வாயாக; ஏழாம் நாளோவென்றால் உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக; அது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அதிலே வேலைசெய்கிறவனெல்லாம் கொலையுண்ணக்கடவன்.

௩ ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் நெருப்பு மூட்டாதிருப்பீர்களாகவென்று கற்பித்தாரென்றான்.

௪ ¶ பின்னையும் மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபையோடெல்லாம் சொன்னதாவது: கர்த்தர் கற்பித்ததேதெனில்,

௫ *உங்களுக்குண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கையை எடுத்துச் செலுத்துங்கள்; மனப்பூர்வகமுள்ளவனெல்லாம் அதைக் கொண்டுவரக்கடவன்; கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கை என்னவெனில், பொன்னும், வெள்ளியும், வெண்கலமும்,

*௨ மோ. ௨௫. ௨.

௬ இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும்,

௭ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களும், தகசுகளின்தோல்களும், சீத்திம் மரங்களும்,

௮ விளக்குக்கு எண்ணெயும், அபிஷேகத்தெண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களும், தூபம் காட்டுதலுக்குச் சுகந்த வர்க்கங்களும்,

௯ ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் கோமேதகக் கற்களும் பதித்துவைக்கும் இரத்தினங்களும்தானே.

௰ உங்களில் ஞானமான இருதயமுள்ள அனைவரும் வந்து கர்த்தர் கற்பித்தவைகளை எல்லாம் செய்வார்களாக.

௰௧ வாசஸ்தலத்தையும், அதின் கூடாரத்தையும், அதின் மூடியையும், அதின் துறடுகளையும், அதின் பலகைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும்,

௰௨ பெட்டியையும், அதின் வாரைகளையும், கிருபாசனமான மூடியையும், மறைவின் திரையையும்,

௰௩ மேசையையும், அதின் வாரைகளையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், சமுகத்து அப்பங்களையும்,

௰௪ வெளிச்சம்காட்டும் குத்துவிளக்கையும், அதின் முட்டுகளையும், அதின் விளக்குகளையும், வெளிச்சத்திற்கு எண்ணெயையும்,

௰௫ தூபபீடத்தையும், அதின் வாரைகளையும், அபிஷேகத்தெண்ணெயையும், சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசலுக்கு மறைவையும்,

௰௬ தகனபலிபீடத்தையும், அதின் வெண்கலச் சல்லடையையும், அதின் வாரைகளையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமணையையும்,

௰௭ பிரகாரத்தின் வெளியாடைகளையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும், பிரகாரத்து வாசலின் மறைவையும்,

௰௮ வாசஸ்தலத்தின் முளைக் கூச்சுகளையும், பிரகாரத்தின் முளைக் கூச்சுகளையும், அவைகளின் கயிறுகளையும்.

௰௯ பரிசுத்த ஸ்தலத்திலே செய்கிற ஆராதனையின் சீலைகளையும், ஆசாரிய ஊழியம் செய்கிற ஆரோனின் பரிசுதத வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும், அவர்கள் செய்வார்களாக என்றாரென்று சொன்னான்.

௨௰ ¶ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரின் சபை எல்லாம் மோசேயைவிட்டுப் புறப்பட்டது.

௨௰௧ எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, அவர்கள் ஆவி பூர்வமாக்கிற்றோ, அவர்களெல்லாரும் வந்து, ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும் அதின் சகல ஊழியத்திற்கும் பரிசுத்த வஸ்திரங்களுக்கும் கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

௨௰௨ கர்த்தருக்குப் பொன்னை அசைவாட்

டும் காணிக்கையாகச் செலுத்துகிற புருஷரும் பெண்சாதிகளுமான மனப்பூர்வமுள்ள அனைவரும் வந்து, சரடுகள், கடுக்கன்கள், மோதிரங்கள், காப்புகள்முதலான சகலவித பொன்பணிகளையும் கொண்டுவந்தார்கள்.

உ௩ தங்களிடத்தில் இளநீலநூலையும், இரத்தாம்பரநூலையும், சிவப்புநூலையும், மெல்லிய பஞ்சுநூலையும், வெள்ளாட்டுமயிரையும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களையும், தகசுகளின் தோல்களையும் கண்டுபிடித்த யாவரும் கொண்டுவந்தார்கள்.

உ௪ வெள்ளியையும் வெண்கலத்தையும் கொடுக்கத்தக்க யாவரும் அவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள்; வேலையிலே சகலவித கிரியைக்குமான சீத்திம் மரங்களைத் தங்களிடத்தில் கண்டுபிடித்த யாவரும் கொண்டுவந்தார்கள்.

உ௫ ஞானமான இருதயமுள்ள ஸ்திரிகளெல்லாரும் தங்கள் கைகளினாலே நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும், இரத்தாம்பரநூலையும், சிவப்புநூலையும், மெல்லிய பஞ்சுநூலையும் கொண்டுவந்தார்கள்.

உ௬ எந்த ஸ்திரிகளை அவர்கள் இருதயம் ஞானமாகச்செய்ய எழுப்பிற்றோ, அவர்கள் வெள்ளாட்டுமயிரை நூற்றார்கள்.

உ௭ பிரபுக்கள் ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் என்று கோமேதகக் கல்லுகளையும், பதித்துவைக்கும் இரத்தினங்களையும்,

உ௮ பரிமள வர்க்கங்களையும், விளக்கெண்ணெயையும், அபிஷேகத்தெண்ணெய்க்கும் சுகந்தவர்க்கங்களின் தூபங்காட்டுதலுக்கும் வேண்டியவைகளையும் கொண்டுவந்தார்கள்.

உ௯ செய்கிறதற்குக் கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த எல்லா வேலைக்கும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரரில் தங்கள் இருதயத்தால் மனப்பூர்வமாக்கப்பட்ட எல்லாப் புருஷரும் ஸ்திரிகளும் கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

௩௰ ¶ மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னதாவது: பாருங்கள், கர்த்தர் *யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெத்சாலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, *௨ மோ. ௩௧. ௨.

௩௧ அவன் விநோதமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும்,

௩௨ இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதித்துவைக்கவும், மரத்திலே தச்சுவேலைசெய்து சகல விநோதமான வேலையைப் பண்ணவும்,

௩௩ அவனுக்கு ஞானமும் உணர்வும் அறிவும் சகலவித வேலையின் வித்தையும் உண்டாக அவனைப் பராபரன் தம்முடைய ஆவியினாலே நிரப்பினார்.

௩௪ அவன் இருதயத்திலும், தாண் கோத்திர அகிசமாகின் குமாரனாகிய அகோலியாவின் இருதயத்திலும், போதிக்கிறதற்கான வரத்தையும் கொடுத்தார்.

௩௫ சகலவித தொழிலின் சூட்சமவேலையையும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணுகிற சித்திரத்தையல் வேலையையும், நெய்கிற எல்லா வேலையையும் செய்ய, அவர்களை இருதயத்தின் ஞானத்தினாலே நிரப்பினார்; அவர்கள் சகலவித வேலையைச் செய்த விநோதமான வேலைகளை யோசித்துப் பண்ணுவார்கள் என்றார்.

௩௬. அதிகாரம்.

அப்பொழுது பெத்சாலெயேலும், அகோலியாவும், பரிசுத்தவேலையின் எல்லாக் கிரியையும் கர்த்தர் கற்பித்தபடி எல்லாம் செய்ய அறியும்படிக்கு, கர்த்தர் ஞானமும் உணர்வும்கொடுத்த ஞானமான இருதயமுள்ள அனைவரும், வேலைக்குட்பட்டார்கள்.

௨ எனென்றால் மோசே பெத்சாலெயேலையும், அகோலியாவையும், கர்த்தர் ஞானம்

கொடுத்ததினாலே அந்த வேலையைச் செய்யச் சேருகிறதற்கு, தங்கள் இருதயத்தால் எழுப்பப்பட்ட ஞானமுள்ள இருதயத்தாராகிய எல்லாரையும் வரவழைத்தான்.

௩ அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த வேலையின் கிரியைக்குக் கொண்டுவந்ததாகிய மோசேக்குமுன்பாக இருந்த காணிக்கையை எல்லாம் அதைச் செய்யும்படிக்கு ஒப்புவித்துக்கொண்டார்கள்; இவர்களோவென்றால் இன்னம் காலையில் மனப்பூர்வமான காணிக்கைகளை அவனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௪ ¶ அப்பொழுது பரிசுத்தவேலையையெல்லாம் செய்கிற சகல ஞானிகளும் அவரவர் தாங்கள் செய்கிற வேலையின் காரியமாய் வந்து,

௫ மோசேயுடனே, கர்த்தர் செய்யக் கற்பித்த கிரியையின் வேலைக்கு வேண்டியதைப்பார்க்கிலும் சனம் மிச்சமாய்க் கொண்டுவருகின்றதென்றார்கள்.

௬ அப்பொழுது மோசே இனிப் புருஷரும் ஸ்திரிகளும் பரிசுத்த காணிக்கைக்கென்று வேலைசெய்யார்களாகவென்று பாளயத்திலே கூறக் கட்டளையிட்டான்; அப்படியே சனம் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது.

௭ ஏனெனில் செய்யப்போகிற எல்லா வேலைக்கும் போந்த தளவாடம் அதிகமாயிருந்தது.

௮ ¶ வேலையைச் செய்கிறவர்களில் ஞானமான இருதயமுள்ள அனைவரும் *வாசஸ்தலத்தை உண்டாக்கினார்கள்; அதற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், நெய்தலான விநோத வேலையாகிய கேருபீன்களுமுள்ள பத்துச் சமுக்காளங்களைப் பண்ணுவித்தான். *௨ மோ. ௨௬. ௧.

௯ ஒவ்வொரு சமுக்காளம் இருபத்தெட்டு முழ நீளமும், நான்குமுழ அகலமும், சமுக்காளங்களெல்லாம் ஒரே அளவுமாயிருந்தன.

௰ ஐந்து சமுக்காளங்களை ஒன்றோடொன்றாக இணைத்து, மற்ற ஐந்து சமுக்காளங்களையும் ஒன்றோடொன்றாக இணைத்தான்.

௰௧ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடையோரத்திலே இளநீலநூலால் ஐம்பது காதுகளை உண்டுபண்ணி, அப்படியே இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் கடையோரத்திலும் உண்டுபண்ணினான்.

௰௨ காதுகள் ஒன்றுக்கொன்று எதிராகச் சேர்ந்தவைகளாயிருந்தன.

௰௩ ஐம்பது பொன்துறடுகளையும் பண்ணி, அவைகளால் சமுக்காளங்களை ஏக வாசஸ்தலமாகப் போகும்படிக்கு, ஒன்றுக்கொன்று இணைத்துப்போட்டான்.

௰௪ ¶ வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாக ஆட்டுமயிரினால் நெய்த பதினொரு சமுக்காளங்களையும் பண்ணினான்.

௰௫ ஒவ்வொரு சமுக்காளம் முப்பது முழ நீளமும், நான்குமுழ அகலமும், பதினொரு சமுக்காளங்களும் ஒரே அளவுமாயிருந்தன.

௰௬ ஐந்து சமுக்காளங்களை ஒன்றாகவும் ஆறு சமுக்காளங்களை ஒன்றாகவும் இணைத்து,

௰௭ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடையோரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும், உண்டாக்கி,

௰௮ கூடாரத்தை ஒன்றாய் இணைத்துவிட ஐம்பது வெண்கலத் துறடுகளை உண்டாக்கினான்.

௰௯ ¶ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களினாலே கூடாரத்திற்கு ஒரு மூடியையும் அதின்மேலே தகசுத்தோல்களினாலே ஒரு மூடியையும் உண்டுபண்ணினான்.

௨௰ ¶ நிமிர்ந்துநிற்கிற பலகைகளையும் வாசஸ்தலத்திற்குச் சீத்திம் மரங்களாலே செப்பனிட்டான்.

௨௧ ஒவ்வொரு பலகை பத்துமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமாயிருந்தது.

௨௨ ஒன்றுக்கொன்று எதிரே இசைவான

ஒழுங்காயிருக்கிற இரண்டு முளைகள் ஒவ்வொரு பலகைக்கிருந்தன; இப்படி வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் செய்தான்.

௨௩ வாசஸ்தலத்திற்காகச் செப்பனிட்ட பலகைகளில் இருபதைத் தெற்கே தென்திசைக்கு எதிராக நிறுத்தி,

௨௪ அந்த இருபது பலகைகளின்கீழே நாற்பது வெள்ளிக்கால்களை, ஒவ்வொரு பலகையின்கீழ் அதின் இரண்டு முளைகளுக்கான இரண்டு கால்களாக, உண்டுபண்ணிவைத்து,

௨௫ வாசஸ்தலத்தின் வடக்கான மறுபக்கத்திலும் இருபது பலகைகளை நிறுத்தி,

௨௬ அவைகளின் நாற்பது வெள்ளிக்கால்களையும் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டு கால்களாகப் பண்ணுவித்தான்.

௨௭ வாசஸ்தலத்தின் மேல்ப்புறமாக ஆறு பலகைகளை நிறுத்தி,

௨௮ வாசஸ்தலத்தின் இரண்டு பக்கக்கோடிகளுக்கு இரண்டு பலகைகளையும் செப்பனிட்டான்.

௨௯ இவைகள் தாழத்துவக்கி இரண்டு பக்கங்களை ஏகமாய்ப் பிடித்து, உயர ஒரே சட்டமாய் இசைத்திருந்தன; இரண்டு கோடிகளிலுமிருக்கும் இரண்டையும் அப்படிச்செய்தான்.

௩௰ அப்படியே பலகைகள் எட்டும் அவைகளுடைய வெள்ளிக்கால்கள் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டிரண்டு காலாகப் பதினாறுமாயிருந்தன.

௩௧ ¶ சித்திம் மரங்களால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,

௩௨ வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மேல்ப்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணி,

௩௩ நடுத் தாழ்ப்பாளைப். பலகைகளின் மையத்திலே ஒருமுனைதுவக்கி மறுமுனை மட்டும் பாய்ச்சப்படுகிறதாக்கினான்.

௩௪ பலகைகளைப் பொன் தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினாலே பண்ணி, தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால் மூடினான்.

௩௫ ¶ இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலும், நெய்தலின் விநோத வேலையாகிய கேருபீன்களுமுள்ள திரையை உண்டுபண்ணி,

௩௬ அதற்குச் சீத்திம் மரமான நான்கு தூண்களைச் செப்பனிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளின் வளைவாணிகளைப் பொன்னினாலே பண்ணி, அவைகளுக்கு நான்கு வெள்ளிக்கால்களை வார்ப்பித்தான்.

௩௭ ¶ கூடாரத்தின் வாசலுக்கு இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலும், சித்திரத்தையல்வேலையுமான ஒரு மறைவையும்,

௩௮ அதின் ஐந்து தூண்களையும், அவைகளின் வளைவாணிகளையும் உண்டாக்கி, அவைகளின் குமிழ்களையும், அதின் வளையங்களையும், பொன்தகட்டால் மூடினான்; அவைகளுக்கு வார்ப்பித்த ஐந்து கால்களோவெனில் வெண்கலம்.

௩௭. அதிகாரம்.

பெத்சாலெயேல் சீத்திம் மரங்களால் *பெட்டியை உண்டுபண்ணினான்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமானது. *௨ மோ. ௨௫. ௰.

௨ அதை உள்ளும் புறம்பும் சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டாக்கி,

௩ அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கோடிகளிலே, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும் மறுபக்கத்தில் இரண்டு வளை

யங்களும் இருக்கும்படிக்குத் தைத்து,

௪ சீத்திம் மரங்களான வாரைகளைச் செப்பணிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

௫ அந்த வாரைகளால் பெட்டியைச் சுமக்கும்படிக்கு, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலுள்ள வளையங்களில் பாய்ச்சினான்.

௬ ¶ சுத்தப் பொன்னினாலே *கிருபாசனமான மூடியையும் பண்ணினான்; அது இரண்டரைமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமானது. *௨ மோ. ௨௫. ௰௭.

௭ பொன்னான இரண்டு கேருபீன்களையும் அடிக்கப்பட்ட பொன்னினாலே உண்டாக்கி, கிருபாசனமான மூடியின் இரண்டோரங்களிலே,

௮ ஒரே கேருபீன் இந்தப்புறத்தினோரத்திலும், மற்றக் கேருபீன் அந்தப்புறத்தினோரத்திலும் இருக்கும்படி பண்ணினான்; அந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூடியின் இரண்டோரங்களில் அதிலிருந்து உண்டானவைகளாக இருக்கப்பண்ணினான்.

௯ அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளாலே கிருபாசனமான மூடியை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்களுமாயிருந்தன; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனமான மூடியை நோக்கிக்கொண்டிருந்தன.

௰ ¶ சீத்திம் மரங்களாலே *மேசையையும் பண்ணினான்; அது இரண்டுமுழ நீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமானது. *௨ மோ. ௨௫. ௨௩.

௰௧ அதைச் சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டாக்கி,

௰௨ சுற்றிலும் அதற்கு நான்கு விரல்கடையான சட்டத்தையும் சுற்றிலும் அதின் சட்டத்திற்கும் பொன்திரணையை உண்டுபண்ணி,

௰௩ அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கால்களுக்கிருக்கும் நான்கு கோடிகளிலே தைத்தான்.

௰௪ அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கும் வாரைகளின் இடங்களாயிருக்கும்படிக்குச் சட்டத்துக்கெதிரே இருக்கப்பண்ணினான்.

௰௫ மேசையைச் சுமக்கும் அந்த வாரைகளைச் சீத்திம் மரங்களாலே பண்ணி, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

௰௬ மேசையின்மேலிருக்கும் முட்டுகளாகிய அதின் கலங்களையும், அதின் தூபக்கிண்ணிகளையும், அதின் கரகங்களையும்; மூடுகிறதற்கான அதின் தட்டுகளையும், சுத்தப் பொன்னினாலே உண்டாக்கினான்.

௰௭ ¶ *அடிக்கப்பட்ட சுத்தப் பொன்னினாலே குத்துவிளக்கையும் உண்டாக்கினான்; அதின் தண்டும் அதின் கிளைகளும் அதின் மொக்குகளும் அதின் மாதளம்பழங்களும் அதின் பூக்களும் அதிலிருந்து புறப்படுகிறவைகளாயிருந்தன. *௨ மோ. ௨௫. ௩௧.

௰௮ குத்துவிளக்கின் பக்கங்களிலிருந்து ஆறு கிளைகள், மூன்று அதின் ஒரு பக்கத்திலும் மூன்று அதின் மறு பக்கத்திலுமிருந்து புறப்பட்டன.

௰௯ ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்கொட்டைகளின் சாயலான மூன்று மொக்குகளும் ஒரு மாதளம்பழமும் ஒரு பூவும் இருந்தன; குத்துவிளக்கிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளிலும் அப்படியிருந்தன.

௨௰ விளக்குத்தண்டிலோவென்றால், வாதுமைக்கொட்டைகளின் சாயலான நான்கு மொக்குகளும் அதின் மாதளம்பழங்களும், அதின் பூக்களுமிருந்தன.

௨௰௧ அதிலிருந்து புறப்படுகிற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் வேறே இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் குறை இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் இருந்தன; விளக்குத்தண்டிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளுக்கும் அப்படி இருந்தன.

௨௰௨ அவைகளின் மாதளம்பழங்களும் அ

வைகளின் கிளைகளும் அதிலிருந்து உண்டானவைகளாக இருந்தன; எல்லாம் அடிக்கப்பட்ட சுத்தப் பொன்னாகிய ஒரு துண்டாயிருந்தது.

௨௩ அதின் ஏழு விளக்குகளையும் அதின் கத்தரிகளையும் விளக்கணைக்கிற எத்தனங்களையும் சுத்தப் பொன்னினாலே உண்டாக்கினான்.

௨௪ அதை அதினுடைய எல்லா முஸ்தீதுகளோடும்கூட ஒரு தாலந்து சுத்தப் பொன்னினாலே உண்டுபண்ணினான்.

௨௫ ¶ சீத்திம் மரங்களினாலே *தூபபீடத்தையும் உண்டாக்கினான்; அது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமுமாகிய சதுரமும், இரண்டு முழ உயரமும், அதின் கொம்புகள் அதனோடு, ஒரு துண்டுமாய் இருந்தன. *௨ மோ. ௩௰. ௧.

௨௬ அதை எல்லாம் அதின் மேல்பலகையையும், அதின் சுற்றுப்பக்கங்களையும், அதின் கொம்புகளையும், சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டுபண்ணி,

௨௭ அதின் திரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களிலிருக்கும் இரண்டு கோடிகளில் இவ்விரண்டு பொன்வளையங்களை அதைச்சுமக்கும் வாரைகளினிடங்களாகத் தைத்து,

௨௮ சீத்திம் மரங்களால் அந்த வாரைகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடினான்.

௨௯ பரிசுத்த அபிஷேகத்தெண்ணெயையும் சுத்தமான சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும் தயிலக்காரன் வேலையாக உண்டுபண்ணினான்.

௩௮. அதிகாரம்.

சீத்திம் மரங்களால் *தகனபலிபீடத்தையும் உண்டாக்கினான்; அது ஐந்துமுழ நீளமும் ஐந்துமுழ அகலமுமான சதுரமும் மூன்றுமுழ உயரமுமானது. *௨ மோ. ௨௭. ௧.

௨ அதின் நான்கு கோடிகள்மேல் அதனோடு ஏகமாயிருக்கிற அதின் நான்கு கொம்புகளையும் உண்டாக்கி, அதை வெண்கலத் தகட்டால் மூடி,

௩ அந்தப் பீடத்தின் சகலமுட்டுகளாகிய செப்புச்சட்டிகளையும் சாம்பலெடுக்கும் கரண்டிகளையும் கலங்களையும் முள்துறடுகளையும் கலசங்களையும் உண்டாக்கினான்; அதின் முட்டுகளை எல்லாம் வெண்கலத்தினாலே பண்ணினான்.

௪ வலைபோலிருக்கிற ஒரு வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்திற்கு உண்டாக்கி, அதைத் தாழ அதின் சுற்றிற்குக் கீழ்ப்புறமாக அதின் பாதிமட்டும் வரவைத்து,

௫ வாரைகளின் இடங்களாகிய நான்கு வளையங்களை வார்ப்பித்து, வெண்கலச் சல்லடையின் நான்கு மூலைகளில் வைத்து,

௬ சீத்திம் மரங்களால் வாரைகளைப் பண்ணி, அவைகளை வெண்கலத் தகட்டால் மூடி,

௭ அவைகளைப் பலிபீடத்தின் பக்கங்களிலிருக்கிற வளையங்களிலே, அதை அவைகளாலே சுமக்கும்படிக்குப் பாய்ச்சினான்; அதைப் பலகைகளினாலே குழாயாக்கினான்.

௮ ¶ *ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் கும்பு கும்பாய் வந்து காணிக்கை செலுத்துகிற ஸ்திரிகளின் கண்ணாடிகளாலே, வெண்கலத்தொட்டியையும் அதின் வெண்கலப் புரிமணையையும் உண்டாக்கினான்; †பிரகாரத்தையும் உண்டுபண்ணினான்.
*௨ மோ. ௩௰. ௰௮. †௨ மோ. ௨௭. ௯.

௯ ¶ தெற்கே தென்பக்கத்திற்கு எதிராயிருக்கிற திரித்த மெல்லிய பஞ்சுநூலால் நெய்த பிரகாரத்தின் வெளியாடைகள் நூறு முழமும்,

௰ அவைகளின் தூண்கள் இருபது; அவைகளின் இருபது கால்கள் வெண்கலமும், தூண்களின் வளைவாணிகளும் அவைகளின் வளையங்களும் வெள்ளியுமானது.

௰௧ வடபக்கத்திற்கு எதிரானவைகளும் நூறு முழமும், அவைகளின் தூண்கள் இருபது; இவைகளின் இருபது கால்கள்

வெண்கலமும், தூண்களின் வளைவாணிகளும் வளையங்களும் வெள்ளியுமானது.

௰௨ மேல்ப்பக்கத்திற்கு எதிரான வெளியாடைகள் ஐம்பது முழமானது; அவைகளின் தூண்கள் பத்து; இவைகளின் கால்களும் பத்து; தூண்களின் வளைவாணிகளும் வளையங்களும் வெள்ளி.

௰௩ சூரியன் உதிக்கிற கீழ்ப்பக்கத்திற்கு எதிரானவைகளும் ஐம்பது முழம்.

௰௪ அங்கே ஒருபுறத்து வெளியாடைகள் பதினைந்து முழமானது; அவைகளின் தூண்கள் மூன்றும் இவைகளின் கால்கள் மூன்றும்தானே.

௰௫ பிரகாரவாசலின் இந்தப்பக்கத்துக்குச்சரியாக அந்தப்பக்கத்திலும் மறுபுறத்து வெளியாடைகள் பதினைந்து முழமானது; அவைகளின் தூண்கள் மூன்றும் இவைகளின் கால்கள் மூன்றும்தானே.

௰௬ சுற்றிலும் பிரகாரத்தின் வெளியாடைகளெல்லாம் மெல்லிய பஞ்சுநூலால் நெய்தது.

௰௭ தூண்களின் கால்கள் வெண்கலமும், தூண்களின் வளைவாணிகளும் வளையங்களும் வெள்ளியுமானது; அவைகளின் குமிழ்கள் வெள்ளித்தகட்டால் மூடப்பட்டதும், பிரகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளி வளையங்கள் போடப்பட்டவைகளுமாயிருந்தன.

௰௮ *பிரகாரவாசலின் மறைவோவென்றால், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலுமாகிய சித்திரத்தையல்வேலையாயிருந்தது; அதின் நீளம் இருபது முழமும், அகலமாகிய அதின் உயர்வு பிரகாரத்தின் வெளியாடைகளுக்குச் சரிசமானமாய் ஐந்து முழமுமானது. *௨ மோ. ௨௭. ௰௪.

௰௯ அவைகளின் தூண்கள் நான்கு; அவைகளின் நான்கு கால்கள் வெண்கலமும், அவைகளின் வளைவாணிகள் வெள்ளியும், அவைகளின் குமிழ்கள் மூடப்பட்ட தகடும், அவைகளின் வளையங்களும் வெள்ளியுமாயிருந்தன.

௨௰ வாசஸ்தலத்திற்கும் பிரகாரத்திற்கும் சுற்றிலுமிருந்த எல்லா முளைக்கூச்சுகளும் வெண்கலம்.

௨௧ ¶ சாட்சியின் வாசஸ்தலத்திற்குச் சென்றவைகளின்கணக்கோவென்றால், அவைகள் மோசேயின் சொல்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான இத்தமாரின் கையிலே லேவியரின் ஊழியத்திற்கென்று எண்ணப்பட்டது.

௨௨ யூதா கோத்திரத்து ஊரின் மகனாகிய ஊரியின் குமாரன் பெத்சாலேயேல் கர்த்தர் மோசேக்குக் கற்பித்ததை எல்லாம் பண்ணினான்.

௨௩ அவனோடேகூடத் தாண்கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப் சூட்சவேலைசெய்கிற தொழிலாளியும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், மெல்லிய பஞ்சுநூலாலும், சித்திரத்தையல் வேலைசெய்கிறவனுமாயிருந்தான்.

௨௪ ¶ பரிசுத்தஸ்தலத்தின் வேலைக்கெல்லாம் அசைவாட்டும் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டு, செலவான பொன்னெல்லாம் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாலே இருபத்தொன்பது தாலந்தும் எழுநூற்றுமுப்பது சேக்கல் நிறையுமாயிருந்தன.

௨௫ ¶ சபையில் எண்ணப்பட்டவர்களின் வெள்ளி பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலால் நூறுதாலந்தும், ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்து சேக்கலுமாயிருந்தது.

௨௬ அதேதெனில் எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வந்த இருபது வயதுமுதல்கொண்டு மேல்தரமான அறுநூற்றுமூவாயிரத்தைந்நூற்றைம்பதுபேர்களில் ஒவ்வொரு தலைக்காகப் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாலே அரைச் சேக்கல் விழுக்காடு சேர்ந்தது.

௨௭ வெள்ளியில் நூறுதாலந்து பரிசுத்தஸ்தலத்தின் கால்களையும் திரையின் கால்களையும் வார்ப்பிக்கிறதற்குச் செலவாயிற்று;

காலுக்கு ஒரு தாலந்து விழுக்காடு நூறு கால்களுக்கு நூறு தாலந்துதானே.

௨௮ ஆனால் அந்த ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்து சேக்கலாலே தூண்களுக்கு வளைவாணிகளைப் பண்ணி, அவைகளின் குமிழ்களைத் தகடுகளால் மூடி, அவைகளுக்கு வளையங்களை உண்டாக்கினான்.

௨௯ ¶ அசைவாட்டும் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலமோவெனில், எழுபது தாலந்தும் இரண்டாயிரத்துநானூறு சேக்கல் நிறையுமாயிருந்தது.

௩௰ அதினாலே ஆசரிப்புக்கூடாரவாசல் மறையின் கால்களையும் வெண்கலப் பலிபீடத்தையும் அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்தின் சகல முட்டுகளையும்,

௩௧ சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் கால்களையும் பிரகாரவாசல் மறையின் கால்களையும் வாசஸ்தலத்தின் சகல முளைக்கூச்சுகளையும் சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தின் சகல முளைக்கூச்சுகளையும் உண்டுபண்ணினான்.

௩௯. அதிகாரம்.

*இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், அவர்கள் பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனைசெய்கிறதற்கு வேண்டிய சிலைகளையும், ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள். *௨ மோ. ௨௮. ௧.

௨ ¶ ஆசாரிய சால்வையைப் பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்சாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணினான்.

௩ பொன்னை இளநீலநூலுக்கும், இரத்தாம்பரநூலுக்கும், சிவப்புநூலுக்கும், மெல்லிய பஞ்சுநூலுக்கும் நடுவே விநோதமாய் நெய்யும்படிக்கு, அதின் தகடுகளை வளர்த்தினார்கள், அவைகளை நூல்களாக அறுத்தான்.

௪ இரண்டு தோளின்மேலும் அதை அதின் இரண்டு முனைகளாலே சேர்த்தார்கள்; அங்கே இணைக்கப்பட்டிருந்தது.

௫ அதின்மேல் அதனோடே ஏகத்துண்டாயிருக்கிற விநோதமான கச்சை, அந்த வேலையாகப் பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி பண்ணப்பட்டது.

௬ ¶ முத்திரைகள் வெட்டப்படுகிற வேலையாக இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைக் கோமேதகக் கல்லுகளில் வெட்டி, சுற்றிலுமிருக்கிற பொன்னில் இவைகளைப் பதித்தவைகள் ஆக்கினார்கள்.

௭ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவைகளை இஸ்ரவேல் புத்திரருக்கான நினைப்புக் கற்களாக ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேலே வைத்தான்..

௮ ¶ ஆசாரிய சால்வையின்வேலைக்கொத்த விநோதவேலையாக மார்ப்பதக்கத்தையும். பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணினான்.

௯ அந்த மார்ப்பதக்கத்தைச் சதுரமும் இரட்டையும் ஒருசாண் நீளமும் ஒருசாண் அகலமுமாக்கி,

௰ அதிலே இரத்தினக் கற்களை நான்கு பத்தி நிறையப் பதித்தார்கள்; முதலாம் பத்திகெம்பும், புஷ்பராகமும், மரகதமும்.

௰௧ இரண்டாம் பத்தி சிவப்புக்கல்லும். நீலக்கல்லும், வயிரமும்,

௰௨ மூன்றும் பத்தி பதமராகமும், வயிடூரியமும், அமெதீஸ்தும்,

௰௩ நான்காம் பத்தி தர்சீஸ் இரத்தினமும். கோமேதகமும், யஸ்பியுமானது; அவைகள் தங்களிடங்களிலே சுற்றும் பொன்னில் பதிக்கப்பட்டிருந்தன.

௰௪ இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரர் நாமங்களின்படியே பன்னிரண்டும் அவர்களுடைய நாமங்களுள்ளவைகளுமாயிருந்தன; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றின் நாமம் ஒவ்வொன்றில் முத்திரை வெட்டாய் வெட்டி இருந்தது.

௰௫ மார்ப்பதக்கத்திற்கென்றுசரிபளவுகளும் முடிச்சுக்குத்திகள் வேலையுமான சரப்பளிகளையும் சுத்தப் பொன்னினாலே பண்ணி,

௰௬ இரண்டு பொன் வளையங்களையும் இரண்டு பொன் மோதிரங்களையும் பண்ணி, இந்த இரண்டு மோதிரங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு மூலைகளில் வைத்து,

௰௭ பொன்னான அந்த இரண்டு முடிச்சுக்குத்திகளை மார்ப்பதக்கத்தின் மூலைகளிலிருக்கிற இரண்டு மோதிரங்களில் மாட்டி,

௰௮ இரண்டு முடிச்சுக்குத்திகளின் இரண்டு நுனிகளை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேல் அதின் முன்புறத்திலிருக்கிற அந்த இரண்டு வளையங்களில் மாட்டிவிட்டார்கள்.

௰௯ பின்னையும் இரண்டு பொன்மோதிரங்களைப்பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையின் கீழ்ப்புறத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தின் மற்ற இரண்டு மூலைகளில் அதின் ஓரத்திற்குள்ளாக வைத்து,

௨௰ வேறே இரண்டு பொன்வளையங்களையும் பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையினுடைய முன்புறத்தின் இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும், ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,

௨௧ மார்ப்பதக்கம் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாக இருக்கும்படிக்கும், ஆசாரிய சால்வையிலிருந்து விட்டுப்போகாதபடிக்கும், அதை அதின் மோதிரங்களால் ஆசாரிய சால்வையின் மோதிரங்களோடே இளநீலமான கயிற்றினாலே பராபரன் மோசேக்குக் கற்பித்தபடியே கட்டினார்கள்.

௨௨ ஆசாரிய சால்வையின் கீழிருக்கும் அங்கியையோவென்றால், முழுவதும் இளநீலநூலால் நெய்தான்.

௨௩ அங்கியின் நடுவில் மார்க்கவசத்தின் வாய்க்கொப்பான அதின் வாயும் அது கிழியாதபடிக்குச் சுற்றிலும் அதற்கான ஓரமுமிருந்தன.

௨௪ அங்கியின்கீழ் ஓரங்களிலே தொங்கத் திரித்த இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலுமான வேலையாக மாதளம்பழங்களைப் பண்ணி,

௨௫ சுத்தப் பொன்னினாலே மணிகளையும் பண்ணி, அந்த மணிகளை அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் மாதளம்பழங்களின் நடுவே தொங்கவைத்தார்கள்.

௨௬ ஆராதனைசெய்ய அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் ஒரு மணியும் ஒரு மாதளம்பழமுமாகக் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே தொங்கி இருக்கத்தானே.

௨௭ ¶ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய பஞ்சுநூல் நெய்தலாக உள்சட்டைகளையும்,

௨௮ பாகையையும், அலங்காரமான குல்லாக்களையும், திரித்த மெல்லியநூல் நெய்தலாகச் சணல்நூல் சல்லடங்களையும்,

௨௯ திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், சித்திரத்தையல் வேலையாக நடுக்கட்டையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள்.

௩௰ ¶ *சுத்தப் பொன்னினாலே பரிசுத்த கிரீடமென்ற பட்டத்தையும் பண்ணி, அதிலே கர்த்தருக்கும் பரிசுத்தம் என்பதை முத்திரை வெட்டாக வெட்டி, *௨ மோ. ௨௮. ௩௬, ௩௭.

௩௧ அதைப் பாகையில் உயரக்கட்டும்படிக்கு, இளநீலமான கயிற்றினாலே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கோத்தார்கள்.

௩௨ இப்படியே ஆசரிப்பின் கூடாரமென்ற வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்திருந்தார்கள்.

௩௩ ¶ பிற்பாடு வாசஸ்தலத்தை மோசேயண்டைக்குக் கொண்டுவந்தார்கள்; கூடாரத்தையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், அதின் துறடுகளையும், அதின் பல

கைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும்,

௩௪ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களின் மூடியையும், தகசுத்தோல்களின் மூடியையும், மறைவின் திரையையும்,

௩௫ சாட்சியின் பெட்டியையும், அதின் வாரைகளையும், கிருபாசனமான மூடியையும்,

௩௬ மேசையையும், அதின் எல்லா முட்டுகளையும், சமுகத்தப்பங்களையும்,

௩௭ சுத்தமான குத்துவிளக்கையும், வரிசையாய் ஆயத்தப்பட்ட அதின் விளக்குகளையும், அதின் எல்லா முட்டுகளையும், வெளிச்சத்திற்கு எண்ணெயையும்,

௩௮ பொன்பீடத்தையும், அபிஷேகத்தெண்ணெயையும், சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசல் மறைவையும்,

௩௯ வெண்கலப் பலிபீடத்தையும், அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும், அதின் வாரைகளையும், அதின் எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமணையையும்,

௪௰ பிரகாரத்தின் வெளியாடைகளையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும், பிரகாரத்து வாசல் மறைவையும், அதின் கயிறுகளையும், அதின் முளைக்கூச்சுகளையும், ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வேலைக்கடுத்த எல்லா முட்டுகளையும்,

௪௧ பரிசுத்த ஸ்தலத்திலே செய்யும் ஆராதனைக்கடுத்த சீலைகளையும், ஆசாரிய ஊழியம் செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும் தானே.

௪௨ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலையையும் செய்திருந்தார்கள்.

௪௩ மோசே எல்லாக் கிரியையையும் பார்த்தான்; இதோ கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள். ஆகையால் மோசே அவர்களை ஆசிர்வதித்தான்.

௪௰. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ முதலாம் மாதம் முதல் தேதியிலே ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை எடுப்பித்து,

௩ அதிலே சாட்சியின் பெட்டியை வைத்து, பெட்டியைத் திரையினால் மறைத்து.

௪ மேசையைக் கொண்டுவந்து, அதின் முஸ்திதை அடுக்கிவைத்து, குத்துவிளக்கைக் கொண்டுவந்து, அதின் விளக்குகளை ஏற்றி,

௫ பொன்தூபபீடத்தைச் சாட்சியின் பெட்டிக்கு முன்பாக வைத்து, வாசஸ்தலத்தின் வாசல் மறைவைத் தூக்கிவைக்கக்கடவாய்.

௬ பிற்பாடு நீ தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடாரமானவாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து,

௭ தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்த்து,

௮ சுற்றிலும் பிரகாரத்தை நிறுத்தி, பிரகார வாசல் மறைவைத் தூக்கிவைத்து,

௯ அபிஷேகத்தெண்ணெயை எடுத்து. வாசல்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, அதை அதின் முட்டுகளோடெல்லாம் பரிசுத்தமாக்கக்கடவாய்; அப்பொழுது பரிசுத்தமாய் இருக்கும்.

௰ தகனபலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய்; அப்பொழுது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான பலிபீடமாய் இருக்கும்.

௰௧ தொட்டியையும் அதின் புரிமணையையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கக்கடவாய்.

௰௨ பிற்பாடு நீ ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரினால் கழுவி,

௰௩ ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்து, நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கி,

௰௪ அவன் குமாரரையும் சேரப்பண்ணி, அவர்களுக்குச் சட்டைகளை உடுத்து,

௰௫ அவர்கள் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவர்களை, அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடி, அபிஷேகம் பண்ணக்கடவாய்; அவர்களுடைய அபிஷேகம் அவர்களுக்கு அவர்களுடைய தலைமுறைகளில் நித்திய ஆசாரியபட்டத்திற்கென்று உண்டாயிருப்பதாக என்றார்.

௰௬ ¶ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி எல்லாம் மோசே செய்தான்.

௰௭ சம்பவித்ததேதென்றால், இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல்தேதியிலே வாசஸ்தலம் எடுப்பிக்கப்பட்டது.

௰௮ அதேதென்றால் மோசே கூடாரத்தை எடுப்பித்தான்; அவன் அதின் கால்களை வைத்து, அதின் பலகைகளை நிறுத்தி, அதின் தாழ்ப்பாள்களைப் பாய்ச்சி, அதின் தூண்களை நிறுத்தி,

௰௯ கூடாரத்தை வாசஸ்தலத்தின்மேல் விரித்து, கூடாரத்தின் மூடியை உயர அதின் மீதில் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி போட்டான்.

௨௰ ¶ அவன் சாட்சியை எடுத்து, அதைப் பெட்டியிலே வைத்து, வாளைகளைப் பெட்டியிலே பாய்ச்சி, கிருபாசனமான மூடியை உயரப் பெட்டியின்மீதில் வைத்து,

௨௧ பெட்டியை வாசஸ்தலத்திலே கொண்டுவந்து, மறைவின் திரையைத் தூக்கிவைத்து, சாட்சியின் பெட்டியைக் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி மறைத்தான்.

௨௨ ¶ பிற்பாடு அவன் மேசையை ஆசரிப்பின் கூடாரத்திலே வாசஸ்தலத்தின் வடபுறமாய்த் திரைக்குப் புறம்பாக வைத்து,

௨௩ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அதின்மேல் கர்த்தருக்கு முன்பாக அப்பத்தை வரிசையாக அடுக்கிவைத்தான்.

௨௪ ¶ பிற்பாடு அவன் குத்துவிளக்கை ஆசரிப்பின் கூடாரத்தில் மேசைக்கு எதிராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே வைத்து,

௨௫ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே விளக்குகளைக் கர்த்தருக்கு முன்பாக ஏற்றினான்.

௨௬ ¶ பிற்பாடு அவன் பொன்பீடத்தை ஆசரிப்பின் கூடாரத்தில் திரைக்கு முன்பாக வைத்து,

௨௭ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அதின்மேல் சுகந்தவர்க்கத்தினாலே தூபம் காட்டினான்.

௨௮ ¶ பிற்பாடு அவன் வாசஸ்தலத்தின் வாசல் மறைவைத் தூக்கிவைத்து,

௨௯ தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாகவைத்து, அதின்மேலே சர்வாங்கதகனபலியையும், காணிக்கையையும் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே செலுத்தினான்.

௩௰ ¶ அவன் தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்த்தான்.

௩௧ அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவினார்கள்.

௩௨ அவர்கள் ஆசரிப்பின் கூடாரத்திற்கு உள்பிரவேசிக்கிறபொழுதும், பலிபீடத்தண்டையில் சேருகிறபொழுதும், அவர்கள் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கழுவிக்கொள்ளவேண்டியது.

௩௩ ¶ பிற்பாடு அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையும் சுற்றிலும் பிரகாரத்தை நிறுத்தி, பிரகாரத்தின் வாசல் மறைவைத் தூக்கிவைத்தான்; இப்படியே மோசே கிரியையை முடித்தான்.

௩௪ ¶ அப்பொழுது *ஒரு மேகம் ஆசரிப்பின் கூடாரத்தை மூடி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

*௪ மோ. ௯. ௰௫. ௧ இரா. ௮. ௰.

௩௫ ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்க மோசேக்குக் கூடாதிருந்தது; ஏனெனில் மேகம் அதின்மேலே தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

௩௬ மேகம் வாசஸ்தலத்திலிருந்து எழும்புகிறபொழுதுதானே, இஸ்ரவேல் புத்திரர்தங்கள் பயணங்களுக்கெல்லாம் புறப்படுவார்கள்.

௩௭ மேகம் எழும்பாதிருந்ததேயானால், அவர்கள் அது எழும்பும் நாள்மட்டும் பயணம்பண்ணாதிருப்பார்கள்.

௩௮ அதேதெனில் இஸ்ரவேல் வீட்டாருடைய எல்லாப் பயணங்களிலும் அவர்கள் எல்லாருடைய கண்களுக்கு முன்பாகப் பகலில் வாசஸ்தலத்தின்மேலே கர்த்தருடைய மேகம் இருந்தது, இரவிலோவென்றால், அக்கினி அதில் இருந்தது.